

லட்சுமி சுதாவின்

# என்னை மயக்கிய மெல்லிசையே



## முன்னுரை

வணக்கம்!

என்னுடைய முப்பதாவது நாவலான 'என்னை மயக்கிய மெல்லிசையே!' மூலம் உங்களை மீண்டும் சந்திப்பதில் எனக்கு மிக மகிழ்ச்சி.

சென்னையைச் சேர்ந்த சம்விதா கல்பாக்கத்திற்குச் செல்ல வேண்டிய நிர்பந்தம். அங்கே அவள் அநன்யாவாக மாறுகிறாள். அதற்கு என்ன காரணம்?

கல்பாக்கத்தில் உள்ள மக்கள் அத்வித் சொல்வதை ஏன் அப்படியே கண்மூடித்தனமாகக் கேட்கிறார்கள்? அதற்கு என்ன காரணம்?

தங்கை சுப்ரியா மேல் உள்ள பாசத்தால் கல்பாக்கத்திற்கு வரும் அபிஷேக், அத்வித்துடன் ஏன் மோதுகிறான்?

சுப்ரியாவிற்கு ஏன் அநன்யா மேல் பொறாமை?

நாவலைப் படியுங்கள். எல்லாவற்றுக்கும் விடை கிடைக்கும்.

என் நாவல்களைத் தொடர்ந்து படித்து, விமர்சனங்களைக் கைபேசி மூலமும், மின்னஞ்சல் மூலமும் தெரிவிக்கும் எல்லா வாசகர்களுக்கும் என் நன்றி!

மீண்டும் சந்திப்போம்.

பிரியமுடன்,

**லட்சுமி சுதா**
lakshmisudha2010@yahoo.com



# என்னை மயக்கிய மெல்லிசையே!

## 1

ஊர்வலம்
போய்க்
கொண்டு
இருக்கின்றது
வானமெனும்
வீதியில்
நட்சத்திரங்கள்!
............
நடுவே
அழகாகப்

பவனி
வருகிறது
தேன்
ஊற்றும்
நிலவு!
............
என்
மனதில்
உன் முகம்
தோன்றுகிறது!

**மே**கங்கள் வானில் ஊர்வலம் போய்க் கொண்டு இருந்தன. இருளும் இல்லாமல் ஒளியும் இல்லாமல் ஒரு பொழுது.

கல்பாக்கத்தை நோக்கி அந்தப் பஸ் சென்று கொண்டு இருந்தது. பஸ்ஸில் இருந்த பயணிகளில் சம்விதாவும் ஒருத்தி. எல்லாம் நல்லபடியாக நடக்கும் என்று தன்னையே தேற்றியபடி அவள் ஸீட்டில் உட்கார்ந்து இருந்தாள்.

எல்லாப் பயணிகளின் முகத்திலும் உற்சாகம், பரபரப்பு, சந்தோஷம் என உணர்ச்சிகள் தென்பட்டன. பயணம் செய்பவர்களுக்குப் பயணம் செய்வதற்கு ஒரு குறிக்கோள் இருக்கும்.

தாயைப் பார்க்கச் செல்லும் மகள், வேலைக்கு நேர்முகத் தேர்வு அட்டெண்ட் செய்யப் பயணம் செய்யும் இளைஞன், கணவனைப் பார்க்கத் தவிக்கும் மனைவி, காதலனைச் சந்திக்க ஆர்வமாக உள்ள காதலி என்று



எத்தனையோ வகையான மனிதர்கள் இந்தப் பஸ்ஸில் இருப்பார்கள்.

ஆனால் என்னைப் போல் வித்தியாசமான காரியத்திற்காகச் செல்லும் நபர் நிச்சயமாக யாரும் இருக்க மாட்டார்கள்.

யோசனையில் மூழ்கி இருந்தவளைக் கலைத்தது கைப்பேசியின் குயில் ஓசை. 'அப்பா அழைக்கிறார்' என்று கைப்பேசியின் திரையில் ஒளிர்ந்தது.

"அப்பா! நம்ம ஒப்பந்தத்தை மறந்திட்டீங்களா நீங்க? அதுக்குள்ள போன் செய்றீங்க. சே... கொஞ்சம்கூடப் பொறுப்பு என்பதே இல்லை. இப்பவே இப்படி பிஹேவ் செய்யறீங்களே...!" படபடவெனப் பொரிந்தாள் அவள்.

"இல்லைடா... நான் என்ன சொல்றேன்னா..." – எனத் தண்டபாணி முடிக்கும் முன்பு சீறினாள் மகள்.

"அப்பா... ப்ளீஸ்! அடுத்த தடவை நீங்க போன் செஞ்சா நான் எடுக்கவே போறதில்லை!"

"இல்லைடா... செல்லம்... கஷ்டமாயிருக்கு! என்னோட சுயநலத்திற்காக நான் உன்னைப் பலியாக்கறேனோ அப்படின்னு தோணுது!"

"ஓ... காட்! அப்பா, அநாவசியமா எதையாவது யோசிச்சு மண்டையை உடைச்சுக்காதீங்க. நாம இதைப்பத்தி நிறையப் பேசிட்டோம். அதனால மறுபடியும் மறுபடியும் அதையே நாம பேச வேண்டாம். நான் முடிவு செஞ்சா செஞ்சதுதான்.

"அது உங்களுக்கே நல்லாத் தெரியும். அதனால மறுபடியும் என்னைத் தொடர்பு கொள்ள முயற்சி செய்யாதீர்கள். குட் நைட் அப்பா!"

மறுமுனையில் தண்டபாணியிடம் இருந்து பெரு மூச்சுப் பிறந்தது. சம்விதாவின் குணம் அவருக்கு நன்றாகத் தெரியும்.

பிடிவாதத்தின் மறுபெயர் சம்விதா. ஒரு விஷயத்தைத் தீர்மானித்தால் தீர்மானித்ததுதான். மறுபரிசீலனைக்கே இடமே இல்லை அவளைப் பொறுத்தவரை. சின்ன வயது முதலே அவள் பிடிவாதக்காரிதான்.

அவளுடைய சின்ன வயதில் நடந்த நிகழ்ச்சி அவர் மனக்கண்ணில் நிழலாடியது. அப்பொழுது அவளுக்குப் பத்து வயது இருக்கும்.

அவள் நெருங்கிய தோழி நிஷா, சம்விதா தேர்வில் முதல் மதிப்பெண் பெற்றதால் இவளுடன் ஒரு வாரம் பேசவில்லை.

முதலில் அதைப் பற்றிப் பேசிப் புலம்பினாள் சம்விதா. நிஷாதான் ஒவ்வொரு முறையும் முதல் மதிப்பெண் பெற்று முதல் ரேங்க் வாங்குவாள்.

நான் அதை எல்லாம் பெரிது படுத்தியதே இல்லை. படிப்பு வேறு, நட்பு வேறு. இது ஏன் நிஷாவிற்குப் புரியவில்லை? ரொம்ப ஸில்லியாக இருக்கிறது அவள் நடவடிக்கை.

இனிமேல் நான் அவளுடன் ஃபிரெண்டாகவே இருக்கப் போவதில்லை என்று முடிவெடுத்ததைத் தன்னிடம்



சம்விதா சொன்னது நேற்று நடந்தது போல் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டார் அவர்.

தாயில்லாத பெண் என்று செல்லம் கொடுத்து வளர்த்து விட்டேனா...! தத்தளித்தது அவர் மனம். மகள் தன் மேல் எவ்வளவு பாசம் வைத்துள்ளாள்? அதனால்தானே இந்த மாதிரி காரியத்திற்கு ஒத்துக் கொண்டாள் துணிவாக. முகம் கோணாமல் நம்பிக்கையோடு புறப்பட்டுச் சென்ற மகளை நினைத்து அவர் மனம் பாசத்தால் விம்மியது.

தசரதன் சொன்னதால் காட்டிற்குச் சென்றான் காப்பியத் தலைவன் ராமன். ஆனால் நான் சொல்லாமலே, குறிப்பறிந்து என் பிரச்சனையைத் தன் பிரச்சனையாகத் தலை மேல் போட்டுக்கொண்டு கல்பாக்கத்தை நோக்கிப் புறப்பட்ட மகளை நினைத்துக் கண் கலங்கினார் அவர்.

கண்களை மூடிச் செய்ய வேண்டிய வேலைகளை மனக் கண்ணில் உருவகப்படுத்திப் பார்த்தாள் அவள். என்னால் முடியும், எப்படியாவது நான் இதைச் செய்து காட்டுவேன் என்று தனக்குள்ளேயே தீர்மானித்தாள் அவள். அத்வித்தை நான் மாற்றி விடுவேன் என்று சொல்லிக் கொண்டாள் அவள்.

ஒரு பலத்த சப்தம் கேட்க, திடுக்கிட்டுக் கண்களைத் திறந்தாள் அவள். பேருந்து பாலத்தின் அடியில் இருந்த பள்ளத்தை நோக்கித் திசை தெரியாமல் அசுர வேகத்தில் பயணித்துக் கொண்டு இருந்தது.

பேருந்தில் இருந்து கூச்சலும், குழப்பமும் கலந்த குரல்கள் ஒலிக்க, கொஞ்சம் கொஞ்சமாகத் தன் நினைவை இழந்து கொண்டு இருந்தாள் அவள்.

பஸ் ஆற்றில் விழுவதைப் புரிந்து கொண்ட பயணிகள், அதிர்ச்சியில் அலறத் தொடங்கினார்கள். அதற்குப் பின்பு எதுவுமே நினைவுக்கு இல்லை சம்விதாவிற்கு.

கல்பாக்கத்தில் உள்ள புதுப்பட்டணத்தில் உள்ள அந்த மருத்துவமனையில் எமர்ஜென்ஸி பிரிவில் தங்கம் விலை ஏறுவது போல் கிடுகிடுவென நோயாளிகளின் பட்டியல் ஏறத் தொடங்கியது.

"கடவுளே... இந்த மாதிரி ஒரு விபத்து இதுவரை இங்கே ஏற்பட்டதே இல்லை!" - புலம்பினாள் டியூட்டியில் இருந்த நர்ஸ்.

"ஆமாம்... இந்தப் பேருந்து விபத்தால் எவ்வளவு சேதம்?"

"ம்... வண்டியின் பிரேக் பிடிக்கவில்லையா? இல்லை... குறுக்கே வந்த ஆட்டைக் காப்பாற்ற ஓட்டுனர் முயற்சி செய்தாரா என்று தெரியவில்லை... கடவுளுக்குத் தான் வெளிச்சம்!"

"வண்டி ஓட்டியவரைத் தான் கேட்க வேண்டும்."

"ம்... அவர் பிழைப்பாரா?"

"நிலைமை மோசம்தான். ஐ.சி.யூ.வில் தான் இருக்கிறார்."

"அவர் மட்டும் இல்லை... நிறையப் பேர். அந்தப் பேருந்தில் பயணம் செய்தவர்கள் எல்லோருமே அங்கே தான் இருக்கிறார்கள்."

"பாவம்... இந்தப் பேருந்தில் பயணம் செய்ய வேண்டும் என்பது விதி போல..."



"ஆமாம்! நியூஸிலும் அறிவித்து விட்டார்கள். அதனால் உறவினர்கள் வந்து பார்க்க வருவார்கள்."

"சே... வாழ்க்கை எவ்வளவு நிலை இல்லாத ஒன்று... அதை உணர்த்தத்தான் இந்த மாதிரி விபத்துகள் நடக்கின்றதோ என்னவோ...!"

"ம்... இல்லை... நமக்குக் கூடுதல் வேலை தர வேண்டும் என்பதற்காகவோ என்னவோ...!"

"ஏய்... அப்படி எல்லாம் பேசாதே! மருத்துவத் துறை ரொம்பப் புனிதமானது. அதை இந்த மாதிரிக் கொச்சைப் படுத்தற மாதிரிப் பேசாதே!"

"சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன்! அதைப் போய் நீ இவ்வளவு சீரியஸாக எடுத்துக்கிறியே!"

"நீ இங்க புதுசா வேலைக்குச் சேர்ந்திருக்கே! அதான் இப்படி வாய்த் துடுக்காப் பேசற. இதெல்லாம் இந்தப் புதுப்பட்டணத்தில் சரி வராது."

"ஏய்! புதுப்பட்டணம் என்னவோ இந்தியா மேப்பில் உள்ள பழங்குடியினர் இருக்கும் இடம் போல் அல்லவா பேசற...! இது ஒரு டவுன்ஷிப். இங்கே ஸ்கூல், மருத்துவ மனை, மார்க்கெட் என எல்லா வசதிகளும் இருக்கிறது. இங்கே இருந்து மகாபலிபுரம் ரொம்பப் பக்கம். அது பயங்கரமான டூரிஸ்ட் ஸ்பாட். அங்க எவ்வளவோ வெளி நாட்டு மக்கள் தினம் தினம் சுற்றிப் பார்க்க வராங்க.

"ஏதோ அவங்க அளவுக்கு ரொம்ப 'முற்போக்கான சிந்தனை' இல்லாட்டிகூட அட்லீஸ்ட் கட்டுப்பெட்டித் தனமான எண்ணங்கள் இல்லாமல் இருக்கணுமே இந்த டவுன்ஷிப்பில் இருக்கிறவங்களுக்கு..."

"ஏய்... கொஞ்சம் மெதுவாப் பேசு. பெரிய எஜமான் வர்ற டைம் ஆச்சு!"

"எஜமானனா? ரஜினிதானே நடிச்சார் அதில... அவர் வரப் போறாரா?"

"வாயை மூடுடி. உன்னைப் போய் வேலைக்கு வெச்சேனே... என்னைச் சொல்லணும். என் நெருங்கிய தோழின்னு உன்னை இங்க வேலைக்குச் சேர்த்தேன். யானையே தன் தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொண்ட கதை ஆயிடுச்சு!"

"ஹா... ஹா... நீ யானை மாதிரிதான் குண்டாயிட்டே போற தீபா... சரியான பழமொழி தான்."

"உன்னை..." என்று அவளை அடிக்கக் கை ஓங்கினாள் மஞ்சு.

ஆனால் அப்பொழுது அவர்களைக் கடந்து ஒரு ஆறடி இளைஞன் வேகமாகச் சென்றான். மஞ்சுவின் ஓங்கிய கை அப்படியே நின்றது. ஏஸியை மீறி அவள் முகத்தில் வியர்வைப் பூக்கள்.

"சே... இப்படிச் செஞ்சிட்டேனே..." - புலம்பினாள் அவள்.

"என்னடி... தமிழ்ப் படத்தில அப்பப்ப 'ஃப்ரீஸ்' ஷாட் எடுப்பாங்க... ஆடாமல் அசையாமல் ஹீரோவோ... ஹீரோயினோ அதிர்ந்து போய்ச் சிலை போல் நிற்பாங்க. அந்த மாதிரி ஒரு எஃபெக்ட் கொடுக்கற... என்னடி ஆச்சு?"

"ஐயோ... எஜமான் பார்த்துட்டுக் கண்டுக்காமல் போனார் போல... சேச்சே... டியூட்டி நேரத்தில இப்படி ஆயிடுச்சே!"



"ஓ...! அந்த ஆள்தான் எஜமானா?"

"ஏய்...! மரியாதை இல்லாமல் பேசாதே!"

"நீ எஜமான் அப்படின்னு சொன்னவுடன் நான் 'ராம்ராஜ்' விளம்பரத்தில் வர்ற மோகன்லால் மாதிரி வெள்ளைச் சட்டை, வெள்ளை வேஷ்டியில் ஒரு 'படிக்காத பண்ணையாரை' எதிர்பார்த்தேன்.

"ஆனால் ஒரு டி-ஷர்ட்டும், ஜீன்ஸும், ஸ்போர்ட்ஸ் ஷூவும் போட்டுக் கொண்டு 'ஹிர்திக் ரோஷன்' மாதிரி இருப்பார்னு நான் கனவிலும் நினைக்கவில்லை. ஆனால் ஆள் கொஞ்சம் 'உம்'முன்னு இருக்கார். பாவம்... என்ன குறையோ அவருக்கு?"

"ஏய்... நீ இந்த மாதிரி எல்லாம் பேசுறதா இருந்தா மரியாதையா ஊரைப் பார்த்துப் போ. நானே உன் மூட்டை முடிச்செல்லாம் கட்ட உதவி செய்யறேன்."

"சே... சே... என் வாய்தான் எனக்கு எனிமி. நான் இனிமே வாயே திறக்கலை...! நீ ஆச்சு... உன் எஜமான் ஆச்சு!" - என்றபடியே அங்கிருந்து அகன்றாள் அவள்.

அவர்கள் தன்னைப் பற்றிப் பேசிக் கொண்டு இருப்பதை அறியாத அத்வித், சீஃப் டாக்டரிடம் பேசிக் கொண்டு இருந்தான்.

தீபா மட்டும் இல்லை... நிறையப் பெண்களுக்கு அத்வித்தைப் பார்த்தவுடனேயே பிடித்துப் போகும். அவன் உயரம்... உயரத்திற்கேற்ப எடை... அவன் நடவடிக்கைகளில் தெரியும் கம்பீரம்... கண்களில் மின்னும் அலட்சியம்... என்னால் எதையும் சாதிக்க முடியும் என்று தோன்றும் முகபாவம் - இது எல்லாமே அவனை மற்ற ஆண்களில் இருந்து வித்தியாசப்படுத்திக் காட்டும்.

# 2

பூங்காற்றிலே
உன்
மூச்சுக்
காற்றைக்
கண்டு
பிடிக்க
என்னால்
முடியும்
பெண்ணே!
கடற்கரையில்
..........
உன்
பாதச் சுவட்டை
என்னால்
கண்டு
பிடிக்க
முடியும்
பெண்ணே!
என்
ஜீவன் ஓயும்
பொழுது
அருகில்
இருப்பாயா?



"அத்வித்... வரவர இந்தப் பஸ் சப்தத்தைக் கேட்டாலே எனக்கு என்னவோ செய்யுது. மனசு இன்னும் அந்தப் பஸ் விபத்தைத் தாண்டி வேற எங்கேயும் போக மாட்டேங்குது!"

அங்கலாய்த்துக் கொண்டாள் மீனா.

"அம்மா... என்ன செய்யறது? யாருமே இதை எதிர்பார்க்கலை!"

"ம்... பாவம், அந்த டிரைவர் உயிர் பிழைச்சிருக்க மாட்டானா? மத்த எல்லா உயிருக்கும் பகவான் புண்ணி யத்தில் எந்தச் சேதமும் இல்லை!"

"டிரைவருக்குத் தலையில் நல்ல அடிம்மா. டாக்டர்ஸ் எல்லாம் ரொம்பப் போராடிப் பார்த்தாங்க. ஆனால் எந்தப் பயனும் இல்லை. அதோட இன்னும் ஒரு பெண்ணும் ஹாஸ்பிடலில்தான் இருக்கா!"

"ஏய்...! நீ என்கிட்ட இதைப் பற்றி எதுவுமே சொல்லலையே! எப்படி இருக்கா அந்தப் பெண்? விபத்தில் சிக்கின மத்தவங்க எல்லாம் இந்த இருபது நாள் டயத்தில் உறவினர்கள் உதவியோடு வேறு ஆஸ்பத்திரியில் - அவங்க அவங்க சொந்த ஊரில் உள்ள மருத்துவமனை யிலேயே அட்மிட் ஆயிட்டாங்களே! ஏன் இந்தப் பெண் மட்டும் இங்கேயே இருக்கா? அவ நிலைமை சீரியஸா இருக்கா?" - பதட்டமாகக் கேட்டாள் மீனா.

அத்வித் பதில் ஏதும் சொல்லாமல் மௌனமாக இருந்தான். அவனிடமிருந்து பெருமூச்சுப் புறப்பட்டது.

"ஏய் அத்வித்... உன்னைத்தான்டா கேக்கறேன்... சொல்லுடா!"

"ம்... அவளைத் தேடி யாரும் வரவில்லை அம்மா இதுவரை... அதுதான் பிரச்சனை!"

"ஓ... அப்ப அந்தப் பெண்ணைக் கேட்க வேண்டியதுதானே... அவள் குடும்பத்தில் உள்ளவர்களைப் பற்றி!"

"அங்கதான்மா பிரச்சனையே ஆரம்பம்."

"அத்வித்... ஒழுங்கா விளக்கமா என்ன பிராப்ளம் அப்படின்னு சொல்!"

"அம்மா... அந்தப் பெண்ணுக்கு அவள் யார்னே தெரியலை. எதுவும் ஞாபகம் இல்லை. பழசைப் பற்றி ஏதாவது கேட்டால் 'ஙே'ன்னு விழிக்கிறா. அதுதான் என்ன செய்யறதுன்னு தெரியலை. டாக்டரும் என்ன செய்யற துன்னு புரியாமல் தவிச்சுண்டு இருக்கார். இந்தக் கேஸ் கொஞ்சம் வித்தியாசமாத்தான் இருக்கு!"

"அடப் பாவமே! இது என்ன கஷ்டம்? சினிமாவில வர்ற மாதிரி இருக்கே!"

"ம்... சில பேரின் வாழ்க்கையோடு கண்டிப்பா சினிமாவின் கதை ஒத்துப் போகும். நடைமுறையில் இருக் கிறதுதானே சினிமாவில் காட்டுறாங்க."

"சரி... அந்தப் பெண்ணைத் தேடிண்டு யாரும் வரலையா?"

"இதுவரை யாரும் வரலை!"

"தலையில ஏதாவது அடிபட்டு இருக்குமோ ஒரு வேளை! அதனாலதான் அவளுக்கு ஞாபகம் இல்லையோ என்னவோ?"



"அதெல்லாம் ஏதும் இல்லை அம்மா! ஸ்கேன் எல்லாம் எடுத்துப் பார்த்தாச்சு. எல்லாமே நார்மலாத்தான் இருக்கு. பட்... அவளுக்குத் தன்னைப் பற்றிய விவரங்கள் ஏதும் தெரியவில்லை."

"நான் ஒரு மக்கு. நீ ஒரு டாக்டர். அதை மறந்திட்டு ஏதோ விவரம் தெரியாத ஆளிடம் பேசற மாதிரி உன்கிட்டப் பேசறேன். சரி... அந்தப் பெண் பெயர் என்ன? தனக்குத் தேவையானதை எல்லாம் அவ எப்படிச் சொல்றா? ஜாடை மாடையாப் பேசறாளா?"

அத்வித்தின் இதழ்களில் புன்முறுவல் படர்ந்தது. அம்மா சினிமாவில் வர்ற காட்சி மாதிரி எல்லாமே இருக்கும்னு நினைக்கறா போல எனத் தனக்குள்ளேயே நினைத்துச் சிரித்துக் கொண்டான்.

"அம்மா... அவளுக்குத் தன்னைப் பற்றிய விவரங்கள் மட்டும்தான் ஞாபகம் இல்லை. ஆனால் நல்லா தயக்கம் இல்லாமல் தமிழில் பேசுறா. தமிழ் மட்டும் இல்லை. நல்ல துல்லியமான ஆங்கிலமும் பேசுறா!

"இந்த நோய்க்கு அம்னீஷியான்னு பெயர். இந்த நோயால் பாதிக்கப்பட்டவங்களுக்கு... அவங்க பெயர், ஊர், சொந்தங்கள் பெயர், படித்த கல்லூரி, பள்ளி என எதுவுமே ஞாபகம் இருக்காது. ஆனால் நல்லாப் பேசுவார்கள். அவர்கள் வேலை எல்லாம் அவர்களே செய்து கொள் வார்கள். ரொம்ப அப்நார்மலா எந்தப் பிஹேவியரும் இருக்காது. மனவளர்ச்சி குன்றி இருக்காது. தே ஆர் வெரி நார்மல்!"

"நீ சொன்னப்புறம்தான் ஞாபகம் வருது. அரசியல் வாதிகள் அப்பப்ப எதிர்க்கட்சியில் இருக்கிறவங்களுக்கு

'செலக்டிவ் அம்னீஷியா' வந்திடுது அப்படின்னு குற்றம் சுமத்துவாங்க. பால் விலை, பெட்ரோல் விலை, பஸ் கட்டண உயர்வு இதெல்லாம் கவர்ன்மெண்ட் அறிவித்தவுடனேயே எதிர்க் கட்சியில் இருக்கிறவங்க உடனே அந்த விலை ஏற்றத்தைக் கண்டித்துக் குரல் கொடுப்பாங்க.

"உடனே கவர்ன்மெண்ட் எதிர்க் கட்டசியில் இருப்பவர் களுக்கு 'செலக்டிவ் அம்னீஷியா' வந்திடுச்சு போல... அப்படின்னு சொல்லுவாங்க. ஏன்னா அவங்க ஆட்சியில இருந்த பொழுது அவங்க அதே விலை ஏற்றத்தைச் செஞ்சிருப்பாங்க. சரிதானே, 'செலக்டிவ் அம்னீஷியா'ங்கற பெயர்."

"அம்மா... கலக்கறீங்க போங்க!"

"டேய்... கிண்டல் எல்லாம் இருக்கட்டும். அந்தப் பெண் பாவம்டா. பெயர்கூடத் தெரியாமல்... புது இடம், புது மனுஷங்க... சே... ரொம்பப் பாவம்டா!"

"ம்... அவளுக்கு உலகமே புதுசுதான்மா. எல்லா மனுஷங்களுமே புதுசுதான். பழைய முகம் என அவள் வாழ்க்கையில் எதுவுமே இல்லை - அவள் முகம் உட்பட."

"ம்... கேக்கவே கஷ்டமா இருக்குடா... இவ்வளவு நாளா நீ இதைப் பற்றி என்கிட்ட மூச்சே விடலை பார்த்தியா?"

"அப்படி எல்லாம் ஏதும் இல்லைம்மா!" - என்று இழுத்தான் அவன்.

"தெரியும்டா... உனக்குப் பெண் என்றாலே அலர்ஜி, எரிச்சல், கோபம் எல்லாம் சேர்ந்து கிளம்பும். அதனாலே



இவளைப் பற்றி என்கிட்ட சொல்லாமல் விட்டுட்ட... அப்படித் தானே!"

அத்வித் மௌனமாக இருந்தான். சில கேள்வி களுக்குப் பதில் சொல்வதைவிட சும்மா இருப்பதுதான் உத்தமம் என்பது அவன் நம்பிக்கை. அதனால் அவன் அமைதியாக இருந்தான்.

"ஆமாம்... உடனே மௌனச் சாமியாரா மாறிடு. சரி... அந்தப் பெண்ணை என்ன செய்வதாக உத்தேசம்? ஏதாவது யோசனை செஞ்சியா?"

"அம்மா! நீ என்ன கேக்கற... எனக்குப் புரியலை!"

"ஆமாண்டா... இதெல்லாம் புரியாது. பெரிய டாக்டர் ஆச்சே நீ!"

"அம்மா! சுத்தி வளைச்சுப் பேசாம சொல்ல வந்ததைப் பட்டுன்னு சொல்லுங்க."

"அந்தப் பெண்ணைத் தேடிண்டு யாரும் வரலை. அவளுக்கும் எந்த ஞாபகமும் இல்லை. அதனால எவ்வளவு நாள் அவள் ஹாஸ்பிடலில் பேஷண்ட் மாதிரி தேவை இல்லாம இருக்கணும்?"

அம்மாவின் கேள்வி அவனை யோசிக்க வைத்தது. அம்மா சொல்வது உண்மைதான். அவள் பேஷண்ட் இல்லை. அவள் உடல் நிலையில் எந்தப் பிரச்சனையும் இல்லை.

சும்மா ஹாஸ்பிடல் ரூமில் நான்கு சுவர்களுக்கு உள்ளே அவள் ஏன் அடைந்து கிடக்க வேண்டும்? நர்ஸ், டாக்டர், வார்ட்பாய் முகங்களைப் பார்த்துக் கொண்டு ஏன் பொழுதைக் கடத்த வேண்டும்?

"என்னடா... யோசனை பலமா இருக்கு!"

"ம்... நீ சொல்ற பாயிண்ட் ரொம்பச் சரி. ஸாரி... நான் அந்தக் கோணத்திலே யோசிக்கவே இல்லை அம்மா!"

"அவ பொண்ணுன்னு தெரிந்தவுடனேயே உன் மூளையின் ஒரு அறை உனக்குத் தெரியாமலேயே மூடிக் கொண்டு இருக்கும். நீ என்ன செய்வ... பாவம்! உன்னைச் சொல்லிக் குற்றம் இல்லை..." என்று வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல் ஏற்றினாள் மீனா.

அத்வித் மீண்டும் மௌனமானான்.

"சரிடா... அந்தப் பெண்ணை முதலில் ஹாஸ்பிடலில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யற வழியைப் பார்."

"டிஸ்சார்ஜ் செஞ்சு எங்க அனுப்பறது? ம்... வேணும்னா இப்படிச் செய்யலாமா?"

"எப்படிச் செய்யலாம்?"

"பேப்பரில் விளம்பரம் கொடுக்கலாமா? அவள் போட்டோவைப் போட்டு விளம்பரம் கொடுக்கலாம். அவளுக்குத் தெரிந்தவர்கள் யாராவது நம்மைத் தொடர்பு கொள்ள வாய்ப்பு இருக்கு!"

"ம்... ஐடியா நல்லா இருக்கு. பட் ஒரு பிரச்சனை இருக்கு!"

"என்ன பிரச்சனைம்மா?"

"அந்தப் பெண்ணைத் தெரியாதவங்ககூட நம்மளைத் தொடர்பு கொள்ள முயற்சி செய்யலாம். சம்பந்தப்பட்டு இருப்பது பெண் என்பதால் நாம ஜாக்கிரதையா இருக் கணும். அதோடு சட்டுன்னு அந்தப் பெண்ணை நாம யார்



பொறுப்பிலும் நம்பி அனுப்பிச்சுட முடியாது. காலம் கெட்டுக் கிடக்குது அத்வித்.

"அந்தப் பெண்ணே அடையாளம் காட்டி, இவர் என் சொந்தம் அப்படின்னு சொன்னால் கூட நாம ஆதாரம் எல்லாம் வாங்கிப் பார்த்திட்டு யோசிச்சுதான்டா முடிவு செய்யணும்!"

அம்மா இவ்வளவு யோசிப்பது அவனுக்கு ஆச்சரிய மாக இருந்தது. அம்மா படித்தது என்னவோ ஐந்தாவது வரைதான். ஆனால் அனுபவ அறிவு, வாழ்க்கைக்குத் தேவையான அறிவு அவளிடம் அதிகமாக இருக்கிறது என்று அவனுக்குப் புரிந்தது.

"ம்... புரியுது. அதுக்காக அவளை நம்ம வீட்டுக்கா அழைச்சிட்டு வர முடியும்?" என்றான் குத்தலாக.

"ஏன்... அழைச்சிட்டு வந்தால் என்ன? அதில் எந்தத் தப்பும் இல்லையே!"

அத்வித்திற்கு அவளை வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வருவதில் துளிகூட இஷ்டம் இல்லை. எப்படித் தட்டிக் கழிக்கலாம் எனப் புரியாமல் திணறினான் அவன்.

"ம்... அவள் என்ன மதமோ, என்ன ஜாதியோ தெரியலையே!" சென்டிமெண்ட் நங்கூரத்தைப் பாய்ச்சினான் அவன்.

"அத்வித்... அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியது நான்தான். நானே அதைப்பற்றிக் கவலைப்படவில்லை!" - என்று அவன் அஸ்திரத்தைத் தவிடுபொடியாக்கினாள் மீனா.

"அம்மா! எனக்கு இதில் உடன்பாடு இல்லை."

"ஏன்டா... உனக்கு என்ன தயக்கம்?"

"இல்லைம்மா... இது சரி வராது!"

"அதுதான் ஏன்னு கேக்கறேன்?"

"இல்லை... அந்தப் பெண்... ஏஜ் கம்மியா இருக்கும். ஐ மீன் பார்த்தா அப்படித்தான் தெரியறது!" - அதுக்கு மேல் தொடர முடியாமல் சங்கடமாக அம்மாவைப் பார்த்தான் அவன்.

"கம்மின்னா... பத்து வயசா...? பதினாறு வயசா?" - வேண்டும் என்றே சீண்டினாள் மகனை.

"அம்மா... ஷி இஸ் நாட் இன் டீன் ஏஜ்... இருபது வயசுக்கு மேல இருக்கும்."

"ஓ! அதனால் என்ன?"

"அம்மா... அவ நம்ம வீட்டில இருந்தா யாராவது என்னைத் தப்பாப் பேசுவாங்க. எனக்கு இதெல்லாம் பிடிக்கலை!"

"நீ மத்தவங்களுக்காகப் பயப்படறியா? இல்ல... உன்னைக் கண்டு உனக்குப் பயமா? புரியலை அத்வித். உன் மனசில் அவளைப் பற்றி ஏதோ தப்பான எண்ணம் இருக்கு! அதான் நீ தயங்கற!"

"அம்மா! சே... சே... என்ன இப்படிப் பேசறீங்க?"

"இல்ல அத்வித்... நீ அந்தப் பெண்ணைப் பற்றி எதுவுமே என்னிடம் சொல்லவில்லை. இவ்வளவு நாளா என்கிட்ட அதை மறைச்சிருக்க. அதனால எனக்கு உன் மேலதான் சந்தேகமா இருக்கு. அந்தப் பெண்ணை



ஹாஸ்பிடலிலேயே பிணைக் கைதி மாதிரி வெச்சு... ஏதாவது செய்யத் திட்டம் போடறியோ என்னவோ?"

"அம்மா! வாயை மூடுங்கள்!" - கோபத்தால் அத்வித்தின் முகம் சிவந்து போனது. கண்களில் தீப்பொறி பறந்தது.

எப்படிச் சொன்னால் மகனிடம் காரியத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்பதை அறிந்து வைத்து இருந்தாள் மீனா.

"அத்வித்... சும்மா கோபப்படாதே. நான் அந்தப் பெண்ணை உடனே சந்திக்கணும்!"

"ஸோ... உங்களுக்கு என் மேல் நம்பிக்கை இல்லை. உங்கள் மகன் மேல் நம்பிக்கை இல்லை. ஒரு ஊர் பெயர் தெரியாத பெண் சொல்வதை வைத்துக்கொண்டு உங்கள் மகனைப் பற்றித் தெரிந்து கொள்ளப் போகிறீர்கள். வாவ்... என்ன ஒரு தாய்ப் பாசம்!" - குத்தலாக ஒலித்தது அவன் குரல்.

"நீ என்ன வேண்டுமானாலும் சொல்... ஆனால் நான் என் முடிவை மாற்றிக்கொள்ள மாட்டேன்." - தீர்மானமாக ஒலித்தது மீனாவின் குரல்.

## 3

'நான்
இங்கு
சுகமே!
நீ
அங்கு
சுகமா?'

என்று
பொய்யாகக்
கடிதம்
எழுத
என்னால்
முடியவில்லை!
நீ
இல்லாமல்
பொழுது
நீளமாக
..........
முடிவே
இல்லாமல்
..........
எப்பொழுது
முடியும்
சொல், பெண்ணே!

**ஹா**ஸ்பிடலில் படுத்திருந்த அந்தப் பெண்ணைப் பார்க்கப் பாவமாக இருந்தது மீனாவிற்கு. அழகான, மாசு மருவற்ற முகம். பெரிய கண்கள், வடிவான நாசி, சிவந்த அதரங்கள், கோதுமை நிறத்தில் கதகதவென மின்னியது ஹாஸ்பிடல் உடையில் சிக்காத அவள் கைகள்.

அவள் இதயத் துடிப்பை உணர்த்திக் கொண்டு இருந்தது ஒரு இயந்திரம். குழப்பத்துடன் அவர்களைப் பார்த்தாள் சம்விதா.

"என்னம்மா... உடம்பு இப்ப எப்படி இருக்கு?" - ஆதரவாக வினவினாள் மீனா.



தனக்கும் அதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பது போல் விட்டேத்தியாகக் கைகளை மார்புக்குக் குறுக்கே கட்டியபடி தள்ளி நின்று கொண்டு இருந்தான் அத்வித். அவன் முகம் இறுகி இருந்தது.

"உடம்புக்கு எந்தக் குறைவும் இல்லை... பட்... பட் நான் யாருன்னே எனக்குத் தெரியலை! ஐயாம் லாஸ்ட்... ரொம்ப யோசிச்சுப் பார்த்துட்டேன். ஆனால் ஒரு விவரமும் ஞாபகம் வர மாட்டேங்குது.

"ரொம்பக் கோபமா வருது என் மேலேயே... இந்த மாதிரி நிலையில் இருப்பதற்குப் பதிலாக நான்... நான் இறந்தே போயிருக்கலாம் அந்த விபத்தில்!" - சுய பச்சாதாபத்தால் அவள் கண்களில் இருந்து கண்ணீர் அருவி போல் பெருகியது.

"அச்சோ... என்னம்மா... நீ இப்படி எல்லாம் விரக்தியாப் பேசற! சின்ன வயசு உனக்கு. இன்னும் வாழ்க்கையில் அனுபவிக்க வேண்டிய விஷயங்கள் எவ்வளவோ இருக்கு. இப்படி மனம் வெறுத்துப் போய்ப் பேசினால் எப்படி?

"நான் இருக்கிறேன் உனக்கு! நீ உடம்பு கொஞ்சம் தேறியவுடன் நம்ம வீட்டிலேயே இருக்கலாம். உனக்கு எந்தக் கவலையும் வேண்டாம். அநாவசியமா மனசைப் போட்டு அலட்டிக்காதே! நீ பத்திரமான இடத்திற்குத்தான் வந்து சேர்ந்து இருக்க. அதை மட்டும் ஞாபகம் வெச்சுக்கோ!" - என்று அவள் நெற்றியில் இருந்த தலை முடியை ஆதரவாக ஒதுக்கி விட்டாள் மீனா.

"ரொம்ப நன்றிம்மா! நீங்க யார்? உங்க பெயர் என்ன?"

"என் பெயர் மீனா! இந்த ஹாஸ்பிடலை நிறுவி நிர்வாகம் செய்வது என் மகன்தான். பெயர் அத்வித். அத்வித்... இங்க வா... வந்து ஹலோ சொல்லு இவளுக்கு!"

"கமான் அம்மா! என்னை ஏற்கெனவே அவங்களுக்குத் தெரியும்."

"அது டாக்டர் என்ற முறையில்... ஆனால் நான் இப்பச் சொல்றது என் மகன் என்ற முறையில்...!"

"சரிம்மா! உன் ஆசையைக் கெடுப்பானேன்?" - என்றவன் அவள் அருகே வந்தான்.

"ஹலோ! ஐயாம் அத்வித். இவங்களோட ஒரே மகன்." - என்றான் லேசான புன்முறுவலோடு.

"ஹலோ! நான்... நான்... ஐயாம் ஸாரி... என் பெயர்கூட எனக்கு ஞாபகம் வரவில்லை!" - என்று இயலாமை பொங்கக் கீழ் உதட்டைப் பற்களால் அழுத்தினாள் அவள்.

அவள் முகத்தில் தெரிந்த பரிதாப உணர்ச்சி, அத்வித்திற்குப் பார்க்கவே என்னவோ போல் இருந்தது.

"ம்... புரியுது உங்கள் மனநிலை எனக்கு! கொஞ்சம் பொறுமையாக இருங்கள். ரிலாக்ஸ்டாக இருங்கள். உங்கள் தலையில் எந்த அடியும் இல்லை. சி.டி. ஸ்கேன் இஸ் ஓ.கே. கண்டிப்பா உங்களுக்கு ஞாபகம் வரும். டோண்ட் ஒர்ரி..."

"ம்... தேங்க்ஸ் டாக்டர்! எப்ப டாக்டர் ஞாபகம் வரும்? ஐ மீன் ரொம்ப நாளாகுமா?"

சின்னக் குழந்தை போல் அவள் விழிகள் அகலக் கேட்டது அவனுக்கு என்னவோ போல் இருந்தது.



"ம்... எப்ப வேண்டுமானாலும் வரலாம். இன்னிக்கு... நாளைக்கு... ஒரு மாதம் கழித்து..."

"வராமலே போக வாய்ப்பு இருக்கா டாக்டர்?"

"நீங்க அதைப் பற்றியே ரொம்ப யோசிக்காதீங்க. ரொம்ப ஸ்ட்ரெயின் செய்ய வேண்டாம்."

"சரி டாக்டர்... அப்புறம் என்னைத் தேடிண்டு யாராவது வந்தாங்களா?" ஆர்வம் தெறித்தது அவள் குரலில்.

"இல்லை... இதுவரை யாரும் வரலை!"

"ஓ! அப்படியா?" உற்சாகமின்றி ஒலித்தது அவள் குரல்.

"நீங்க ரொம்ப டயர்டா ஃபீல் செய்யறீங்கன்னு நினைக்கிறேன். டேக் ரெஸ்ட்!"

"ஏன் டாக்டர் பொய் சொல்றீங்க? இங்க இருந்தா நான் உங்களைக் கேள்வி மேல் கேள்வி கேட்டுக் கொண்டு இருப்பேன். அதில் இருந்து தப்பிக்கத்தானே இப்படி எல்லாம் சொல்றீங்க? திஸ் இஸ் எஸ்கேப்பிஸம். துரதிர்ஷ்டவசமா இந்தியாவில் இது எல்லா இடத்திலேயும் இருக்கு.

"எங்க பார் லஞ்சம்! அதை எதிர்த்துப் போராட எவ்வளவு பேர் முன் வர்றோம்? அன்னா ஹசாரே வந்தார்... கிரண் பேடி வந்தாங்க... ஆனால் மத்தப் பெரும்பான்மை யான மக்கள் எதிலேயும் ஆர்வம் காட்டுவதில்லை... எஸ்கேப்பிஸம்..." - வெறுப்பாகப் பேசினாள் அவள்.

அவன் விழிகளில் ஆச்சரியம் மின்னியது. சமூகத்தின் மேல் இவளுக்கு அக்கறையும் இருக்கிறது... கோபமும் இருக்கிறது அதே நேரத்தில்.

கண்டிப்பாக இவள் மேல்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்தவளாக இருக்க மாட்டாள். அவர்களுக்குப் பார்ட்டி, கிளப் என்றே நேரம் போய் விடும்.

கீழ்த்தட்டு மக்களுக்கு இதில் எல்லாம் கவனம் செலுத்த முடியாதபடி அன்றாடக் கவலைகள் ஆட்டிப் படைக்கும். அதனால் இவள் பொருளாதார நிலைமையைப் பொறுத்த வரை 'மிடில் கிளாஸ்', இல்லை... 'அப்பர் மிடில் கிளாஸை'ச் சேர்ந்தவளாகத்தான் இருப்பாள்.

அவன் மனம் உறுதியாக நம்பியது.

"என்ன டாக்டர் அமைதியாயிட்டீங்க? நான் இருக்கிற நிலைமையில என் பேச்சு அதிகப்படியாத் தோணுதா உங்களுக்கு?"

"நோ... நோ... நீங்க பேசியது ரொம்ப யதார்த்தமா, இயல்பா இருந்தது."

"ஓ...! தேங்க்ஸ்! அதை வெச்சு நான் யாராயிருப்பேன் அப்படின்னு மனதில் சின்னதா யோசனை ஓடியிருக்குமே!"

"யெஸ்... யூ ஆர் ரைட்! ம்... ம்... அடுத்தவங்க மனசில என்ன யோசனை ஓடுதுன்னு அப்படியே கரெக்டா சொல்றீங்க. தட்ஸ் குட்!"

"ம்... அடுத்தவங்க மனசில இருக்கிறதை எல்லாம் பற்றித் தெரிஞ்சு என்ன பிரயோஜனம் டாக்டர் ஸார்! மைண்ட் ரீடிங் இஸ் நோ யூஸ். என்னைப் பற்றி எதுவுமே எனக்குத் தெரியலையே டாக்டர்?"

அவள் மீண்டும் நத்தை போல் தன் கூட்டிற்குள் சுருங்க முயற்சி செய்கிறாள் என்று அவனுக்குப் புரிந்தது.



அவன் அவளைப் பார்த்துச் சிநேகமாகச் சிரித்தான்.

"உங்ககூடப் பேசிக்கொண்டே இருந்தால் நேரம் போவதே தெரியவில்லை. பட்... எனக்கெனச் சில கடமைகள் உள்ளன. அதனால் நான் இப்ப இங்க இருந்து கிளம்பணும்."

"ஓ...! ஸாரி டாக்டர். உங்க எல்லார் டயத்தையும் வேஸ்ட் செஞ்சிட்டேன்."

"அதெல்லாம் ஒன்னும் இல்ல... அத்வித்தும் நீயும் பேசிக் கொண்டு இருந்தது ரொம்ப சுவாரசியமாக இருந்தது. அத்வித்... சீக்கிரமா நம்ம வீட்டுக்கு இவளை அழைச்சிட்டுப் போகணும்!"

"அம்மா! அது... வந்து..."

"டாக்டருக்கு இதில் விருப்பம் இல்லை மேடம். அதனால வேண்டாம். நான்... இங்கேயே இருக்கிறேன். ஓ... ஸாரி... இது ஹாஸ்பிடல்... என்னால இங்க தங்க முடியாது. எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா ப்ளீஸ்!"

"சொல்லுங்க... என்ன வேண்டும்?"

"எ... எனக்கு ஏதாவது வேலை கிடைக்குமா இங்கேயே! என்னிடம் சர்டிபிகேட் எதுவும் இல்லை. ஆனால் என்னால் வேலை செய்ய முடியும். ஐ திங்க் ஐ கேன் வொர்க். ப்ளீஸ்... வேலை செய்யப் போற இடத்திலேயே தங்கற வசதி இருந்தா பெட்டர்!"

"அநன்யா... உனக்கு நான் வேலை தரேன். எங்க வீட்டிலேயே நீ தங்கலாம். உனக்குப் பாதுகாப்பாகவும் இருக்கும்!" – என்றாள் மீனா.

"அநன்யாவா? மேடம்... என் பெயர் எப்படி உங்களுக்குத் தெரியும்?" - பதட்டமாகக் கேட்டாள் அவள்.

"நான் இப்ப உனக்கு வெச்ச பெயர்தான் இது. எனக்குப் பெண் குழந்தை எதுவும் இல்லை. ஆனால் பெண் குழந்தை மேல் ரொம்ப ஆசை. அத்வித் பெண்ணாகப் பிறந்திருந்தால் இந்தப் பெயர் வைத்திருப்பேன். அதனால் உனக்கு இந்தப் பெயர்தான் இனிமேல். அத்வித்... நீ எல்லா ரெக்கார்டிலும் இவள் பெயரை 'அநன்யா' அப்படின்னு மாற்றிவிடு. அப்புறம் இவளை எப்ப டிஸ்சார்ஜ் செய்யப் போற?"

"அம்மா! இவ உடல் நிலையில் எந்தக் குறையும் இல்லை!"

"அப்படின்னா இன்னிக்கே டிஸ்சார்ஜ் செய்யலாம் தானே!"

"ம்... யெஸ்..."

"சரி அத்வித். அப்ப அநன்யாவை இன்னிக்கே வீட்டுக்கு அழைச்சிட்டுப் போயிடலாம்."

"ம்... உங்க இஷ்டம்!"

தன்னை வீட்டுக்கு அழைத்துச் செல்வதில் அவனுக்கு விருப்பம் இல்லை என்று அநன்யாவிற்குத் தெளிவாகப் புரிந்தது.

சுயமரியாதை எட்டிப் பார்த்தது. ஆனால் அதைக் கஷ்டப்பட்டு அடக்கினாள் அவள். இனி இதையெல்லாம் பொருட்படுத்தக் கூடாது. முடிவு செய்தாள் அவள்.



# 4

நீ போகும்
பாதையில்
நான்
காத்து
இருக்கிறேன்!
............
கண்ணில்
வெண்ணிலா
பூத்து
இருக்கிறேன்!
............
நிமிடங்கள்
மெதுவாக
நகர்கின்றன!
............
காத்திருந்து
காத்திருந்து
வலித்தது
கால்கள்
அல்ல,
என் மனம்!

"நீ இந்த அறையை உபயோகப்படுத்திக் கொள்ளலாம் அநன்யா."

"ரொம்ப தேங்க்ஸ் மேடம்!"

"என்னை மேடம் என்று அழைப்பதை நிறுத்து. என்னை நீ ஆன்ட்டி என்று அழைக்கலாம்."

"ம்.. உங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலை. உங்களை மாதிரி நல்ல மனசு எல்லாருக்கும் வராது. ஊர், பெயர் தெரியாத எனக்கு உங்க வீட்டிலேயே இடம் கொடுக்கிறீங்களே! என்னோட கெட்ட நேரத்திலும் ஒரு நல்ல நேரம் உங்களை மாதிரிப் பெரியவங்களைச் சந்திக்கிறது."

"சும்மா எதுக்கெடுத்தாலும் நன்றி சொல்றதை நிறுத்து அநன்யா. நீ இந்த வீட்டில் ஒருத்தி. அவ்வளவுதான் என்னால் சொல்ல முடியும். நீயும் அதே மாதிரி நடந்துக்கோ. சும்மா... திரும்பத் திரும்ப என்னைச் சொல்ல வைக்காதே!" - கோபம் கலந்த உரிமையோடு வெளிப்பட்டன வார்த்தைகள்.

"ஆன்ட்டி..." - என்று பேச முடியாமல் கண் கலங்கினாள் அவள்.

"சரி... நீ முதலில் குளிச்சிட்டு ஓய்வு எடு. என்னோட புடவை ஒன்று தருகிறேன். அதை உடுத்திக் கொண்டு வா. அப்புறம் உனக்குத் தேவையான உடைகள் வாங்கலாம்."

"எ... எனக்குப் புடவை எப்படிக் கட்டுவது என்று தெரியாது."

"ஓ! அப்படியா. சரி... சரி... அப்ப உனக்கு முதலில் சில சல்வார் செட்டுகள் வேண்டும். நான் உடனே அத்வித்தை வாங்கச் சொல்கிறேன்."



"அச்சோ... வேண்டாம்!"

"ஏன் அநன்யா? சல்வார் சுலபமாகப் போடலாம்!"

"இல்லை... நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை. பாவம்... அவருக்கு நிறைய வேலைகள் இருக்கும். இடையில் இந்தத் தேவையில்லாத வேலை எல்லாம் எதற்கு அவருக்கு?"

"எது தேவை... எது தேவை இல்லை என்று எனக்குத் தெரியும்!" - என்றபடியே உள்ளே நுழைந்தான் அத்வித்.

அவள் முகத்தில் பயம் தொற்றிக் கொண்டது.

"அத்வித்! இவளுக்கு உடைகள் வாங்க வேண்டும். நீ அவளை அழைத்துக் கொண்டு போய் அவளுக்குப் பிடித்த மாதிரி உடைகளை வாங்கிக் கொடு."

"ஆன்ட்டி... நான் வரவில்லை... ப்ளீஸ்!"

"அநன்யா... இன்னும் ஒரு மணி நேரம் கழித்துப் போகலாமா? ஒரு எமர்ஜென்ஸி கேஸ் இருக்கு. இன்னும் ஒரு மணி நேரத்தில் என்னை டாக்டர் தொடர்பு கொள்ள வாய்ப்புகள் உண்டு!"

"இல்லை டாக்டர்... எனக்கு உங்களைத் தொந்தரவு செய்யச் சங்கடமாக இருக்கிறது."

"இன்னும் ஒரு மணி நேரம் கழித்துக் கிளம்பலாம். அம்மாவால் காலைத் தொங்கப் போட்டுக்கொண்டு ரொம்ப நேரம் உட்கார முடியாது. இல்லாவிட்டால் அம்மாவே நம்முடன் வருவார்கள். அவர்கள் எங்கேயும் வெளியே போவதில்லை. ரொம்ப அத்தியாவசியமாக இருந்தால்தான் வெளியே போவார்கள்."

அந்த நிலைமையில் நேற்றுத் தன்னைப் பார்ப்பதற்கு ஹாஸ்பிடலுக்கு வந்து இருந்தார்களே என்று அவள் மனம் கரைந்தது.

"ஸாரி ஆன்ட்டி... என்னால் உங்களுக்குச் சிரமம். நேற்று எனக்காக ஹாஸ்பிடலுக்கு வந்தீர்களே!"

"அட... இதில் என்ன இருக்கு அநன்யா! வந்ததால் தானே உன் போன்ற இனிமையான பெண் எனக்குப் பேச்சுத் துணைக்குக் கிடைத்தாள்."

"அம்மா... என்ன ஒரு ஐஸ்... இந்த மாதிரி பேசினாலே போதும், பாதி நோய் குணமாயிடும். நீங்க பேசாமல் டாக்டருக்குப் படிச்சிருக்கலாம்!"

"ஏய்... கிண்டலா உனக்கு? எங்க அப்பா எங்களை வெளி உலகம் தெரியாம வளர்த்தார். வீட்டுக்கு வந்து மிஸ் பாட டியூஷன் எல்லாம் எடுப்பாங்க. பாட்டு, டான்ஸ் அப்படின்னு அது ஒரு பொற்காலம்!"

"அம்மா! நீங்க இதைப் பேச ஆரம்பிச்சீங்கன்னா நேரம் போறது தெரியாமப் பேசுவீங்களே! நான் எஸ்கேப்!" - என்றபடியே அங்கிருந்து வெளியேறினான் அத்வித்.

மீனாவின் இதழ்களில் புன்னகை படர்ந்தது. தன்னைக் கிண்டல் செய்துவிட்டு வேகமாக ஓடும் மகனை நினைத்துச் சிரிப்பு வந்தது.

"அத்வித் எப்பவும் இப்படித்தான். என்னைக் கேலி செய்யாவிட்டால் அவனுக்குத் தூக்கமே வராது. எப்படா சான்ஸ் கிடைக்கும்னு காத்துக்கிட்டு இருப்பான்."

"உங்களுக்கு இவர் ஒரே பையனா ஆன்ட்டி?"



"ம்... ஆமாம். இவன் பத்து வயசாகும் பொழுது அத்வித்தின் அப்பா ஒரு விஷக் காய்ச்சல் வந்து இறந்து விட்டார். எந்த மருத்துவ சிகிச்சையும் அவருக்குப் பலன் அளிக்கவில்லை. பணத்திற்கு எந்தப் பிரச்சனையும் இல்லாததால், எல்லா ட்ரீட்மெண்ட்டும் செஞ்சு பார்த்தோம். ஆனால் பலன் துளிகூட இல்லை.

"அப்பவே அத்வித் டாக்டர் படிப்புதான் படிக்கணும் அப்படின்னு முடிவு செஞ்சான். நல்லா தீவிரமாகப் படிச்சான். எந்த சிபாரிசும் இல்லாமல் தானாக மெரிட்டில் அவனுக்கு மருத்துவ சீட் கிடைத்தது. அப்புறம் வெளிநாட்டில் மேற் படிப்பு படித்தான். ம்... இங்கு வந்து பத்து வருஷம் ஆகுது. ஹாஸ்பிடலைக் கட்டி, நிர்வகிக்கிறான். எல்லாத்துக்கும் காரணம் டாக்டர் ஆகித் தன்னால் முடிந்ததை மற்றவர் களுக்கு உதவணும் என்கிற எண்ணம்தான்!"

"நல்ல எண்ணம்தானே ஆன்ட்டி! இப்ப நிறைய இளைஞர்கள் இந்த மாதிரி இருக்கிறதில்லை!"

"நல்ல எண்ணம்தான்! ஆனால் நிறைய விஷயங்களில் பிடிவாதம் அதிகம்... குறிப்பா..." - என்று அவள் முடிக்கும் முன்பு அத்வித்தின் குரல் உள்ளே இருந்து ஒலித்தது.

"அம்மா! என் ப்ளூ டி-ஷர்ட் எங்கே? அயர்ன் செய்யக் கொடுத்தீங்களா?"

"இல்லையேடா! அங்கதான் இருக்கும் உன் கப்போர்டில். இரு வரேன்!"

மீனா உள்ளே சென்றவுடன், அத்வித் நடந்து கொள்வதை நினைத்துச் சிரித்துக் கொண்டாள் அநன்யா.

தன்னைப் பற்றி விமர்சிப்பதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல்தான் அத்வித் ஏதோ ஒரு காரணத்தை வைத்து அம்மாவை உள்ளே வரச் சொல்கிறான் என்பது அவளுக்குப் புரிந்தது.

அடுத்த முப்பது நிமிடங்கள் மீனா அவளுக்கு வீட்டைச் சுற்றிக் காட்ட ஏற்பாடு செய்ததால் அதில் கழிந்தது.

வீட்டைத் துப்புரவாகத் தூசு, ஒட்டடை இல்லாமல் வைத்து இருப்பதற்குக் காரணம் செல்வி என்று அவளுக்குப் புரிந்தது.

"என்னம்மா... வீடெல்லாம் புடிச்சிருக்கா?"

"ம்... ரொம்ப நீட்டா இருக்கு எல்லா இடமும். அதற்குக் காரணம் நீங்கதான். ரொம்ப நல்லா வீட்டை மெயின்டெயின் செய்யறீங்க செல்வி!"

"அட என்னம்மா... என்னைப் போய் வாங்க போங்க அப்படின்னு கூப்பிட்டுக் காமெடி பண்றீங்க?"

"ம்... உங்களுக்கு என்னைவிட வயசு கண்டிப்பா ஜாஸ்தியாத்தான் இருக்கும். அதனாலே உங்களுக்கு மரியாதை கொடுக்கிறதில் தப்பு இல்லை!"

"ம்... வயசு கிடக்குது. அது கழுதைக்கு ஆன மாதிரி ஆகுது. அது முக்கியம் இல்லை. நான் சாதாரண வேலை பார்க்கிறவ. எனக்குப் போய் மரியாதை எல்லாம் எதுக்கு?"

"செய்யற தொழிலில் உயர்வு தாழ்வு இல்லவே இல்லை செல்வி. நீங்க 'வசூல் ராஜா எம்.பி.பி.எஸ்.' படம் பார்த்திருக்கீங்களா?"



"ஆங்... கமல் ஸார் படம் ஆச்சே மேடம்! ஒரே காமெடிதான். நல்லா இருந்தது. தூள் கிளப்பிட்டார் தலைவர்!"

"ம்... அந்தப் படத்தில் கமல், துப்புரவுத் தொழிலாளியைக் கட்டிப் பிடிச்சுப் பாட்டெல்லாம் பாடுவார். நீங்க ஒரு நாள் வரலைன்னா இந்த ஹாஸ்பிடலே படு கேவலமா மாறிடும். நீங்கதான் இந்த ஹாஸ்பிடல் துப்புரவா இருக்கக் காரணம்... அப்படின்னு சொல்வார். ஞாபகம் இருக்கா?"

"ஆங்... ஞாபகம் இருக்கு மேடம். நல்லா பினாயில், டெட்டால் எல்லாம் பக்கெட்டு தண்ணீரில் ஊற்றி... சும்மா தலைவரே ஷோக்கா 'மாப்' செய்வாரே!"

"ம்... இப்பப் புரியுதா நான் என்ன சொல்றேன்னு. அதனால... செய்யற வேலையைக் குறைவா மதிப்பிடாதீங்க!"

"எங்க ஐயாவும் அப்படித்தான் சொல்வார். அவரை மாதிரியே நீங்களும் பேசறீங்களே...!"

"ஓ...! அப்படியா? எனக்கு அது தெரியாது."

"ம்... என்ன இப்படிச் சொல்லிட்டீங்க... ஐயாவுக்கு ரொம்பப் பெரிய மனசு. வெளிநாட்டில் எம்புட்டுப் பெரிய படிப்பு எல்லாம் படிச்சிருக்காங்க. ஆனாலும் துளிகூட பந்தா கிடையாது.

"இந்த டவுன்-ஷிப் இந்த மாதிரி நிலைமையில இருக்கறதுக்கு ஐயாதான் காரணம்."

"என்ன நிலைமை செல்வி?"

"அடி ஆத்தி... என்ன இப்படிச் சொல்லிட்டீங்க? ஐயா இந்த டவுன்-ஷிப்பிற்காக எவ்வளவோ செஞ்சிருக்கார்."

"ஹாஸ்பிடல்தானே கட்டி இருக்கார்..." - அவளைச் சீண்டுவது என முடிவு செய்தாள் அநன்யா.

"என்ன இப்படிச் சொல்லிட்டீங்க? இந்த ஊர்ல பள்ளிக்கூடம், படிக்கிறதுக்காக இடம், குழந்தைங்க விளையாடப் பூங்கா என எத்தனையோ வசதிங்க செஞ்சி கொடுத்து இருக்கார். அது மட்டும் இல்லை... இன்னொரு பெரிய விஷயம் இருக்கு! அது என்ன தெரியுமா?"

"ம்... சொன்னால்தானே தெரியும்!"

"என்ன இப்படிச் சொல்லிட்டீங்க... அது என்னன்னா...?"

"அநன்யா... போகலாமா?"

"வணக்கம் ஸார்..." - என்று மரியாதையாக அவனைப் பார்த்துக் கும்பிட்டாள் செல்வி.

"ம்... வணக்கம் செல்வி! இவங்களை நான் கொஞ்சம் வெளியே அழைச்சிட்டுப் போகணும். நீங்க சரின்னா நான் அழைச்சிட்டுப் போவேன்!" - என்றான் தன்மையாக, பணிவாக அவன்.

"ஐயா... என்ன இப்படிச் சொல்லிட்டீங்க?"

"ம்... நீங்க இதைச் சொல்லணும்னுதான் நான் எதிர்பார்த்தேன். அதான் அப்படிச் சொன்னேன்!"

"அடக் கடவுளே! நான் இப்படி ஏமாந்து போயிட்டேனே!" - எனச் செல்வி கன்னத்தில் கை வைத்து



உட்கார்ந்து இருக்க, சிரித்தபடியே அங்கு இருந்து புறப்பட்டனர் இருவரும்.

"ஸோ... செல்வியை உங்களுக்கும் பிடித்து விட்டதா?" - என்றான் காரை ஷெட்டில் இருந்து எடுத்தபடியே அவன்.

"ம்... ரொம்ப இன்னஸென்ட்... 'என்ன இப்படிச் சொல்லிட்டீங்க?' அப்படின்னு அவங்க சொல்றதைக் கேக்கறதுக்காகவே அவங்களைச் சீண்டுவேன்."

"ஓ... பரவாயில்லையே! நானும் அப்பப்ப அப்படிச் செய்வேன். நீங்களும் என்னை மாதிரியே செய்யறீங்களே?"

"டாக்டர்... ஒரு சின்ன ரிக்வெஸ்ட்..."

"என்ன... சொல்லுங்க!"

"நீங்க என்னை ஒருமையிலேயே கூப்பிடலாம். நான் உங்களைவிடச் சின்னவளாத்தான் இருப்பேன்."

"ஓ... ஓ.கே. ஆனால் எப்படி நீங்க உறுதியாச் சொல்றீங்க?"

"எதை டாக்டர்?"

"ம்... என்னோட நீங்க வயசு கம்மின்னு...!"

அவள் முகம் சட்டென வாடியது.

"ஹலோ! உடனே நீங்க மறுபடியும் யோசனையில் மூழ்காதீங்க. நான் சும்மா பேச்சுக்குத்தான் கேட்டேன். கண்டிப்பா நீங்க... ஸாரி... நீ என்னோட கம்பேர் செஞ்சா சின்னப் பெண்தான்!"

"ம்... நீங்க எப்படி உறுதியாச் சொல்றீங்க?"

"சிம்பிள்... என் காதோரம் நரை முடி தலைகாட்ட ஆரம்பிச்சிடுச்சு. ஆனால் உங்கள் காதோரம் ஜிமிக்கிதான் ஆடுது." – என்றான் சிரித்தபடியே.

அவனின் யதார்த்தப் பதிலைக் கேட்டு அவளும் சிரித்தாள்.

"ஏன் டாக்டர்... நான் தலைமுடிக்குச் சாயம் கூடப் போட்டு இருக்கலாமே!"

"ம்... நாட் பேட். வித்தியாசமான யோசனைதான்... ஆனால் சான்ஸ் இல்லை!"

"ஏன்?"

"நீ இங்க வந்து ஒரு மாசம் கிட்ட ஆகப் போகுது. போதாக்குறைக்கு முப்பது அடி பாலத்தில் இருந்து விழுந்த நீ தண்ணீரில் வேறு கொஞ்ச நேரம் இருந்து இருக்கிறாய். அதற்குள் 'நீலச் சாயம் வெளுத்துப் போச்சு டும்... டும்... டும்... ராஜா வேஷம் கலைஞ்சு போச்சு டும்... டும்... டும்...' அப்படின்னு பாட வேண்டி வந்திருக்கும்... நீ சாயம் போட்டு இருந்தால்...!" – என்றான் சிரித்தபடியே.

அவள் அதைக் கேட்டுக் கலகலவெனச் சிரித்தாள்.

"டாக்டர், பிரேக் போடுங்க... அங்க பாருங்க, அந்த இனோவா கார்... ஆக்ஸிடெண்ட் போல...!" என்று கத்தினாள் அவள்.

"ஓ... காட்... வா பார்க்கலாம்!" – என்றபடியே இறங்கினான் அத்வித்.

அவனைப் பின் தொடர்ந்தாள் அநன்யா. அந்த இனோவாவில் இருந்து இறங்கியவனைப் பார்த்து அதிர்ந்தான் அத்வித்.



# 5

தென்றல்
தாலாட்டும்
அழகான
மாலைப்
பொழுது!
..........
பச்சைப்
புல்
மெத்தையில்
நான்
உட்கார்ந்து
இருக்கிறேன்!
..............
பூக்கள்
என்
அருகே
தலை
கவிழ்ந்து
நிலத்தைப்
பார்த்தபடி!
நான்
உனக்காகக்
காத்திருக்கிறேன்!

**"நீ**... நீ இங்க எப்படி அபிஷேக்? ஹவ் ஆர் யூ?"

"ஆஹா... என் தங்கையைத் தவிக்க விட்டு விட்டு என்ன ஒரு போலியான கரிசனம் உனக்கு?" - சிடுசிடுத்தான் அந்தப் புதியவன்.

"அநாவசியப் பேச்சு வேண்டாம். உன் காருக்கு ஏதோ விபத்து என்று நாங்கள் பதறிப் போய் இறங்கினோம்."

"ஓ... என் தங்கையைப் பற்றிய பேச்சு உனக்கு அநாவசியமாக இருக்கிறதா? அப்படித்தான் இருக்கும். ஏனெனில் உன்னுடைய டைம்-பாஸிற்கு இப்பொழுது இன்னொரு அழகான பெண் கிடைத்து விட்டாளே!" - என்ற படியே அவனைப் பார்வையால் அளந்தபடியே வெறுப்பை உமிழ்ந்தான் அபிஷேக்.

"அபிஷேக்... வார்த்தையை அளந்து பேசு!"

"ஏய்! உன்னிடம் பேசுவதே என் போதாத நேரம். என் தங்கைக்காக நான் பொறுத்துக் கொண்டு இருக்கிறேன்."

"ஆமாம்! என்ன ஒரு பாசம் தங்கை மேல்...!"

"ஏய்... உன்னை..." - என்று அவன் சட்டைக் காலரைக் கொத்தாய்ப் பிடித்தான் அபிஷேக்.

"வேண்டாம்... ப்ளீஸ்! அவரை விட்டு விடுங்கள்!" - என்று அபிஷேக்கின் கையைப் பிடித்துக் கெஞ்சினாள் அநன்யா.

"சே... ஒரு பெண்ணைக் காட்டித் தப்பிக்க வழி செய்து கொள்கிறாயே! உன்னை என்னவென்று சொல்வது?"

"ப்ளீஸ்! உங்களுக்கு இடையே என்ன பிரச்சனை என்று எனக்குத் தெரியாது. ஆனால் எதுவானாலும் ரோடில் வைத்துப் பேச வேண்டாம்!"



"பரவாயில்லையே! உன் புதுக் காதலிக்கு இந்த மாதிரி நல்ல விஷயம் எல்லாம் தெரிந்து இருக்கிறதே!"

அநன்யாவின் முகம் சிவந்தது.

"மிஸ்டர்... மரியாதையாகப் பேசுங்கள்!"

"என்னடி செய்வ? நான் இப்படித்தான் பேசுவேன்."

"ம்... நீங்கள் நினைப்பதெல்லாம் தப்பு. நீங்கள் சொல்வதை எல்லாம் நான் ஏற்றுக் கொள்ள முடியாது. அதனால் உங்கள் எனெர்ஜிதான் வேஸ்ட் ஆகிறது. உங்களுக்கு அது பரவாயில்லை என்றால் எனக்கும் பரவா யில்லை!"

அபிஷேக் அவளை முறைத்தான்.

"அநன்யா சொல்வதில் அர்த்தம் இருக்கிறது, அபிஷேக்!"

"ஓ... இவள் சொல்வதெல்லாம் உனக்குச் சரியாகத் தெரியுமே! ஜாடிக்கு ஏற்ற மூடி!"

"டாக்டர்... இவரிடம் பேச வேண்டாம். நாம் போகலாம்... வாங்க!"

"என் தங்கையின் வாழ்க்கைக்கு ஒரு முடிவு தெரியாமல் உங்களால் போக முடியாது."

வழியை மறித்தான் அபிஷேக். என்ன செய்வது என்று புரியாமல் திகைத்தான் அத்வித்.

"சரி அபிஷேக். வா... வீட்டுக்குப் போய்ப் பேசலாம்!"

"ம்... இது பரவாயில்லை. வழியில் என்னை எங்காவது உருட்டி விட்டு விடலாம் என்ற எண்ணம் இருக்குமே!"

"நான் ஒரு டாக்டர். நீ அதை மறந்து விடாதே. மக்களின் உயிரைக் காப்பதுதான் என் பொறுப்பு."

"ஆஹா... பேச்செல்லாம் நன்றாக இருக்கிறது. இந்த டாக்டர்தானே என் தங்கையின் உயிரைக் கொல்லாமல் கொல்வது?"

"அபிஷேக்... முடிவு செய்தது உன் தங்கை!"

"அதைச் செய்யத் தூண்டியது நீ!"

இருவரும் காரசாரமாகப் பேசிக்கொண்டு வருவதைக் கவனித்தாள் அநன்யா. அபிஷேக்கிற்கும், அத்வித்திற்கும் என்ன பிரச்சனை என்று தெரியவில்லை.

இருவருக்கும் ஏதோ பலத்த சண்டை வரும் அளவிற்குப் பெரிய விவகாரம் கண்டிப்பாக உள்ளது. அபிஷேக்கின் தங்கைக்கும், டாக்டருக்கும் என்ன உறவு? ஏன் இதைப் பற்றித் தன்னிடம் மீனா மேடம் எதுவும் சொல்லவில்லை? ஒருவேளை அவர்களுக்கே தெரியாதா? அதனால்தான் சும்மா ஏதும் சொல்லாமல் விட்டு விட்டார் களா?

தன்னிடம் அதைப் பற்றிப் பேசுவதற்கான தேவை இல்லை. அதனால்கூட அவர்கள் சும்மா இருந்து இருக் கலாம். தனக்குள்ளேயே பேசிக் கொண்டாள் அவள்.

"அபிஷேக்... நீங்க வீட்டுக்கு வாங்க. நாம் பேசலாம். எனக்கு நேரம் ஆகிறது!" - என்றான் பொறுமை இழந்த அத்வித்.

"தெரியுமே எனக்கு... உனக்கு இந்தப் பெண்ணோட பேசணும். அதுதானே இப்போ உன்னோட முக்கியமான வேலை... சே... கடலை போடணும்!"



"ஆமாம்! அப்படித்தான் வெச்சுக்கோ!"

"டாக்டர்... நீங்க..." - என்று அவள் முடிக்கும் முன்பு அத்வித் குறுக்கிட்டான்.

"வா... அநன்யா! நாம கிளம்பலாம்!" - என்றவன், வேகமாக அங்கு இருந்து நடந்தான்.

வேறு வழியின்றி அவனைப் பின் தொடர்ந்தாள் அநன்யா. காரைக் கிளப்பினான் அத்வித். கார் சீறிப் பாய்ந்தது. அங்கு ஒரு கனத்த மௌனம் பரவியது.

"என்ன அநன்யா! எதுவும் பேசமாட்டேங்கற? ஏதாவது கேள்!"

"இல்லை டாக்டர்! அது உங்க சொந்த விஷயம். நான் அதில் தலையிடுவது நன்றாக இருக்காது."

"உன்னுடைய நாகரிகத்தை நான் பாராட்டறேன். பட்... நான் இதைப் பற்றி யாரிடமாவது பேசணும். இந்த விஷயம் என்னைப் பற்றி மட்டும் சம்பந்தப்பட்டது இல்லை!"

"ஓ...! அப்படியா?"

"ம்... சுப்ரியா என்ற பெண்ணும் இதில் சம்பந்தப்பட்டு இருக்கிறாள்."

"ஓ...! அப்படியா?"

"ம்... யெஸ்! சுப்ரியாவும் நானும் சந்தித்துக் கொண்டது ரொம்ப ரொம்பவே சுவாரசியமான ஒன்று!"

"ம்..."

"நானும் என் ஃபிரெண்ட் ஒருவனும் பெங்களூரில் ஒரு கான்பெரன்ஸிற்காக லீலா பேலஸ்ஸில் தங்கி

இருந்தோம். அது ஐந்து நட்சத்திரக் குறியீடு பெற்ற ஹோட்டல். அன்று டின்னர் முடித்துவிட்டு நாங்கள் அறையில் உட்கார்ந்து தொலைக்காட்சியில் கிரிக்கெட் பார்த்துக் கொண்டு இருந்தோம்.

"அப்பொழுது பக்கத்து அறையிலிருந்து ஒரு பெண் அழும் குரல் கேட்டது. இன்னொரு பெண் அவளைச் சமாதானப்படுத்துவது கேட்டது."

"ஓ! டீவியின் சப்தத்தை மீறிப் பக்கத்து அறையிலிருந்து பேச்சுக் குரல் சப்தம் கேட்டதா?"

"ஆமாம்! மைக் வைத்துப் பேசுவது போல் நன்றாகக் கேட்டது."

"ம்... அப்புறம்?"

"ஒரு பெண் குரல், 'நான் இனி உயிரோடு இருப்பதே அவசியம் இல்லாத ஒன்று. என்னால் யாருக்கும் எந்தப் பயனும் இல்லை!' என்று தெளிவாகக் கேட்டது."

"ஓ... காட்!"

"நாங்களும் இப்படித்தான் பதறினோம். என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டு இருந்தோம். அதற்குள் இன்னொரு பெண் குரல் கோபமாக ஒலித்தது. 'சே... நீ இவ்வளவு கோழையாக இருப்பாய் என நான் கனவிலும் நினைக்கவில்லை. உயிரின் அருமை உனக்குத் தெரியவில்லை. அதனால்தான்டி இப்படிப் பேசற... போ... என்ன வேணுமானாலும் செய்து கொள்!'

"அப்ப அழுகையினுடே மீண்டும் அந்தப் பெண் குரல். 'உனக்கும் என் மேல் அக்கறை இல்லை... அவ்வளவுதான்! நான்... நான்...'



"அதற்கு மேல் அந்தப் பெண்ணின் குரல் எங்களுக்குக் கேட்கவில்லை. நானும் என் நண்பனும் வேகமாகப் பக்கத்து அறையை நோக்கி ஓடினோம். காலிங் பெல்லை அழுத்தினோம். பொறுமை இன்றி அறைக் கதவைத் தட்டினோம்."

"ஓ...! கதவைத் திறக்கவில்லையா...? அப்புறம்?"

"ம்... சில நொடிகள் கழித்துக் கதவு திறந்தது. அங்கே ஒரு இளம் பெண் நின்று கொண்டு இருந்தாள்."

"ஓ...! அவங்கதான் சுப்ரியாவா?"

"யெஸ்! 'என்ன வேணும் உங்களுக்கு? ஏன் இப்படிப் பொறுமை இல்லாமல் கதவைத் தட்டறீங்க?' படபடத்தாள் அவள்."

"அந்த இன்னொரு பெண் உங்ககிட்ட பேசும் நிலைமையில் இல்லையோ?"

அதைக் கேட்டு அத்வித் சிரித்தான். புரியாமல் விழித்தாள் அநன்யா.

"இன்னொரு பெண்ணே அங்கு இல்லை!"

"வாட்...?"

"ம்... ஒரு நாடக ஒத்திகைக்கு சுப்ரியா 'டயலாக்' பேசிப் பழகிக் கொண்டு இருந்தாள். கடைசி நிமிஷத்தில் அவள் இரண்டு 'ஆர்டிஸ்ட்'டிற்குக் குரல் கொடுக்க வேண்டிய நிர்பந்தம் போல. அதனாலே அவள் தீவிரமாகப் பேசிப் பழகிக் கொண்டு இருந்தாள்."

"ஓ...! இதைக் கேட்டவுடன் உங்கள் முகத்திலும் உங்கள் பிரெண்ட் முகத்திலும் டன் அசடு வழிந்திருக்குமே!"

"ஆமாம்! ஒரு காலேஜ் படிக்கும் பெண் முன்பு அசடு மாதிரி ஏமாந்து விட்டோமே என்று எனக்கு அவமானமாக இருந்தது."

"ம்... என்னால் புரிந்து கொள்ள முடிகிறது உங்கள் உணர்வுகளை!"

"ஆனால் அதற்குப் பின்பு சுப்ரியாவும், நானும் நல்ல ஃபிரெண்ட்ஸாகப் பழகினோம். கைப்பேசி, இ-மெயில், சாட் என எங்கள் நட்பு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது."

"பரவாயில்லையே! வித்தியாசமாக ஆரம்பித்து இருக்கிறது உங்கள் சந்திப்பு!"

"ம்... சுப்ரியா கணினியை விருப்பப் பாடமாக இன்ஜினியரிங்கில் எடுத்ததால் சுலபமாக கேம்பஸ் இண்டர் வியூ மூலம் வேலை கிடைத்தது. பன்னாட்டுக் கம்பெனியில் நல்ல சம்பளத்துடன். ஏ.ஸி.யிலேயே எப்பொழுதும் இருக்க வேண்டிய ஒயிட் காலர் வேலை."

"ம்... நீங்க டாக்டர்! வொயிட் கோட் உங்கள் உயிர். அவங்களுக்கு வொயிட் காலர் வேலை. பரவா யில்லையே...!"

அத்வித்தின் இதழ்களில் புன்னகை பரவியது.

"ம்... சுப்ரியாவிற்கு நிறைய ஃபாரின் வாய்ப்புகள் வந்தன. ஐந்து வருடத்தில் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான், சிங்கப்பூர், மலேசியா என நிறைய இடங்களுக்கு வேலை நிமித்தம் அவள் சென்று வருவதற்கு வாய்ப்புகள் வந்தன.



"அவளும் அதைப் பயன்படுத்திக் கொண்டாள். ஆனால் எங்கு இருந்தாலும் எங்களுக்குள் இருந்த நட்பு சிதையாமல் வளர்ந்து கொண்டே வந்தது."

"ம்... பரவாயில்லையே! வெறும் நட்பு மட்டும்தானா? அதைத் தாண்டி உங்கள் இருவர் இடையே எந்த எண்ணமும் இல்லையா? ஸாரி டாக்டர்... உங்கள் பெர்சனல் வாழ்க்கையில் மூக்கை நுழைப்பதற்கு!"

"உண்டு. ஆனால் இல்லை அநன்யா. என்ன சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. நானும் சுப்ரியாவும் மணிக்கணக்கில் பேசிக் கொண்டு இருப்போம் கைப்பேசியில். அவள் வேலையில் நடந்த சுவாரசியமான, வித்தியாசமான அனுபவங்களை என்னிடம் பகிர்ந்து கொள்வாள்.

"நானும் ஹாஸ்பிடலில் நடக்கும் சர்ஜரி பற்றி, பேஷண்ட் பற்றி அவளிடம் பேசிக் கொண்டு இருப்பேன். எங்கள் இருவர் இடையே ஏதோ ஈர்ப்பு இருந்தது உண்மையே!

"ஆனால் யார் அதை வெளியிடுவது என்று தயக்கம். தயக்கத்தைக் காட்டிலும் பயம் என்றுகூடச் சொல்லலாம். சொன்ன பின்பு, அன்பை வெளிப்படுத்திய பின்பு மறுத்து விட்டால் என்ன செய்வது என்ற எண்ணம் மனதைக் கரையான் போல் அரிக்க, ஆசையை மனதில் வைத்துக் கொண்டு திணறிக் கொண்டு மௌனமாக இருந்தேன் நான்."

"அவங்க மௌனத்தை உடைச்சிட்டாங்களா?"

"யெஸ்... தைரியமாகத் தன் காதலை என்னிடம் சொன்னாள் சுப்ரியா!"

அநன்யா விழிகள் அகல, அவன் முகத்தைப் பார்த்தபடி அமர்ந்து இருந்தாள்.

## 6

கற்பனை
கரை
புரண்டு
வெள்ளமாக
ஓடுகிறது!
..........
என்
கைகள்
நீண்டு
விண்ணைத்
தீண்டுகின்றன!
..........
அந்த
வானவில்
எனக்கு
ஊர்தியாக!
..........
மேலே
மேலே
போக



உதவி
செய்கிறது!
..........
நீ வந்த பிறகு
கற்பனை ஏராளம்!

"பெரும்பாலும் ஆண்கள்தான் ப்ரபோஸ் செய்வார்கள். பட், சுப்ரியா உங்ககிட்ட ரொம்பத் தைரியமா தன் விருப்பத்தைச் சொன்னாங்களே... நீங்க அப்புறம் என்ன செஞ்சீங்க? ஒத்துக்கிட்டீங்களா? சம்மதம் என்று சொல்லி விட்டீங்களா?"

"ம்... எனக்குச் சுப்ரியாவைப் பிடித்ததற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அவள் படபடவெனப் பேசுவதா? அவள் இயல்பாக என்னிடம் பழகிய முறையா? அவளின் அழகா? எதுவென்று தெரியவில்லை. ஆனால் ஏதோ ஒன்று... ஒரு அன்புக் கயிறு என்னை அவளுடன் பிணைத்தது உண்மைதான்.

"அவள் வெட்கப்பட்டு ஓடவில்லை. என்னைப் பார்த்து, என் முகத்தைப் பார்த்துத் தைரியமாக மனதில் இருப்பதைப் பட்டெனச் சொன்னாள். அது எனக்கு ரொம்பவே பிடித்தது."

"ம்... அவங்க கண்டிப்பா வித்தியாசமான பெண்தான். சினிமாவில் வரும் கதாநாயகி போலப் பாவாடை தாவணி உடுத்திக் கொண்டு, ஒற்றை ஜடையைத் திருகியபடி, கால் கட்டை விரலால் தரையில் கோலம் போட்டுக் கொண்டு, முகம் நிறைய வெட்கத்தைச் சுமந்து கொண்டு இருக்கும் கிராமத்துப் பெண் இல்லை!"

"அட... உங்களுக்கு இதைப் பற்றி எல்லாம்கூடத் தெரிந்து இருக்கிறதே! அதோடு இன்னொரு கொசுறு விஷயம்..."

"என்ன டாக்டர்... சொல்லுங்க!"

"இப்பவெல்லாம் கிராமங்கள் ரொம்பவே முன்னேறி விட்டன. கிராமத்துப் பெண்கள் எல்லாம் நாகரிகமாகத்தான் இருக்கிறார்கள். தொலைக்காட்சி போன்ற ஊடகங்களின் ஆக்கிரமிப்பாலா, இல்லை கிராமத்தில் இருந்து நகரத்திற்குக் குடிபெயர்ந்தவர்களோடு சேர்ந்து இருப்பதாலா? என்ன காரணம் என்று தெரியவில்லை. அதனால் இப்ப பெண்கள் யாரும் வெட்கப்பட்டுக் கொண்டு, அம்மாவின் முந்தானை பின் ஒளிந்து கொள்வதில்லை!"

"ஆனால் திரைப்படங்களில் அப்படித்தானே இன்னும் பெண்களைக் காட்டுகிறார்கள்."

"அது ரொம்ப ரொம்ப அரிதாக எங்கோ ஒரு மூலையில் வேண்டுமானால் நடக்கலாம். அதனால்தான் கிராமத்துப் பின்னணியை மட்டுமே வைத்துப் படம் எடுத்து வந்த பாரதிராஜா ரிடையர் ஆகிவிட்டார் போல."

"இருக்கலாம்... மண்வாசனை, வேதம் புதிது இதெல்லாம் எவ்வளவு அழகான, உயிரோட்டம் நிரம்பிய படங்கள்."

"ம்... அநன்யா... உங்களுக்கு அதெல்லாம் ஞாபகம் இருக்கிறது... குட்!"

"எது தேவையோ அது ஞாபகம் இல்லை டாக்டர். என்ன செய்வது?"



"இப்ப ஷாப்பிங் செய்யலாம், வாங்க..."

"சுப்ரியா கதையைப் பாதியில் நிறுத்திட்டீங்க!"

"ம்... ஒரு சிறிய இடைவெளிக்குப் பின்பு கதை தொடரும்..." – என்றான் சிரித்தபடியே அவன்.

"ஓ... இதுதான் ஷாப்பிங் ஏரியாவா?"

"ம்... எங்க ஊரில் இதுதான் பிரபலமான இடம்!"

"ஓ... அப்படியா டாக்டர்?"

"ஆமாம்! இங்கே எல்லாமே இருக்கும். குழந்தைகள் மற்றும் பெண்களுக்குத் தேவையான எல்லாமே இருக்கும்."

"டாக்டர்... நீங்க செய்யற உதவிக்கு ரொம்ப நன்றி! என்னிடம் பணம் எதுவும் இல்லை. இதை வாங்கிக் கொள்ள எனக்குத் தயக்கமாக இருக்கிறது."

"ம்... புரிகிறது அநன்யா. இப்படிச் செய்யலாமே!"

"எப்படி டாக்டர்?"

"அம்மா எப்படியும் உனக்கு வேலைக்கான பணத்தைச் சம்பளமாகத் தருவார்கள். அதில் இருந்து இந்தச் செலவுக்கு ஆன பணத்தைப் பிடித்துவிட்டு, மிச்சத்தைக் கொடுக்கச் சொல்லி விடலாம். ஓ.கே.வா இந்த ஐடியா?"

"ம்... தேங்க்ஸ் டாக்டர்!" – என்றவளின் முகத்தில் நிம்மதி ரேகைகள் தெரிந்தன.

"சரி அநன்யா! நீ உனக்குத் தேவையானதை வாங்கிக் கொண்டு வா. நான் இந்தப் பக்கம் அம்மாவிற்கு வேண்டியது ஏதாவது இருக்கிறதா என்று பார்க்கிறேன்."

"சரி டாக்டர்!" – என்றவள் கடையினுள் சென்றாள்.

பெண்கள் உடை விஷயத்தில் தலையிடாமல் கண்ணியமாக விலகிய அத்வித் மேல் அவளுக்கு மரியாதை அதிகமானது.

நான்கு சல்வார் செட், உள்ளாடைகள், க்ளிப், ரப்பர் பேண்ட் என ரொம்ப அவசியமானவற்றை மட்டுமே வாங்கிக் கொண்டு கடையில் இருந்து வெளியேறினாள்.. பில்லிங் கவுண்டர் அருகே நடந்தாள் அவள்.

அங்கே அபிஷேக் நின்று கொண்டு இருப்பதைப் பார்த்தாள் அவள். அவன் முகம் இறுகி இருந்தது. அவளையும் அவள் கூடையில் வைத்து இருந்த பொருட் களையும் மாறிப் மாறிப் பார்த்தவனின் விழிகளில் கோபம் தீப்பொறி போல் தெரிந்தது.

"சே... வெட்கமாக இல்லை! காசுக்காகவும், உடைக்காகவும் அத்வித் பின்னால் அலையறியே! அதுவும் 'எல்லா ஆடைகளுக்கும்' பணம் கொடுக்க உனக்கு அத்வித் தான் கிடைத்தானா?"

அநன்யாவின் முகம் அவமானத்தால் சிவந்தது. கூடையில் இருந்த அட்டைப் பெட்டியை வைத்து உள்ளாடை என்பதைக் கண்டு பிடித்து விட்டான் என்பதை நினைத்த வுடன் அவள் முகம் சுருங்கியது.

அவள் விழிகள் அத்வித்தைத் தேடின. கோபம் அவள் உடல் முழுவதும் தீப் போல் பரவியது.

"என்னடி... கேட்கிறேன். பதில் சொல்லாமல் நிற்கிறாய்? யார் நீ? உனக்கும் அத்வித்திற்கும் என்ன உறவு?"



அவள் அவன் முகத்தைப் பார்த்தாள். தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு பேசத் தொடங்கினாள்.

"அதுதான் நீங்களே சொன்னீங்களே... காசிற்காகவும், உடைக்காகவும் டாக்டர் பின்னால் அலைபவள் என்று. அப்புறம் எதற்காக என்னிடம் மீண்டும் கேட்கிறீர்கள்?"

"ஏய்... திமிரா உனக்கு? யார் நீ?"

"அது அவளுக்கே தெரியாது அபிஷேக்!" – என்று பின்னால் இருந்து அத்வித்தின் குரல் கேட்க, திடுக்கிட்டுத் திரும்பினாள் அநன்யா.

"டாக்டர்... இவர்..." – என்று அவள் முடிக்கும் முன்பு குறுக்கிட்டான் அபிஷேக்.

"என்னடி... அத்வித் கிட்ட என்னைப் போட்டுக் கொடுக்கப் போறியா?"

"அபிஷேக்... ப்ளீஸ்! அநன்யாவைப் பற்றி நான் உன்னிடம் சொல்கிறேன். ஒரு ஐந்து நிமிஷம் டைம் கொடு."

"சரி...!" – என்றான் வேண்டா வெறுப்பாக அபிஷேக்.

அநன்யா தேர்வு செய்தவற்றுக்கு உண்டான தொகையைக் கவுண்டரில் கொடுத்து விட்டு அபிஷேக் பக்கம் திரும்பினான்.

"வீட்டுக்கு அநன்யா செல்ல நான் ஏற்பாடு செய்துவிட்டு வருகிறேன்."

"இந்தக் கடையில் உள்ள முதலாளி எனக்குத் தெரியும். டிரைவரை அனுப்பச் சொல்றேன். அவள் உன் காரில் வீட்டிற்குப் போகட்டும்."

"தேங்க்ஸ்! அநன்யா... டிரைவர் உன்னை வீட்டில் டிராப் செய்வார். நான் அபிஷேக்கிடம் பேச வேண்டும் என்பதால்தான்... ஸாரி! டோண்ட் ஃபீல் பேட்!" - என்றான் சங்கடமாக அவன்.

"பரவாயில்லை டாக்டர்! இதற்கெதற்கு ஸாரி எல்லாம்!" - என்றாள் லேசான புன்னகையோடு அநன்யா.

சிரிக்கும்பொழுது அவள் முகம் ரொம்ப அழகாக இருப்பதைக் கவனித்தான் அபிஷேக். குறிப்பாக அவள் சிவந்த உதடுகள். சட்டென அவள் உதட்டை விரலால் வருட வேண்டும், பின்பு சுவைக்க வேண்டும் என்ற எண்ணம் பூதாகரமாக மனதில் தோன்றியது.

காட்! இவளைப் பார்த்துப் பத்து நிமிடங்கள்கூட ஆகி இருக்காது. அதற்குள் எனக்கு இப்படி ஒரு எண்ணம் தோன்றுகிறதே!

அத்வித்திற்கு எப்படி இருக்கும்...? சே! இவள் ஏன் எந்த ஒப்பனையும் இல்லாத பொழுதும், எளிய உடை யிலும் இவ்வளவு அழகாக இருந்து தொலைக்கிறாள் என்று நினைத்தபடியே அவளை விழுங்குவது போல் பார்த்துக் கொண்டு நின்றான்.

அநன்யா அவன் தன்னைப் பார்ப்பதை உணர்ந் தாள். கோபமும் எரிச்சலும் அதிகமானது. அவள் கண்களில் அது பிரதிபலித்தது.

அபிஷேக்கின் கண்களும் அவள் கண்களும் சந்தித்தன. அவள் கண்களில் கோபம் தெரிந்தது.

அவன் கண்களில் வேட்கை தெரிந்தது.



அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். ஆனாலும் அவன் விழிகள் அவள் முகத்திலேயே பதிந்து இருந்தன.

"அபிஷேக்... டிரைவருக்கு ஏற்பாடு செய்வதாகச் சொன்னீர்களே!" - என்றான் அத்வித்.

"ஓ...! இதோ ஒரு நிமிஷம்!" - என்று சொல்லியபடியே வேகமாகக் கடையின் வாசலை நோக்கி நடந்தான் அபிஷேக்.

இவனுக்குத் திமிர் அதிகம்தான். நல்ல உயரம், உயரத்திற்கேற்ற எடை, வசீகரமான தோற்றம், முரட்டுத் தனம் உடலில் எல்லா செல்களிலும் கொப்புளிக்கிறது. அதனால்தான் திமிரோ!

என்னை யாராலும் எதுவும் செய்து விட முடியாது என்ற அகம்பாவம் அவன் கண்களில் தெரிகிறது என்று அபிஷேக்கைப் பற்றி நினைத்தபடி இருந்தாள் அநன்யா.

"உனக்கு டிரைவர் ரெடி. நீ கிளம்பலாம்!" - என்றான் அபிஷேக்.

"தேங்க்ஸ் டாக்டர்!" - என்று சொல்லிவிட்டு வேகமாக அங்கு இருந்து சென்றாள் அவள்.

எவ்வளவு கொழுப்பு இவளுக்கு? டிரைவரை ஏற்பாடு செய்தது நான்... ஆனால் நன்றி அத்வித்திற்கா என்று அவளைத் திட்டியபடியே நின்றான் அவன்.

"அபிஷேக்! கீழே இருக்கிற ஹோட்டலுக்குப் போக லாமா?"

"ம்... யெஸ்!" - என்றான் விரைப்பாக.

அந்த ஹோட்டல் இருவருக்குமே பழக்கமான இடம். 'அக்னி நட்சத்திரம்' படத்தில் வரும் கார்த்திக் – பிரபு போல் இருவரும் ஒருவரை ஒருவர் மனதில் திட்டிக் கொண்டே ஹோட்டலை நோக்கி நடந்தனர்.

"என்ன ஆர்டர் செய்யட்டும் அபிஷேக்?"

"நான் இங்கே கொட்டிக் கொள்ள வரவில்லை. நீ வேண்டுமானால் உனக்கு வேண்டியதை ஆர்டர் செய்து கொள்!"

"லுக்! நானும் இங்கே சாப்பிட வரவில்லை. வீட்டிற்குப் போய்த்தான் சாப்பிடுவேன்!"

"ம்... தெரியுமே! அநன்யா உனக்கு ஆசையாகப் பரிமாறுவாள்."

"சே...! நீ நினைப்பது போல் எங்களுக்கிடையே ஏதும் இல்லை அபிஷேக்!"

"இதை நான் நம்ப வேண்டுமா?"

"நம்புவதும் நம்பாததும் உன் இஷ்டம். ஆனால் இதுதான் உண்மை!"

"சரி... அவள் யார்?"

"அவள் என்றால்... யாரைச் சொல்கிறாய்?"

"ம்... உன்னுடன் வந்தாளே மோகினி போல் அழகாக... அவளைத்தான் சொல்கிறேன்!"

"நீ அவளை மோகினி என்று வேண்டுமானாலும் கூப்பிடலாம். அவளுக்கு அவள் யார் என்றே தெரியாது."



"என்ன சொல்கிறாய் நீ?"

"ம்... ஆமாம்! அவளுக்குத் தான் யார், தன் பெயர் என்ன, எந்த ஊர் என எதுவுமே தெரியாது!"

"வாட்...?"

"யெஸ்... சமீபத்தில் கல்பாக்கத்தில் ஒரு விபத்து ஏற்பட்டது. உனக்கு அது தெரியுமா?"

"ம்... தெரியாது. இரண்டு மாதமாக நான் பெங்களூரில் இருந்தேன். என்ன விபத்து அது?"

"ஒரு பேருந்து பாலத்தில் இருந்து கீழே விழுந்து விட்டது. மழை வேறு அப்பொழுது தொடர்ந்து பெய்து கொண்டு இருந்ததால்... மீட்புப் பணிகள் மெதுவாகத்தான் நடந்தன."

"ஓ... அப்படியா! அந்த விபத்திற்கும் 'மோகினி'க்கும் என்ன சம்பந்தம்?"

"அந்தப் பேருந்தில் பயணம் செய்தாள் அநன்யா. பேருந்து விழுந்ததில் அவளுக்கு நினைவு தப்பிவிட்டது. மருத்துவத் துறையில் இதற்கு 'அம்னீஷியா' என்று பெயர்."

"காட்! என்னால் நம்ப முடியவில்லை. அவளைப் பார்த்தால் அதுமாதிரி எதுவுமே தெரியவில்லையே!"

"ம்... ஆனால் இதுதான் உண்மை. ஷி இஸ் மை பேஷண்ட். அவ்வளவுதான்!"

அபிஷேக் முகத்தில் நிம்மதிப் பூக்கள் பூத்தன.

# 7

உன்னிடம்
மனதில்
உள்ளதைச்
சொல்ல
முடியாமல்
ஏதோ
ஒன்று
தடுக்கிறது!
............
என்ன
அது?
உன்
நீள் விழிகளில்
மின்னும்
கர்வமா?
இல்லை!
............
உன்
முகத்தில்
தெரியும்
அலட்சியமா?
என்ன அது?

"ஆனால் ஒரு சந்தேகம் அத்வித்!"

"என்ன, சொல்...?"



"எல்லாப் பேஷண்ட்ஸையும் இப்படித்தான் ட்ரீட் செய்வியா? வீட்டில் தங்க வைத்து, வேண்டியதெல்லாம் வாங்கிக் கொடுத்து, அவர்கள் தேவைகளைக் கவனித்து... இது அதிகப்படியாகத் தோன்றவில்லை?"

"ம்... இல்லை! ஏன் என்றால் இதனால் பாதிக்கப் படுவது என்னுடைய பேஷண்ட். அதோடு வீடு மாதிரியான சூழலில் தங்கினால் அவளுக்குப் பழசெல்லாம் ஞாபகம் வரலாம். அதற்கான வாய்ப்புகள் அதிகம். அதனால் இதில் எந்தத் தப்பும் இல்லை!"

"ம்.. சரி! இப்ப அந்த 'மோகினி' பேச்சு இதற்கு மேல் வேண்டாம்!"

"அப்ப உன் தங்கையை - 'என் மோகினி'யைப் பற்றிப் பேசலாமா?" - என்றவனின் இதழ்களில் புன்னகை படர்ந்தது.

அபிஷேக்கின் முகத்தில் நிம்மதி படர்ந்தது.

"பேசலாம் அத்வித்! சுப்ரியா இப்பவெல்லாம் ரொம்ப டல்லாக இருக்கிறாள்!"

"ஓ...! அப்ப ஏதாவது நல்ல டாக்டராக் காட்ட வேண் டியதுதானே!"

"ம்... கிண்டல் வேண்டாம் அத்வித்!"

"இவ்வளவு நேரம் நீ என்னைப் பாடுபடுத்த வில்லையா என்ன?"

"சரி... ஸாரி... நான் அப்படிப் பேசியது எல்லாம் தப்பு... போதுமா?"

"ம்... சுப்ரியாவுக்கு உடம்புக்கு ஏதும் இல்லையே!"

அவன் குரலில் தெரிந்த அக்கறை அபிஷேக்கின் மனதிற்கு நிம்மதியை அளித்தது.

"இல்லை அத்வித். ஆனால் சிடுசிடுவென இருக்கிறாள். காரணம் இல்லாமல் எரிச்சல் படுகிறாள்."

"ஓ... ஏன் அப்படி?"

"தெரியவில்லை! உங்களைப் பற்றிப் பேசினால் அவள் எரிச்சலும் கோபமும் தங்கம் விலை ஏறுவது போல் கடகடவென ஏறுகிறது."

"சுப்ரியா என்னிடம் அவள் பேசியதைப் பற்றி ஏதும் சொல்லவில்லையா?"

"இல்லை... கடைசியாக உன்னிடம் தன் காதலைச் சொன்னதைப் பற்றிச் சொன்னாள். அதற்குப் பின்பு என்னிடம் ஏதும் சொல்லவில்லை. சுப்ரியா செல்லமாக வளர்ந்த பெண். அவள் விவரம் புரியாமல் குழந்தைத் தனமாக ஏதாவது தப்பாகச் செய்திருந்தால், இல்லை... பேசி இருந்தால் மன்னித்து விடு அத்வித்!" - என்றான் தணிந்த குரலில் அவன்.

அவன் முகத்தில் பதட்டம் தெரிந்தது. சுப்ரியா மேல் இவனுக்குப் பாசம் அதிகம். அதனால்தான் உருகுகிறான் என்று அத்வித்திற்குப் புரிந்தது.

"சுப்ரியாவும் நானும் ஒருவரை ஒருவர் விரும்புகிறோம். இருவரும் வெவ்வேறு தொழிலில் இருக்கிறோம். அது காதலிக்கும் பொழுது பிரச்சனையை ஏற்படுத்தவில்லை. ஆனால் திருமணத்திற்குத் தடையாக இருக்கிறது!" - என்றான் பெருமூச்சோடு அத்வித்.



"எனக்குப் புரியவில்லை... ப்ளீஸ் தெளிவாகச் சொல்!"

"நான் என் தொழிலை நேசிக்கிறேன். அது மட்டும் இல்லை... இந்த மண் என் உயிர்!"

"ம்... எனக்குத் தெரியுமே அத்வித். உன் அப்பா, தாத்தா எல்லாருமே இங்கதான் இருந்தார்கள். பண்ணையார் அளவிற்கு மதிப்பும் மரியாதையும் இந்த ஊர் மக்கள் அவர்கள் மேல் வைத்து இருந்தார்கள். அம்மா உங்கள் குடும்பத்தைப் பற்றி நிறையச் சொல்லி இருக்கிறார்கள். அதனால் எனக்கு இது புதிய விஷயம் இல்லை!"

"நான் இங்கேயே ஹாஸ்பிடல் வைத்து இங்கு உள்ள மக்களுக்குக் குறைந்த விலையில் மருத்துவ சிகிச்சை அளித்து வருகிறேன். சுப்ரியாவிற்குத் திருமணத்திற்குப் பின்பு நான் இங்கே தொடர்ந்து ஹாஸ்பிடல் வேலையில் ஈடுபடுவது பிடிக்கவில்லை.

"திருமணத்திற்குப் பின்பு நான் அவள் போகும் இடம் எல்லாம் உடன் வர வேண்டும் என்பது அவள் விருப்பம். அது என்னால் முடியாது என்று நான் தீர்மானமாகச் சொல்லி விட்டேன்."

"காட்! இவ்வளவு நடந்திருக்கிறதா? அவள் என்னிடம் இதைப் பற்றி எல்லாம் மூச்சு விடவில்லை!"

"அதுதான் சுப்ரியா! நான் கடைசியாகச் சொன்னது அவளைக் காயப்படுத்தி விட்டது போல!"

"என்ன சொன்னாய் அத்வித் அப்படி?"

"நாம் நண்பர்களாகப் பிரிந்து விடுவோம் என்று சொன்னேன். அது மட்டும் இல்லை... இன்னொன்றும் சொன்னேன். அதனால்தான் அவளுக்குக் கோபம்!"

"என்ன அது?"

"ஐ.டி. அதான் கம்ப்யூட்டர் துறையில் இருக்கும் ஒருவன்தான் உனக்குச் சரி வருவான். நீ டூர் போகும் பொழுதெல்லாம் பெட்டி தூக்கிக் கொண்டு உன் கூடவே வருவான். செல்லப் பிராணி போல் உன் பின்னாலேயே வருவான். அந்த மாதிரி ஒரு ஆள்தான் உனக்கு லாயக்கு!" - என்று கோபமாகப் பேசி விட்டேன்.

"சுப்ரியா சும்மா இருந்திருக்க மாட்டாளே!"

"ம்... இதுதான் உன் முடிவா? அப்படின்னு என் சட்டைக் காலரைப் பிடித்து உலுக்கினாள்."

"அதுதானே பார்த்தேன்! என் தங்கை ஆச்சே!" - என்று பெருமிதமாகச் சிரித்தான் அபிஷேக்.

அத்வித்தும் அவன் சிரிப்பில் இணைந்து கொண்டான்.

"எனக்கு சுப்ரியாவைப் பார்க்க வேண்டும் அபிஷேக்!"

"அண்ணனிடமே 'காதல் தூது' செய்யச் சொல்லும் ஆள் நீ மட்டும்தான் அத்வித்."

"என்ன செய்வது? என் நிலைமை அப்படி ஆகிவிட்டது."

"ஸோ... உங்கள் இருவருக்கும் இடையே இருக்கும் சுவர் உங்கள் இருவரின் வேலை. அப்படித்தானே? இதற்கு என்ன தீர்வு? என்ன செய்யலாம்?" - என்று தன்னையே உரக்கக் கேட்டுக் கொண்டான் அவன்.

"சுப்ரியா மாறுவாள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது."



"ம்... எனக்கும் அந்த நம்பிக்கை இருக்கிறது."

"அப்புறம் என்ன கவலை?"

"ம்... சுப்ரியா யோசித்து நிதானமாக உன் அறுபதாவது வயதில் மனம் மாறினால் என்ன செய்வது? அந்தக் கவலைதான் இப்ப எனக்கு!"

"அடக் கடவுளே! சுப்ரியா அவ்வளவு நிதானமாகவா முடிவெடுப்பாள். இப்ப என்ன செய்வது?"

"யோசிக்கலாம். கண்டிப்பாக நல்ல முடிவாக எடுப்பாள். ஆனால் அவளுக்குக் கொஞ்சம் நெருக்கடியை நாம் ஏற்படுத்த வேண்டும்."

"என்ன அபிஷேக்... வில்லன் மாதிரிப் பேசற?"

"என் தங்கையின் பிடிவாதத்திற்கு வில்லனாக இருக்கலாம்... தப்பு இல்லை!"

தேநீர் குடித்தபடியே இரண்டு பேரும் பேசிக் கொண்டு இருந்தார்கள். சுப்ரியாவின் மனதை மாற்ற என்ன வழி என்று தீவிரமாக ஆலோசித்துக் கொண்டு இருந்தனர்.

**வீ**டு வந்து சேர்ந்த அநன்யாவை ஆவலுடன் வரவேற்றாள் மீனா.

"என்ன அநன்யா! ஷாப்பிங் முடிந்ததா?"

"முடிந்தது ஆன்ட்டி!"

"நல்லது... அத்வித் எங்கே? எமர்ஜென்ஸி கேஸ் ஏதாவது வந்து விட்டதா? ஹாஸ்பிடல் போயிட்டானா?"

"இ... இல்லை ஆன்ட்டி. அவருக்குத் தெரிந்தவர் ஒருவர் கடைக்கு வந்து இருந்தார். அவருடன் பேச

வேண்டுமாம். ஏதோ முக்கியமான விஷயம் போல. அதனால் என்னை அவர் போகச் சொல்லி விட்டார்."

"அப்படியா? யார் அது? என்ன பெயர்?"

"ம்... அபிஷேக் என்று அவர் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டார் ஆன்ட்டி!"

"அபிஷேக்கா? சரி... அவன் பிரெண்ட் யாராவது இருக்கும். நீ வந்து சாப்பிடு."

"இல்லை ஆன்ட்டி... எனக்குப் பசிக்கலை!"

"அட... இவ்வளவு நேரம் ஆச்சே! இன்னுமா சாப்பிடாமல் இருப்பது? உடம்பு வீணாகிவிடும். வந்து சாப்பிடு. நானும் இன்னும் சாப்பிடவில்லை. உனக்காகத் தான் காத்துக் கொண்டு இருந்தேன்."

"அச்சோ... ஸாரி ஆன்ட்டி... என்னால் நீங்களும் சாப்பிடலையா? வாங்க... வாங்க. இப்பவே சாப்பிடலாம்!" - என்று படபடத்தாள் அவள்.

இருவரும் நீண்ட நாள் பழகியவர்கள் போல் ஏதேதோ பேசிச் சிரித்தபடி சாப்பிட்டுக் கொண்டு இருந்தனர்.

"உனக்கு இந்தச் சாப்பாடு பிடித்து இருக்கிறதா?"

"ம்... சாம்பார், அவியல், ரசம், பாயசம் என ஏகப்பட்ட அயிட்டங்கள் ஆன்ட்டி. எதைச் சாப்பிடறது அப்படின்னே தெரியலை!"

"உனக்கு நார்த்-இண்டியன் உணவு வகைதான் பிடிக்குமோ என்னவோ தெரியலையே!"

"சப்பாத்தி, புல்கா-சப்ஜி அதெல்லாம் நான் அடிக்கடி சாப்பிட்ட மாதிரி ஒரு உணர்வு ஆன்ட்டி. இந்த



சவுத்-இண்டியன் உணவு ரொம்பவே அருமையாக இருக்கிறது."

"இன்னும் நிறைய சவுத்-இண்டியன் உணவு இருக்கு அநன்யா. முக்கியமாக டிபன் அயிட்டம் ரொம்பவே நிறைய இருக்கு!"

"அப்படியா?" - விழிகள் அகலக் கேட்டாள் அவள்.

"இடியாப்பம், அடை அவியல், அரிசி உப்புமா, பிடி கொழுக்கட்டை... பஜ்ஜி, போண்டா எனச் சொல்லிக் கொண்டே போகலாம்."

"என்ன அம்மா... ஹோட்டல் சர்வர் மாதிரி ஏதோ டிபன் அயிட்டங்கள் எல்லாம் சொல்றீங்க!" - என்றபடியே டைனிங் டேபிள் அருகே வந்தான் அத்வித். கூடவே அபிஷேக்கும் இருப்பதைக் கவனித்தாள் அநன்யா.

"வா அத்வித், சாப்பிடலாம்! தம்பி, நீங்களும் உட்காருங்க!"

"அம்மா... இவன் அபிஷேக். என் ஃபிரெண்ட்!"

"ஓ... அப்படியா! உட்காருங்க தம்பி!"

"ஆ... பயங்கரப் பசி எனக்கு! சாப்பாடு வாசனை ரொம்பவே பசியைத் தூண்டுது!"

"தம்பி! ரொம்பச் சிம்பிளான சாப்பாடுதான். அநன்யா கொறிக்கிறா... நீங்களாவது நல்லாச் சாப்பிடுங்க!"

"ம்... அவங்க டயட் அப்படி இப்படின்னு ஏதாவது செய்வாங்க. நமக்கு அந்தப் பழக்கம் எல்லாம் கிடையாது."

அநன்யா அவனைப் பார்த்தாள். தன்னுடன் சண்டை போட்டது இவனா, அத்வித்தை அடிக்க முயன்றது இவன்

தானா? அவளுக்கு நம்ப முடியவில்லை. நம்பாமலும் இருக்க முடியவில்லை.

எப்படி இவர்கள் இருவரும் இப்படிச் சட்டென இழைந்து கொள்ளத் தொடங்கினார்கள்? அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

தங்கை... தங்கை என்று அப்படி உருகினானே அப்பொழுது... அவனை அத்வித் எப்படிச் சரிக்கட்டினான் என்று யோசித்தபடியே இருந்தாள் அவள்.

"அப்பாடா... இந்த மாதிரி நல்ல சாப்பாட்டைச் சாப்பிட்டு எவ்வளவு நாளாச்சு ஆன்ட்டி!" – என்றபடியே மும்முரமாகச் சாப்பிட்டுக் கொண்டு இருந்தான் அவன்.

"அப்ப டெய்லி இங்கேயே சாப்பிடலாம் தம்பி!"

"ஆன்ட்டி... நான் நிஜமாலுமே சாப்பிட வந்திடுவேன். அப்புறம் ஏன்டா இவனை வரச் சொன்னோம் அப்படின்னு நீங்க ஃபீல் செய்வீங்க!"

"அட... நான் உங்களை நிஜமாலும்தான் கூப்பிட றேன். சாப்பாட்டை ரசித்துச் சாப்பிடறவங்களை எனக்குப் பிடிக்கும் தம்பி."

"அபிஷேக்... உன்னைச் 'சாப்பாட்டு ராமன்' என்று சொல்றாங்க அம்மா!"

அதைக் கேட்டுக் கொண்டிருந்த அநன்யாவிற்குச் சிரிப்பு வந்தது. சிரிப்பை அடக்க முயன்றாள். அதனால் புரை ஏறியது.

"யாரோ உன்னை நினைக்கிறார்கள்... அதனால்தான் புரை ஏறுகிறது."



"அப்படி யாராவது இருந்தால் என்னைத் தேடி வந்திருப்பார்கள் ஆன்ட்டி. அட்லீஸ்ட் முயற்சியாவது செய்திருப்பார்கள்!" – என்றவளின் முகத்தில் சோகத்தின் நிழல் தெரிந்தது.

அவளைப் பார்க்கப் பாவமாக இருந்தது அபிஷேக் கிற்கு. ஏன் இவளைத் தேடிக் கொண்டு யாருமே வரவில்லை என்ற எண்ணம் அவன் மனதை அரித்தது.

அதற்குப் பின்பு மௌனம் சாப்பாட்டு அறையில் படர்ந்தது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு யோசனையில் மூழ்கி இருந்தனர்.

# 8

நேற்று
நான்
இந்த
மாதிரி
உணர்ந்தது
இல்லை!
..........
என்
மனம்
எனும்
மரத்தில்
புத்தம்
புதிதாக

மலர்கள்
புத்துக்
குலுங்குகின்றன!
...........
இன்று
நான்
புதிதாகப்
பிறந்தது
போல்
உணர்கிறேன்,
உன்னாலே!

**கா**லையில் பூஜை அறையில் உட்கார்ந்து 'சுலோகங்கள்' சொல்வதில் மும்முரமாக இருந்தாள் மீனா.

அம்மா பூஜை அறையிலிருந்து வெளிப்படுவதற்காகக் காத்துக் கொண்டு இருந்தான் அத்வித். அம்மாவிடம் இன்று எப்படியாவது சுப்ரியா பற்றிப் பேச வேண்டும் என்று முடிவு செய்தான்.

பூஜையை முடித்துவிட்டு... கற்பூரத் தட்டுடன் அத்வித்தை நோக்கி வந்தாள் மீனா.

"என்னடா... ஏதோ சொல்ல வர்ற மாதிரித் தெரியுது. முதலில் விபூதி எடுத்துக்கோ!" – என்றவள், மகனுக்கு விபூதி வைத்து விட்டாள்.

குளித்து விட்டுப் புது சல்வாரில் தேவதை போல், தலை முடியில் ஈரம் மின்ன அழகான புன்னகையோடு அப்பொழுது அங்கே வந்தாள் அநன்யா.



"குட்மார்னிங் ஆன்ட்டி... குட்மார்னிங் டாக்டர்!"

"குட்மார்னிங் அநன்யா... நல்லாத் தூங்கினியா?"

"ம்... நல்லாத் தூங்கினேன் ஆன்ட்டி... காலையிலேயே பூஜை எல்லாம் பலமா இருக்கு!"

"இது அம்மாவோட டெய்லி சமாசாரம் அநன்யா. அடாது மழை, விடாது புயல், சுட்டெரிக்கும் வெயில் என எது வந்தாலும் கவலைப்படாமல் அம்மா பூஜையில் மூழ்கி இருப்பாங்க!"

அதைக் கேட்ட அநன்யா, கலகலவெனச் சிரித்தாள். மாடிப் படியிலிருந்து கீழே இறங்கி வந்து கொண்டு இருந்த அபிஷேக்கின் கண்ணில் பட்டாள் அநன்யா.

சிரிக்கும் பொழுது மின்னிய அவள் முத்துப் பற்கள்... மேலும் சிவந்த அதரங்கள் அவனை ஈர்த்தன. ஏதோ உள்ளுணர்வு சொல்ல சட்டென மாடிப் படியை நோக்கினாள். அபிஷேக்கின் பார்வை தன் மீது இருப்பதை அவளால் உணர முடிந்தது.

அவள் முகம் கோபத்தால் சிவந்தது. முகத்தைத் திருப்பிக் கொண்டாள். ஆனால் அவன் அதை எல்லாம் கண்டு கொள்ளாமல் கருமமே கண்ணாகத் தன் வேலையைத் தொடர்ந்து செய்த வண்ணம் இருந்தான்.

"அம்மா... நான் உங்ககிட்டக் கொஞ்சம் பேசணும்!"

"கொஞ்சம் என்னடா... நிறையவே பேசலாம். ஆனால் முதலில் எல்லாரும் காப்பி குடிங்க. அநன்யா, நீயும்தான். தம்பி, உட்காருங்க. நான் காப்பி எடுத்திட்டு வர்றேன்."

"ஆன்ட்டி... நீங்க உட்காருங்க. நான் போய் எடுத்திட்டு வர்றேன்."

சமையல் அறையினுள் சென்றவள் காப்பி டிகாக்ஷனையும் பாலையும் திட்டமாகக் கலந்தாள். பின்பு அதில் சர்க்கரையும் சேர்த்தாள். டம்ளர்களில் அதை ஊற்றியவள், பின்பு அவற்றை ட்ரேயில் வைத்து ஹாலிற்கு எடுத்து வந்தாள்.

டைனிங் டேபிளைச் சுற்றி இருந்த நாற்காலிகளில் உட்கார்ந்து பேசிக்கொண்டு இருந்தனர் மூவரும்.

"இந்தாங்க ஆன்ட்டி, எடுத்துக்கோங்க!" - என்று பவ்யமாக ட்ரேயை நீட்டினாள் அவள்.

"நீயும் குடிம்மா!" - என்றபடியே ஒரு டம்ளரை எடுத்துக் கொண்டாள் மீனா.

"சரி ஆன்ட்டி!" - என்றபடியே அத்வித்திடம் ட்ரேயை நீட்டினாள்.

"இந்தாங்க டாக்டர்!"

"தேங்க்ஸ் அநன்யா!"

"இந்தாங்க ஸார்... எடுத்துக்கோங்க!" - என்றபடியே அபிஷேக்கிடம் காப்பியை நீட்டினாள் அவள்.

"இந்த மாதிரி மரியாதைக் குறைவாக் கொடுத்தா என்னால் குடிக்க முடியாது!" - என்றான் சப்தமாக.

மீனாவும் அத்வித்தும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"ஸாரி ஸார்... நான்... நான் எந்த மரியாதைக் குறைவாகவும் நடந்துக்கல!" - என்றாள் அநன்யா.



"இதோ மறுபடியும் நடந்துக்கற... அதே தப்பு! என்னால் இதைப் பொறுத்துக் கொள்ள முடியாது."

"ஐயாம் ஸாரி!" - என்றவளுக்குக் கண்கள் கலங்கின. உதடு துடித்தது.

"இந்த மாதிரி ஸார்... ஸாருன்னு கூப்பிடாதே... சே... ஏதோ எனக்கு அம்பது வயது மாதிரித் தோணுது... நீ அப்படிக் கூப்பிடும்பொழுது...!"

அவளிடம் இருந்து ஒரு நிம்மதிப் பெருமூச்சுப் பிறந்தது. மீனாவும் அத்வித்தும் சிரித்தனர்.

"அபிஷேக்... பாவம்டா அநன்யா... பயந்திட்டா ஒரு நிமிஷம்!" - என்றான் அத்வித்.

"ம்... அழ வைக்கலாம் என நினைத்தேன். கண் கலங்கி, ரெடியா இருந்தா அழறதுக்கு... அதைப் பார்க்க ஏனோ பாவமா இருந்தது. அதான் விட்டு விட்டேன்."

"அடேயப்பா! எவ்வளவு பெரிய மனசு உனக்கு! பாவம் அநன்யா!" - என்றான் அத்வித்.

"அநன்யா... ஸாரி! நான் சும்மாதான் சொன்னேன். பயந்திட்டியா என்ன? சும்மா விளையாட்டுக்குத்தான் சொன்னேன்!"

"ப... பரவாயில்லை!" - என்று முணுமுணுத்தாள். மனதினுள் அவனைத் திட்டியபடியே இருந்தாள் அவள்.

"ம்... சும்மா எனக்காகச் சொல்ற நீ! எனக்குத் தெரியுது. ஆனால் மனசுக்குள் என்னைத் திட்டிட்டு இருக்க. கரெக்டா?"

"யெஸ்... கரெக்ட்!" - என்றாள் பட்டென அவள்.

"ம்... ஐ லைக் இட். இந்த மாதிரி மனசில் இருப்பதைப் பட்டெனப் போட்டு உடைப்பது எனக்குப் பிடிக்கும். ஏனெனில் நான் அந்த மாதிரி டைப்."

அவர்கள் இருவரும் சண்டை போடுவது போல் பேசிக் கொள்வதைப் பார்த்துத் தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டான் அத்வித்.

"என்னடா... ஏதோ பேசணும்னு சொன்ன! இப்ப அமைதியாயிட்ட!"

"ம்... இங்க 'லைவ் ஷோ' மாதிரி சண்டை நடக்குது. அது சுவாரசியமா இருக்கு அம்மா!"

அநன்யாவின் முகத்தில் கூச்சம் படர்ந்தது. 'சே! இவர்கள் முன்னிலையில் நான் இப்படி நடந்து கொண் டேனே!' என்று தன்னையே கடிந்து கொண்டாள் அவள்.

"ஸாரி டாக்டர்!"

"அநன்யா... உனக்கு இந்த வீட்டில் எல்லாச் சுதந்திரமும் உண்டு. குறிப்பா பேச்சுச் சுதந்திரம். அதனால் நீ எதற்கும் கவலைப்பட வேண்டாம். நீ உன் வீட்டில் எப்படி இருந்தியோ... இங்கேயும் அப்படியே இருக்கலாம்."

"என் வீடே எதுவென்று எனக்கு இதுவரை தெரிய வில்லையே டாக்டர்!" - என்றாள் மெலிந்த குரலில்.

"ஷ்... அநன்யா... என்ன இது? நான் சும்மா பேச்சுக்குச் சொன்னேன்!"

"எனக்கு ஒரு ஐடியா தோணுது."



"என்ன அபிஷேக் அது?"

"அநன்யாவை ஒரு நல்ல டாக்டரிடம் காட்டலாமே!" - என்றான் சீரியஸாக.

"ஏய்... உன்னை..." என்று அடிப்பது போல் கை ஓங்கினான் அத்வித்.

அநன்யா சிரித்தாள். மீனாவும் அவள் சிரிப்பில் இணைந்து கொண்டாள்.

"அப்பாடா... ஒரு வழியா 'அழுமூஞ்சி அநன்யா' சிரிச்சிட்டா..." - என்றான் அபிஷேக்.

அவள் அவனை எரித்து விடுவது போல் பார்த்தாள்.

"நான் ஒன்றும் அழுமூஞ்சி இல்லை!"

"அப்படியா என்ன?"

"ஆமாம்... அப்படித்தான்!"

"நம்ப முடியவில்லை. சரி... அதெல்லாம் பரவா யில்லை. உங்க பெயருக்கு என்ன அர்த்தம்?"

"தெரியாது."

"ம்... பெயருக்கு அர்த்தம் தெரியாது. சரி... நீ எந்த ஊரைச் சேர்ந்தவள்? அதுவாவது தெரியுமா?"

"தெரியாது!"

"அப்பா பெயர்... இல்ல, அம்மா பெயர் தெரியுமா?"

"தெரியாது... தெரியாது... போதுமா?" - என்றபடியே வேகமாக அங்கு இருந்து அழுதபடியே ஓடினாள்.

"என்ன தம்பி இப்படிச் செஞ்சிட்டீங்க?"

"ஆன்ட்டி... ஒரு காரணமாத்தான் அப்படிச் செய்தேன்!"

"ஆமாம் அம்மா... சும்மா இரிடேட் செய்யற மாதிரிப் பேசினால் இந்த மாதிரி பேஷண்ட் சில பேருக்குப் பழசெல்லாம் நினைவுக்கு வர வாய்ப்பு உள்ளது. நான் இதைப் பற்றி அபிஷேக்கிடம் பேசிக் கொண்டு இருந்தேன். அதனால் அவன் அதை மனதில் வைத்துக்கொண்டுதான் பேசினான். நீங்கள் அதைக் கண்டு கொள்ளாதீர்கள். அநன்யாவிற்குத் தான் யார் என்று தெரிந்தால் நல்லது தானே!"

"ம்... நல்லதுதான்! ஆனால் பாவமா இருக்குடா... அவ கோபப்பட்டு அழுதுகிட்டே போனதை நினைச்சா!"

"அதெல்லாம் சரியாயிடும் ஆன்ட்டி. நீங்க கவலைப் படாதீங்க!"

"அம்மா! நான் உங்ககிட்டச் சொல்ல வந்த விஷயத்தை மறந்திட்டேன் பாருங்க!"

"ஆமான்டா! சொல்லு... என்ன விஷயம்?"

"அம்மா... அபிஷேக்கின் தங்கை பெயர் சுப்ரியா!"

"நல்ல பெயர்... சொல்லு!"

"அம்மா... குறுக்கே குறுக்கே பேசாதீங்க. எனக்குப் பேசற ஃப்ளோவே போயிடுது."

"என்னடா... கவிதைக்குத்தான் ஃப்ளோ வேணும். பேசறதுக்குக் கூடவா ஃப்ளோ வேணும்?"



"ஆன்ட்டி... சபாஷ்! கலக்கறீங்க. நானே சொல்றேன். என் தங்கைக்கு இங்கே இந்திரா காந்தி அணுமின் நிலையத்தில் ஒரு மூன்று அல்லது நான்கு மாதங்கள் போஸ்டிங் கிடைச்சிருக்கு."

"ஓ... அப்படியா தம்பி! ரொம்ப சந்தோஷம். பேசாம சுப்ரியா இங்க இருந்தே - நம்ம வீட்டில் இருந்தே போகட்டுமே!"

"அம்மா! ரொம்ப தேங்க்ஸ்! அதைப் பற்றி உங்களிடம் பேசுவதற்காகத்தான் நான் காத்துக்கொண்டு இருந்தேன். அதற்குள் அபிஷேக் முந்திக் கொண்டான்!"

"ஆன்ட்டி... அப்புறம் இன்னொரு வேண்டுகோள்."

"சொல்லு தம்பி?"

"நான் இப்ப ஒரு புது பிராஜெக்ட் எடுத்துச் செய்யப் போறேன். அதுக்கு ஒரு நம்பகமான ஆள் எனக்கு வேண்டும். கணினியில் ரிப்போர்ட்ஸ் தயார் செய்ய வேண்டும். சில குறிப்பிட்ட ஸைட்களில் உள்ள தகவல்களை எனக்குக் கொடுக்க வேண்டும்."

"அப்படியா தம்பி! உனக்கு நம்பிக்கையான ஆள் வேண்டுமா? யாரைச் சிபாரிசு செய்யலாம்?" - யோசித்தாள் மீனா.

"ம்... ஆன்ட்டி... கையில நெய்யை வெச்சுக்கிட்டு வெண்ணெயைத் தேடின கதையா இருக்கு!"

"என்ன தம்பி சொல்ற?"

“அநன்யா இந்த வேலைக்கு ஏற்ற ஆள் அப்படின்னு எனக்குத் தோணிச்சு. ஆனால் நீங்க பர்மிஷன் கொடுத்தால்தான் எல்லாம் நடக்கும்!”

“அட… தம்பி… இதுக்கு ஏன் தயக்கம்? அநன்யா விற்குச் சம்மதம் என்றால் எனக்கும் சம்மதம்தான்!”

“நான் கேட்டால் அநன்யா கண்டிப்பா ‘நோ’ என்றுதான் சொல்வாள். அதனால் நீங்க ரெகமண்ட் செய்தால் நல்லா இருக்கும்.

“அட… இப்ப உடனே சொல்லிட்டாப் போகுது. ஆனா… வேலை எங்கே பார்க்கணும் தம்பி… உங்க கம்பெனி எங்க இருக்கு?”

“ம்… இப்போதைக்கு உங்க வீடுதான் என் கம்பெனி ஆன்ட்டி. மடிக் கணினி இருக்கு கைவசம். அதனால் பிரச்சனை இல்லை. வேலை நேரம் ஒன்பதிலிருந்து ஐந்து மணி வரை அப்படின்னு எல்லாம் சொல்ல முடியாது. வேலை வரவர நான் அதை அநன்யாவிடம் கொடுப்பேன்.

“குறிப்பிட்ட நேரத்திற்குள் அதை முடித்துக் கொடுக்க வேண்டும். மாதம் எப்படியும் பத்தாயிரம் முதல் இருபதாயிரம் வரை கண்டிப்பாகக் கிடைக்கும் அநன்யாவிற்கு!”

“ஓ… பரவாயில்லையே! நான்கூட அப்ளை பண்ணலாம் போல் இருக்கே!”

“அம்மா! உனக்கும் கணினிக்கும் ஏழாம் பொருத்தம். ஞாபகம் இருக்குதானே!”

“அட… ஆமாம்! அந்த ‘எலி’ இருக்கே… அதுதான் ரொம்ப எனக்குக் கொடைச்சல் கொடுத்தது. அன்னிக்கு



அத்வித் ரொம்ப முயற்சி செய்தான். ஆனால் அந்த ‘எலி’ தான் ரொம்பப் பிரச்சனை செய்தது.”

“எலியா? என்ன அது?”

“மௌஸைத் தான்டா அம்மா அப்படிச் சொல்றாங்க.”

அங்கே சிரிப்பலை பரவியது.

## 9

மலர்கள்
மலர்கின்றன
பனியின்
குளிர்
கரங்களின்
தாக்கத்தால்
........
மார்கழி
மாதக்
காலைக்
குளிர்
........
இருள் தன்
போர்வையை
முற்றிலும்
அகற்றவில்லை
.........

வாசலை
நீ
அழகாகப்
பெருக்கிக்
கோலமிடுகிறாய்
..........
இங்கே என்
மனம் உனக்காக!
..........

"அண்ணா! திடீரென எனக்குக் கல்பாக்கத்தில் போஸ்டிங். நல்ல காலம், நீங்க இப்ப இங்கே இருக்கீங்க!" என்று சொல்லியபடியே கம்பெனி காரிலிருந்து இறங்கினாள் சுப்ரியா.

"உன் அண்ணன் தூணிலும் இருப்பான். துரும்பிலும் இருப்பான்..." என்று அட்டகாசமாகச் சிரித்தான் அபிஷேக்.

"அண்ணா, போதும். ரொம்ப பில்டப் கொடுக்காதே... சரி... நாம இப்ப எங்கே போறோம்?"

"ம்... உனக்கு சர்ப்ரைஸ்... வெயிட் பண்ணு, கொஞ்ச நேரம்..."

"ஆமாம்... இது என்ன பெரிய மெட்ரோவா என்ன... சென்னையா? மும்பையா...? ஏதும் இல்லை.

ஃபைவ் ஸ்டார் ஹோட்டல் இங்கே எதுவும் இல்லை. நியூக்ளியர் ரீஆக்டர் தான் இருக்கு இங்க..."

"ம்... அணுமின்கலன் மட்டும் இங்கு இல்லை ப்ரியா... மக்களும் இருக்கிறார்கள்."



"ம்... மக்களுக்கு இந்தியாவில் பஞ்சமா என்ன? நாம்தானே சைனாவிற்கு அப்புறம்... இதில் முன்னிலையில் இருக்கிறோம்."

"சரி... உன் வேலை எல்லாம் எப்படி இருக்கு?"

"ம்... நான் லீட் செய்த ப்ராஜெக்ட் ஒன்றுக்கு விருது கிடைக்கும் வாய்ப்பு உள்ளது அண்ணா..."

"ஓ... அப்படியா!"

"விருதுக்கு வரும் விண்ணப்பங்களை எல்லாமே ஒரு கமிட்டி பரிசீலனை செய்யும். அந்தக் கமிட்டியில் என் மேலதிகாரியும் இருக்கிறார். அவர்தான் இந்தத் தகவலைச் சொன்னார்."

"எனக்கொரு சந்தேகம் ப்ரியா!"

"என்ன சந்தேகம் அண்ணா?"

"அந்தக் கமிட்டியில் இருப்பவர்களுக்கு ப்ராஜெக்ட் பற்றி ஏதும் தெரியாது போல... இல்லைன்னா உன் ப்ராஜெக்ட் மட்டுமே பரிசீலனைக்கு வந்திருக்கும்!" என்றான் சிரிக்காமல்.

"அண்ணா.... உன்னை..." என்று அடிக்கக் கை ஓங்கினாள் சுப்ரியா.

"ஏய்... ப்ரியா! கார் ஓட்டறேன். விளையாடாதே!" என்றான் சிரித்தபடியே அபிஷேக்.

கார் தார் ரோட்டில் வழுக்கிக் கொண்டு சென்றது. ஒரு பெரிய வீட்டின் முன்பு காரை நிறுத்தினான்.

"அண்ணா... இது யார் வீடு?"

"ம்... என் ஃபிரண்ட் வீடுதான் ப்ரியா... இறங்கு."

"ஏன் அண்ணா... நாம இப்படி வந்து இறங்கினா... உன் ஃப்ரெண்ட் வீட்டில் உள்ளவர்களுக்குக் கஷ்டமா இருக்காதா?"

"அதெல்லாம் நான் ஏற்கெனவே சொல்லிட்டேன். என் ஃபிரண்ட் ரொம்ப நல்ல டைப். அவங்க அம்மா அதோட ரொம்ப ரொம்ப நல்ல டைப்.

கூடவே ஒரு மோகினி. நீ பார்த்த... சும்மா அரண்டு போயிடுவ... அவ்வளவு அழகு!"

ஹாலை ஒட்டியிருந்த வராந்தாவில் இருந்த மீன் தொட்டியைப் பார்த்தபடி இருந்த அநன்யாவிற்கு... அபிஷேக் பேசியது நன்றாகக் கேட்டது.

'மோகினியா... நானா...? என்ன திமிர் இவனுக்கு! இவனை ஏதாவது செய்ய வேண்டும்...' என்று மனதிற்குள் தீர்மானித்தாள்.

அதற்குள் சுப்ரியாவும் அபிஷேக்கும் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தனர். அதற்குள் அவர்கள் கண்களில் படாமல் வீட்டுக்குள் ஓடிவிட வேண்டும் என்று முடிவு செய்தவள்... வேகமாக ஓட்டமும் நடையுமாகச் சென்றாள்.

ஆனால் அபிஷேக் அவளைப் பார்த்து விட்டான்.

அவள் துப்பட்டா மீன் தொட்டியில் இருந்த ஒரு ஆணியில் மாட்டிக் கொள்ள, என்ன செய்வது... என்று புரியாமல் திகைத்தாள் அவள்.

நகர்ந்தால் மீன் தொட்டி கீழே விழுந்து விடுமோ என்ற பயம்... அவளை ஆட்கொள்ள, அவள் அப்படியே நின்றாள்.



"ம்... நான் சரியான நேரத்தில்தான் வந்திருக்கேன் போல... சுப்ரியா, நீ உள்ளே போ!" என்றபடியே அவள் அருகே வந்தான் அபிஷேக்.

துப்பட்டாவில் பின் போட்டு இருந்ததால் கிழிந்து போய் விடுமோ என்று பயந்தபடியே கையைத் தோள் மேலே வைத்துச் சிலை போல நின்றவளை வாரி அணைத்துக் கொள்ள அவன் கைகள் பரபரத்தன.

"கொஞ்சம் ஹெல்ப் செய்யுங்க...!"

"என்ன செய்யணும்...? நான் வேண்டுமானால் உன் துப்பட்டாவாக மாறவா?" என்றான் அவளுக்கு மட்டுமே கேட்கும் குரலில் அவன்.

"வாட்?" என்று சீறினாள் அவள்.

"ம்... ஐ மீன் துப்பட்டாவை... மாட்டி இருப்பதைப் பத்திரமாக எடுக்கவா?"

"வேண்டாம். அந்த ஆணியில் மாட்டி இருப்பதை மட்டும் எடுத்து விடுங்கள்."

"ம்... அவ்வளவுதானா?"

"ஆமாம்..."

"உன் லக் அவ்வளவுதான்!" என்று சத்தமாகச் சொன்னபடியே ஆணியில் மாட்டியிருந்த அவள் துப்பட்டாவைக் கிழியாமல் பத்திரமாக எடுத்தான்.

அதற்காகக் காத்திருந்தது போல் அவள் வேகமாக அங்கிருந்து வெளியேறினாள். துப்பட்டா காற்றில் ஆட, தலைமுடி காற்றில பறக்க... அவள் ஓடுவதை ரசித்தான் அபிஷேக்.

ஹாலில் சுப்ரியாவுடன் மீனா பேசிக் கொண்டிருந்தாள்.

"என்ன வேலை ப்ரியா... உனக்கு இங்க...?"

"ம்... இங்க ஐ.ஜி. கேரில் ஒரு புது ஸாஃப்ட்வேர் லோட் செஞ்சிருக்காங்க. அதைப் பற்றி மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கணும். அதற்காகத்தான் நான் இங்கே வந்திருக்கேன் ஆன்ட்டி!"

"ஓ... பரவாயில்லை. நல்லாப் படிச்சிருக்க நீ... படிச்ச படிப்பை வீணாக்காமல் வேலை பார்க்கிறியே... நல்ல விஷயம்தான் இது.

"இப்ப இருக்கிற பெண்கள் எல்லாம் ரொம்ப முன்னேறிட்டாங்க. விமானம் ஓட்டறது, கப்பலைச் செலுத்தறது, மலைகளில் ஏறுவது, விண்கலனை இயக்குவது... என என்னவெல்லாமோ செய்யறாங்க."

"அம்மா... அதே நேரத்தில அவங்க பிடிவாதமும் ஜாஸ்தி ஆயிடுத்து. குறிப்பா திருமண விஷயத்தில் தன் கணவன் தன்னைப் போற்றிப் பாடணும்... தன் வேலை தான் உயர்வானது என்று தலைக்கனமும் வந்திடுச்சு!" என்றபடியே சோபாவில் உட்கார்ந்தான் அத்வித்.

அவனை அங்கு எதிர்பார்க்காத சுப்ரியா திகைத்தாள். 'ஓ... அப்படின்னா இது... இது அத்வித் வீடா? அண்ணன் வேண்டுமென்றே என்னை இங்கு அழைத்து வந்திருக்கார் போல...' எனத் திகைத்தாள்.

"ப்ரியா... இவன் என் மகன். பெயர் அத்வித். கல்பாக்கத்தில் இவன் ஒரு ஹாஸ்பிடல் வைத்து நடத்தறான்."



"அம்மா, எனக்கு இவளைத் தெரியும். அவளுக்கும் என்னைத் தெரியும்."

"அது... நீயும் அபிஷேக்கும் நண்பர்கள் என்பதால்... அப்படித்தானே!"

"ஆமாம் அம்மா..."

"டாக்டர்... டாக்டர்..." என்று பதறியபடியே மூச்சு வாங்க எதிரில் வந்து நின்றாள் அநன்யா.

அவளைப் பார்த்தவுடன் சுப்ரியாவின் மனதில் ஏதோ ஒரு பொறாமை உணர்வு தீப் போல் படர்ந்தது.

சுப்ரியா அழகி. அதில் அவளுக்குச் சந்தேகம் இல்லை. ஆனால் இந்தப் பெண் வித்தியாசமாக... அழகும் கவர்ச்சியும் நளினமும் கலந்து செய்த கலவையாக இருக்கிறாள்.

யோசனையோடு அவளைத் தலை முதல் கால்வரை பார்த்தாள் சுப்ரியா.

"என்ன அநன்யா... இவ்வளவு பதட்டம்? என்ன ஆச்சு?"

"டாக்டர்... நான் தோட்டத்தில் பூப் பறித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது... அப்பொழுது..."

"என்ன ஆச்சு? பாம்பு ஏதாவது...?"

"சே... சே... அதெல்லாம் இல்லை டாக்டர். ஒரு சின்ன அணில் குட்டி.. நான் அதை மிதித்து விட்டேன் என்று நினைக்கிறேன்... பாவம் டாக்டர்!"

"அப்பா... இவ்வளவுதானா! நான் என்னவோ ஏதோ என்று பயந்து விட்டேன். சரி... வா, போய்ப் பார்க்கலாம்."

"வாங்க டாக்டர்..." என்று துள்ளிக் குதித்தபடி ஓடும் அவளைப் பார்த்து எரிச்சல் வந்தது சுப்ரியாவுக்கு.

கூப்பிட்டவுடன் ஆட்டுக்குட்டி போல் பின்னால் போகும் அத்வித் மேல் அவளுக்கு மேலும் கோபம் வந்தது.

'யார் இந்தப் பெண்? அண்ணன் சொன்ன மோகினி இவள்தானா? அரண்டு விடும் அழகு... என்று வர்ணித் தானே! அது இந்தப் பெண்தானா...?' - யோசித்தாள் சுப்ரியா.

"என்னம்மா அந்தப் பெண்ணையே பார்க்கிற?"

"ம்... யா... யார் ஆன்ட்டி? உங்க உறவுக்காரப் பெண்ணா?"

"இல்லை ப்ரியா. உறவு கிடையாது. ரொம்ப நல்ல பெண். பஸ் விபத்து ஒன்று இங்கு ஏற்பட்டது. அதில் இந்தப் பெண்ணும் சிக்கிக் கொண்டாள். பாவம்..."

"காட்! ஆனால் அவள் உடம்பைப் பார்த்தால் விபத்தில் அடிபட்ட மாதிரி தெரியவில்லையே!"

"ஏய்... நீ எங்கேயும் எப்போதும் படத்தில வர்ற மாதிரி ஹாஸ்பிடல் ஐ.சி.யூ.வில் பேஷண்ட்ஸ் எல்லாம் இருக்கணும் என்று எதிர்பார்க்கிறாயா?"

"அண்ணா... அப்படி இல்லை. அவள் துறுதுறுவென இருக்கிறாள். அதுதான் கேட்டேன்."

"ம்... அவளுக்கு உடம்பில் பாதிப்பு இல்லை."



"யூ மீன்... அப்ப மனசில் பிரச்சினையா? சைக்கியாட்ரிஸ்ட் அட்டெண்ட் செய்ய வேண்டிய பேஷண்ட் போல..."

"அப்படி எல்லாம் இல்லை. அவளுக்குப் பழசு எதுவும் ஞாபகம் இல்லை. உனக்கு மெடிஸன் பற்றி எதுவும் தெரியாது. அதனால் வாய்க்கு வந்ததைப் பேசாதே. குறிப் பாக என் பேஷண்ட் பற்றி...

"இந்த நிலைமையைத் துணிவாக எடுத்துக் கொண்டு ரொம்ப ஸ்போர்டிவாக இருக்கிறாள். வேறு யாராவது என்றால் அழுது கொண்டு ஒரு அறையில் முடங்கி இருப்பார்கள்.

"கணினியுடன் மட்டுமே நேரத்தைச் செலவழித்துக் கொண்டிருக்கும் உனக்கு... மனிதர்களைப் பற்றி என்ன தெரியும்?" - படபடத்தான் அத்வித்.

சுப்ரியாவின் முகம் சுருங்கிப் போனது.

அத்வித் இப்படி எல்லாம் தன்னை எல்லார் முன்னிலையிலும் அவமானப்படுத்துவான் என்று அவள் துளிக்கூட எதிர்பார்க்கவில்லை.

"என்னடா அத்வித் இது... ஒரு சின்ன விஷயத்துக்குப் போய் ப்ரியாவை இப்படிக் கடிஞ்சிக்கிறே?"

"இல்லை... அம்மா. ப்ரியா சொன்னது தப்பு. அனன்யா பாவம். அவளைப் பற்றி இப்படிப் பேசுவதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது."

"ஸாரி..." என்று வேண்டா வெறுப்பாகச் சொன்னாள் சுப்ரியா.

"சரி... ப்ரியா! நீ உன் அறையில் போய்க் கொஞ்ச நேரம் ஓய்வெடு..." என்றாள் மீனா.

"சரி ஆன்ட்டி!"

"அத்வித், அவள் அறையை அவளுக்குக் காட்டு. அபிஷேக் வெளியே வேலையா போயிருக்கான். உன்கிட்ட சொல்லச் சொன்னான். அப்புறம் அந்த அணில் என்ன ஆச்சுடா? உயிரோடுதானே இருக்கு..."

"அம்மா... அனன்யா அணிலை மிதிக்கவே இல்லை. அது தூங்கிண்டு இருக்கு. அது தூங்கறதால ஆடாமல் அசையாமல் இருந்திருக்கு. அதைப் பார்த்திட்டுப் பயந்திட்டா அவ. ரொம்ப மென்மையான மனசு அவளுக்கு!"

அதைக் கேட்டுக் கொண்டிருந்த சுப்ரியாவுக்கு பி.பி. ஏறியது. மென்மையான மனசாமே... அவளுக்கு. ஆஹா... என்ன ஒரு அக்கறை அவள் மேல்.

எனக்கு மனிதர்களைப் பற்றி எதுவும் தெரியாது. ஏனென்றால் நான் கணினியோடு நேரத்தைச் செலவிடு பவள்.

ஆனால் அவளுக்கு அணில்குட்டி மேல்கூடப் பரிவு பொங்கும். அதைப் பார்க்கப் பார்க்க ஐயாவுக்குக் கனிவு பொங்கும்.

சே! சரியான மோகினிதான். அதுதான் அத்வித் அவளுக்காக இப்படி உருகுகிறான். மோகினி! ஆளை மயக்கும் மோகினி.

மனதிற்குள் அவளையும் அத்வித்தையும் திட்டியபடியே அத்வித்தைப் பின் தொடர்ந்தாள் சுப்ரியா.



## 10

நீ
போகும்
பாதையில்
நான்
காத்து
இருக்கிறேன்!
..........
காத்து
இருப்பது
கொடுமை!
..........
புரிகிறது
ஒவ்வொரு
தடவை
உனக்காகக்
காத்து
இருக்கும்
பொழுது!
..........
சீக்கிரம்
வா,
பெண்ணே!

அடுத்த நாள் காலை சுப்ரியா அலுமின் நிலையத் திற்குக் கிளம்பிக் கொண்டு இருந்தாள். ஒரு நீலவண்ண சல்வாரில் தன்னை நுழைத்துக் கொண்டாள்.

கண்களை உறுத்தாத அளவிற்கு லேசான ஒப்பனை செய்து கொண்டாள்.

அறையை விட்டு வெளியே வந்தவளின் கண்களில் பட்டது அத்வித். சோபாவில் கண்மூடித் தலை சாய்த்துப் படுத்து இருந்தவனைப் பார்க்க ஏனோ கஷ்டமாக இருந்தது.

உடம்பு ஏதேனும் சரியில்லையா... இல்லை, ராத்திரி சரியாகத் தூங்காததால் சோர்வாக இருப்பதால் இப்பொழுது சும்மா படுத்து ரெஸ்ட் எடுக்கிறானோ என யோசித்தபடியே சோபா அருகே சென்றாள்.

காலடிச் சப்தம் கேட்டுச் சட்டெனக் கண்களைத் திறந்தான் அத்வித். அழகாகத் தனக்குப் பிடித்த நீல வண்ண உடையில், கண்களில் பதட்டத்தைச் சுமந்தபடி தன் முன்னால் நின்ற சுப்ரியாவைப் பார்த்தவுடன், அவன் மனம் அவளிடம் பேச வேண்டும் எனத் துடித்தது.

ஆனால் தன்மானம் தடுத்தது. மனது ஒன்று சொல்ல, மூளை ஒன்று சொல்ல, என்ன செய்வது என்று புரியாமல் குழம்பினான் அத்வித்.

அவனுள் தயக்கம். ஏதோ ஒரு இடைவெளி தனக்கும் சுப்ரியாவுக்கும் இடையே உள்ளது என்று அவனுக்குப் புரிந்தது. இருவர் கண்களும் சந்தித்தன.

"உடம்பு சரியில்லையா அத்வித்..." என்று மௌனத்தை உடைத்தாள் சுப்ரியா.

"ம்... ஆமாம்... நேற்று ஒரு எமெர்ஜென்ஸி கேஸ். நைட் சரியாகத் தூங்க முடியவில்லை. அதனால் டயர்டாக இருக்கிறது."



"ஓ... அப்படியா? நான் குடிக்க ஏதாவது சூடாகக் கலந்து எடுத்து வரவா?"

"ம்... வெந்நீரைத் தவிர உனக்கு வேறு என்ன சூடாகக் கலக்கத் தெரியும்?" - என்றவனின் கண்களில் குறும்பு மின்னியது.

அவள் பதில் சொல்ல வாயைத் திறந்தாள்.

"டாக்டர்... இந்தாங்க! சூடா ஹார்லிக்ஸ். இதைக் குடிங்க..." - என்று ஆவி பறக்கும் கோப்பையை அத்வித் முன்னே நீட்டினாள் அநன்யா.

அதைப் பார்த்த சுப்ரியாவின் முகம் இறுகியது.

"ஓ...! தேங்க்ஸ் அநன்யா!" - என்றபடியே ஹார்லிக்ஸைக் குடித்துக் கொண்டு இருந்த அத்வித்தை எரித்து விடுவது போல் பார்த்தாள்.

குடிப்பதைப் பார்... மோகினி கையால் கொடுத்தால் எது வேண்டுமானாலும் குடித்து விடுவான் போல என மனதிற்குள் குமைந்தாள்.

ஏதும் சொல்லாமல் அங்கு இருந்து வேகமாகக் கிளம்பினாள் அவள்.

"சுப்ரியா... ஐ.ஜி. கேர் தானே போற இப்ப?"

"ஆமாம்! நான் காலையில் ரிப்போர்ட் செய்யணும்!"

"நான் உன்னை டிராப் செய்யறேன்."

"ம்... வேண்டாம். பாவம், நீங்களே ரொம்ப டயர்டா இருக்கீங்க. வீட்டில இருந்து ஹார்லிக்ஸ் குடிச்சு உடம்பைத் தேத்துங்க!" - என்றாள் படபடவென.

"ஆ... சூடு ரொம்ப!"

"ஸாரி டாக்டர்... நான் ரொம்ப ஆத்தினால் ஆறி விடும் என்று; ஆத்தவில்லை... ஸாரி டாக்டர்!"

"நான் உன்னைச் சொல்லவில்லை அநன்யா. சுப்ரியாவைத்தான் சொன்னேன். அவள் கோபமாக இருக்கிறாள். அதுதான் சூடாக வார்த்தைகள் வருகின்றன."

"நான் யார் உங்கள் மேல் கோபப்பட?"

"ம்... அதை நீதான் முடிவு செய்ய வேண்டும்!"

அதற்கு மேல் அங்கே நிற்காமல் வேகமாக வெளியேறினாள் சுப்ரியா. வெளியே கம்பெனி கார் தயாராக நின்று கொண்டு இருந்தது.

அதில் ஏறி உட்கார்ந்தாள் அவள். அத்வித் சொன்னதே அவள் காதில் ஒலித்துக் கொண்டு இருந்தது. பேச்சைப் பார்... திருடன்... சரியான திருடன்.

நான்தான் முடிவு செய்ய வேண்டுமாம். நான் முடிவு செய்தால் அப்படியே கேட்டு விடுகிற மாதிரிப் பேச்சு. அத்வித்தோட முதல் காதல் மருத்துவம். இரண்டாவது காதல் இந்த ஊர் - கல்பாக்கம். இந்த ஊரில் உள்ள மக்கள். அதற்குப் பின்பு வேண்டுமானால் நான் அத்வித் மனதில் இருக்கலாம்.

ம்... இருக்கலாம். 'இருப்பேன்' என்று உறுதியாகச் சொல்ல முடியாது. இப்பொழுது உள்ள நிலைமை அப்படி. வீட்டிலேயே பேஷண்ட் என்ற பெயரில் ஒரு மோகினி இருக்கிறாள்.



அதனால் என் நினைப்பு இருக்கக்கூட வாய்ப்பு இல்லை. யோசனையில் மூழ்கி இருந்தவளைக் கலைத்தது ஓட்டுனரின் குரல்.

"மேடம்... இறங்கலையா! இதுதான் ஐ.ஜி. கேர்!"

"ஓ...! தேங்க்ஸ். நான் ஏதோ யோசனையில் இருந்தேன். அதுதான் கவனிக்கவில்லை." பிரம்மாண்டமான அந்த இடத்தைப் பார்த்துத் திகைத்தாள் சுப்ரியா. செக்யூரிடியின் அருகில் இருந்த ரிஜிஸ்தரில் கையெழுத்துப் போட்டுவிட்டு உள்ளே சென்றாள் சுப்ரியா, வரவேற்பறையை நோக்கி.

"ஹலோ நான் சுப்ரியா. இங்கு ஈ.டி.பி. டிபார்ட் மெண்ட்டில் உள்ள மனோகரைப் பார்க்க வேண்டும்."

"ஓ...! உட்காருங்க மேடம். ஸார்கிட்ட சொல்றேன்!"

"தேங்க்ஸ்!" - என்றபடியே அங்கு இருந்த சோபாவில் உட்கார்ந்தாள் அவள்.

வரவேற்பறையை அலங்கரித்த அந்தப் பெண் இண்டர்காம் மூலம் மனோகரைத் தொடர்பு கொள்வது அவளுக்குத் தெரிந்தது.

"மேடம்... ஸாரைப் பார்க்கலாம் நீங்க. இங்கு இருந்து நேராகப் போனால் மூன்றாவது அறை!" - என்றாள் அந்த வரவேற்பறைப் பெண்.

"சரி... தேங்க்ஸ்!" என்று சொல்லிவிட்டு அவள் சுட்டிக்காட்டிய அறையை நோக்கி நடந்தாள் அவள்.

கண்ணாடிக் கதவு திறந்து இருந்தது. அந்த அறையினுள் நுழைந்தாள் சுப்ரியா.

"குட்மார்னிங்... ஐயாம் சுப்ரியா!"

"குட்மார்னிங்... வாங்க மேடம்... உட்காருங்க. ஐயாம் மனோகர்!"

"நைஸ் மீட்டிங் யூ ஸார்!"

"ரொம்ப நாளாகவே இந்தப் பயிற்சி எங்க ஈ.டி.பி. ஸ்டாப்பிற்குத் தேவைப்படுகிறது. நாங்கள் நிறையக் கம்பெனிகளில் கேட்டு இருந்தோம். யாருமே சரியான பதிலைத் தரவில்லை. இந்த 'ஸாப்ட்வேர்' ரொம்பக் கம்பெனி களில் இப்ப உபயோகப்படுத்துவது இல்லை போல. அதனால் நிறையக் கம்பெனிகளில் இந்தப் பயிற்சிக்கான ஆட்கள் இல்லை என்று சொல்லி விட்டார்கள்.

"எங்களோட நல்ல நேரம், கடைசியாக உங்க கம்பெனி எங்களோட ஸ்டாப்பிற்குப் பயிற்சி கொடுக்க முன் வந்தாங்க. வெல்கம் மேடம். இன்னும் மூன்று மாதங்கள் நீங்க இங்கதான் இருக்கப் போறீங்க!"

"யெஸ் ஸார்... எப்படியும் ட்ரெயினிங்கை முடிக்க மூன்று மாதங்கள் ஆகும்!"

"சரி... இங்க எங்க தங்கி இருக்கீங்க மேடம். கம்பெனி கெஸ்ட் ஹவுஸ் இருக்கு. எல்லா வசதியும் இருக்கு அங்கே! பாதுகாப்பானதும் கூட! நீங்க அங்கேயே தங்கிக்கலாம்!"

"இல்லை ஸார். நான் என் அண்ணன் ஃபிரெண்ட் வீட்டில்தான் தங்கி இருக்கேன். அங்கு எந்தப் பிரச்சனையும் இல்லை. எந்த அசௌகரியமும் இல்லை!"

"ஓ... அப்படியா! உங்க அண்ணன் ஃபிரெண்ட் பெயர் என்ன? எனக்குத் தெரிந்து இருக்க வாய்ப்பு இருக்கு. அதனால்தான் கேட்டேன்."



"அவர் பெயர் அத்வித். டாக்டர்... அவர்... இங்க..." - என்று சுப்ரியா முடிப்பதற்குள் குறுக்கிட்டார் மனோகர்.

"ஓ...! எஜமான் வீடா?"

"எ... என்னது எஜமானா?"

"ம்... கல்பாக்கத்தில் உள்ள மக்கள் எல்லோரும் அவரை எஜமான் என்றுதான் அழைப்பார்கள். நீங்கள் சும்மா என்னிடம் பேசியது மாதிரி வேறு யாரிடமும் 'அத்வித்' என்று பெயர் சொல்லி அழைக்காதீர்கள். அப்புறம் நீங்கள் அவர்களுக்கு எதிரியாகி விடுவீர்கள்!

"பட்... அவரை ஏன் அப்படி அழைக்கிறார்கள்? அட்லீஸ்ட் டாக்டர் என்று அழைத்தாலாவது பரவாயில்லை!"

"ம்... இங்குள்ள மக்களுக்கு அவர் நிறைய நன்மைகள் செய்துள்ளார். குறைந்த செலவில் மக்களுக்கு மருத்துவம் பார்க்கிறார். அவர் ஹாஸ்பிடலில் எல்லா நவீனக் கருவிகளும் உள்ளன. நல்ல மருத்துவர்கள் உள்ளனர்.

"அதைத் தவிர நூலகம், பார்க், விளையாட்டுத் திடல் என நிறைய உபயோகமான நல்ல விஷயங்கள் அவரால் இங்கே நடைமுறையில் உள்ளன. அதை எல்லாம் தாண்டி இப்ப இன்னொரு விஷயத்தில் மக்கள் செல்வாக்கை அவர் அப்படியே அள்ளிக் கொண்டு விட்டார்."

"அப்படி என்ன விஷயம் ஸார் அது?" - படபடத்தாள் சுப்ரியா.

'மோகினி' பற்றி ஏதாவதாக இருக்குமா என்று அவள் மனதில் யோசனை ஓடியது. சே... சே... அதெல்லாம் இருக்காது என்று தன்னையே சமாதானப்படுத்திக் கொண் டாள் அவள்.

"என்ன மேடம் இப்படிக் கேட்டுட்டீங்க! நிஜமா உங்களுக்குத் தெரியாதா?"

"தெரியாது ஸார்!"

"எல்லா லோக்கல் பேப்பரிலும் செய்தி வந்ததே மேடம்!"

"நான் கல்பாக்கத்தைச் சேர்ந்தவ இல்லை ஸார்!"

"கரெக்ட்தான். ஆனாலும் உங்களுக்குத் தெரிஞ்சு இருக்கணுமே!"

சுப்ரியாவின் பொறுமை கொஞ்சம் கொஞ்சமாக அவளை விட்டுப் போகத் தொடங்கியது. கஷ்டப்பட்டுத் தன்னை அடக்கிக் கொண்டாள் அவள்.

சரியான தலைவலி இந்த ஆளோடு. சொல்ல வேண்டியதைச் சொல்லாமல் 'சஸ்பென்ஸ்' வைத்துப் பேசுகிறானே... என்று மனதிற்குள் திட்டியபடி இருந்தாள்.

"மேடம்... அத்வித் ஸார் இங்கே இன்னொரு அணுமின் நிலையம் வரக்கூடாது என்பதில் மும்முரமாக இருக்கிறார். அதனால் இங்கே வருவதாக இருந்த அணுமின் நிலையம் பிளான் எந்த முன்னேற்றமும் இல்லாமல் காகிதத்தில் உள்ளது."

"ஓ...! ஆனால் அரசாங்கத்தின் பிளான் ஆச்சே அது! அதை எப்படி ஒரு தனி மனிதன் தடை சொல்ல முடியும்?"

"ம்... உங்கள் கேள்வி நியாயமானது. ஆனால் அத்வித் ஸார் சொல்வதைத்தான் மக்கள் கேட்பார்கள். அவருடைய பேச்சு செல்வாக்கு அப்படி!"



"ம்... ஆனால் எதற்காக அவர் தடை சொல்கிறார்... இந்தப் புதிய அணுமின் நிலையத்திற்கு?"

"சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் பாதுகாப்புக் கருதித்தான் இது தேவை இல்லை என்று ஸார் சொல்கிறார். சுனாமியின் பொழுது வந்த பரபரப்பை என்னால் மறக்க முடியவில்லை. அப்பொழுது அதை மூடி விட்டார்கள். எந்தப் பாதிப்பும் இல்லை.

"ஜப்பானிலேயே மக்கள் இதைக் குறித்து ரொம்ப அச்சப்படுகிறார்கள். கதிர் வீச்சின் பாதிப்பு அவ்வளவு அபாயகரமானது. அது நூற்றாண்டு காலங்கள் ஆனாலும் காற்றில் இருக்கும் என்பது விஞ்ஞானப் பூர்வமான உண்மை. போபால் விஷ வாயுக் கசிவு காரணமாக இன்னும் குழந்தைகள் ஊனமாகத்தானே அங்கே பிறக்கின்றன. அதனால்தான் ஸார் தீர்மானமாக இந்தப் புதிய ப்ராஜெக்டை எதிர்க்கிறார். "

"ம்... கூடன்குளத்திலும் அதே மாதிரிதானே இருக்கிறது இப்பொழுது. அங்கேயும் மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கிறார்களே!"

"ஆமாம் மேடம்! இப்பொழுது மக்களிடையே நல்ல விழிப்புணர்வு வந்து இருக்கிறது."

"கூடன்குளம் ப்ராஜெக்ட் பற்றி மக்களிடம் பேசுவதற்காக முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமைத் தூதுவராக அனுப்பி வைத்தார்கள். அதேபோல் இங்கே அத்வித்தின் மனதை மாற்றுவதற்கும் யாரையாவது அனுப்ப வேண்டும் போல அரசாங்கம்!"

"ம்... ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்...!"

"என்ன அது?"

"ஸார் சொல்வதைத்தான் இங்குள்ள மக்கள் கேட்பார்கள். அதனால் அவரைக் கன்வின்ஸ் செய்தால் தான் இந்த ப்ராஜெக்ட் முன்னேறும்!"

அவர் சொன்னதைக் கேட்டவுடன் ஏனோ 'மோகினி' யின் முகம் அவள் மனக் கண்ணில் தோன்றியது.

## 11

ஒரு
பொய்யாவது
சொல்
நீ
பெண்ணே!
உன்
மனதில்
நான்
இருக்கிறேன்
என்று!
...........
பொய்
கூட
இனிமையாக
இருக்கிறது!
...........
நீ
சொல்வதால்
பெண்ணே!



சொல்
ஒன்றே
போதும்,
எனக்கு!

"அநன்யா! எனக்கு உன் உதவி தேவை இன்னிக்கு!"

"என்ன டாக்டர் உதவி அப்படி இப்படின்னு சொல்றீங்க? நீங்க கட்டளையிடுங்கள். நான் செய்யக் கடமைப்பட்டு இருக்கிறேன். இன்ஃபேக்ட் செய்யக் காத்து இருக்கிறேன்."

உள்ளே தன் அறையில் லேப்டாப்பில் வேலை செய்து கொண்டு இருந்த சுப்ரியாவின் காதில் அவர்கள் பேசுவது தெளிவாகக் கேட்டது.

சே! என் மனம் ஏன் இப்படிச் சஞ்சலப்படுகிறது? அத்வித்தும், 'மோகினி'யும் எது வேண்டுமானாலும் பேசிக் கொள்ளட்டும்.

நான் ஏன் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டும்? நான் உண்டு என் வேலை உண்டு என்று மட்டுமே நான் இருக்க வேண்டும். அதுதான் நல்லது எனத் தனக் குள்ளேயே தீர்மானித்தாள் அவள்.

"ம்... அபிஷேக்கிற்கு ஏதோ உதவி தேவைப்படுது போல... நீ கொஞ்சம் ஹெல்ப் செய்ய முடியுமா?"

"ம்... நிச்சயமாக டாக்டர். அவர் என்னுடைய பாஸ். எனக்குச் சம்பளம் தருவதாகச் சொல்லி இருக்கார். நான் அதற்காகக் கண்டிப்பாக வேலை பார்க்க வேண்டும்."

"ம்... உனக்கு அபிஷேக்கிடம் வேலை பார்ப்பதில் அவ்வளவாக இஷ்டம் இல்லை என்று நினைக்கிறேன். நீ அவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டு வேலை பார்க்க வேண்டாம் அநன்யா."

"ம்... ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு டாக்டர்... பெக்கர்ஸ் ஆர் நாட் சூசர்ஸ். என் நிலைமை அப்படித்தான் உள்ளது. நான் விரும்பிய வேலையைச் செய்ய மட்டுமே முடியும் என்று என்னால் பிடிவாதம் பிடித்துக் கொண்டு இருக்க முடியாது."

"ஓ...! உனக்குப் பிடித்த வேலையை மட்டும்தான் செய்வாயா நீ? மகாராணிக்கு என்னென்ன வேலை பிடிக்குமோ... சொன்னால் உபயோகமாக இருக்கும்!" - என்று அபிஷேக்கின் குரல் கேட்க, அமைதியானது அந்த இடம்.

அட... அண்ணா மோகினிக்கு நல்ல பதிலடி கொடுத்து விட்டானே...! சபாஷ்... அண்ணா, நீ வாழ்க என்று மனதிற்குள் அபிஷேக்கைப் பாராட்டி ஒரு கவிதையே படித்துச் சமர்ப்பித்தாள் சுப்ரியா.

"அபிஷேக்... நீ இந்த மாதிரி கெடுபிடியா நடந்துக் கிட்டால் பாவம் அநன்யா... எப்படி உன்னிடம் வேலை பார்ப்பாள்?" - லேசான கண்டிப்புடன் ஒலித்தது அத்வித்தின் குரல்.

சே... இந்த மோகினிக்குப் பரிந்து கொண்டு பேசுகிறாரே இவர். என்ன செய்யலாம் இவரை? திருந்தவே மாட்டாரா இவர் என மனதிற்குள் வறுத்தெடுத்தாள் சுப்ரியா.



"நான் கேள்வி கேட்டது அநன்யாவை... அத்வித்! உன்னை அல்ல! நீ என்ன அவளுக்கு 'மவுத்-பீஸா' என்ன? அவளைக் கேட்டால் நீ பதில் சொல்கிறாயே! நல்ல நியாயம்தான் இது?"

"அபிஷேக்... நான் அவளுக்கு 'மவுத்-பீஸ்' இல்லை. பட் அவள் என்னுடைய பாதுகாப்பில் இருக்கிறாள். அதனால் நீ உன் இஷ்டப்படி பேச முடியாது."

"ஸாரி டாக்டர்! என்னால் உங்க ரெண்டு பேருக்கும் கஷ்டம். அநாவசியப் பேச்சு வார்த்தை!"

பேசுவதெல்லாம் பேசிவிட்டு இப்ப பார் ஸீன் போடறதை! என்னமா ஸீன் போடறா! இவளை இப்படியே விடக்கூடாது என்று உள்ளே இருந்தபடியே பொருமினாள் சுப்ரியா.

"நான் என்ன வேலை செய்ய வேண்டும் ஸார், சொல்லுங்க."

"ம்... முதலில் என் அறைக்குள் வா. நான் சொல்கிறேன். லேப்டாப் அங்கேதான் இருக்கிறது!"

"சரி ஸார்."

அறைக்குள் நுழைந்த அபிஷேக்கைப் பின் தொடர்ந் தாள் அநன்யா. டேபிளில் லேப்டாப் இருந்தது.

"லேப்டாப்பை எப்படி உபயோகப்படுத்த வேண்டும் என்று தெரியுமா?"

அவள் மௌனமாக இருந்தாள்.

"கேள்வி கேட்டால் பதில் சொல்ல வேண்டும். சும்மா இருப்பது சரி இல்லை!"

"ஸாரி ஸார்... எனக்கு இதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை."

"ம்... தெரியும்... தெரியாது என்று பதில் சொல்ல வேண்டியதுதானே!"

"எனக்கு இது ஞாபகம் இல்லை. ஆனால் லேப்-டாப் புதுசு மாதிரி எனக்குத் தோன்றவில்லை ஸார். நான் இதில் வொர்க் செய்து இருக்கிறேன் என்று நினைக்கிறேன்!" என்றாள் மெல்லிய குரலில் அநன்யா.

"ஓ... ஸாரி. நான் உன் நிலைமையை மறந்து விட்டேன். அப்புறம் ஒரு விஷயம்... என்னை ஸார் என்று அழைக்காதே! எனக்கு அது பிடிக்கவில்லை."

"சரி ஸார்..." - என்றவள் சட்டென நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

"ஸாரி ஸார்... சே... ஸாரி..."

அபிஷேக்கின் உதட்டில் புன்னகை படர்ந்தது. அநன்யாவும் லேசாகப் புன்னகைத்தாள்.

"அநன்யா! நான் இண்டர்நெட் மூலமாக ஒரு பிஸினெஸ் செய்கிறேன்."

"அப்படியா ஸார்! ஸாரி... ஆன்லைன் மூலமாக என்ன வியாபாரம் செய்கிறீர்கள்?"

"பரவாயில்லையே! இண்டர்நெட் என்றவுடன் ஆன்லைன் என்று கரெக்டாகக் கண்டு பிடித்து விட்டாயே!"

"ம்... சில விஷயங்கள் புதிது போல் எனக்குத் தோன்றவில்லை. ஆனால் எல்லா மனிதர்களும் புதிதாகத்



தோன்றுகிறார்கள். என் நிலைமையைக் கண்டு எனக்கே வெறுப்பாக இருக்கிறது."

"ஐயாம் ஸாரி... உன்னை அப்செட் செய்யணும் என்பது என் எண்ணம் இல்லை!"

"பரவாயில்லை, சொல்லுங்க... நான் என்ன வேலை செய்ய வேண்டும்?"

"ம்... கணினி மூலமாக நிறைய பிஸினெஸ் செய்யலாம். லைப்ரரியில் இதன் மூலமாகப் புத்தகங்கள் இருக்கிறதா இல்லையா என்று கஸ்டமர்கள் தெரிந்து கொள்ளலாம். கணினி மூலமாக சூப்பர் மார்க்கெட், மருத்துவமனை, ரெயில்வே, ஏர்வே என நிறையத் துறைகளில் 'பில்லிங்' செய்கிறார்கள்.

"நான் கொஞ்சம் வித்தியாசமான முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறேன். காய்கறிகள் மற்றும் பழ வகைகளை நான் கணினி மூலம் ஆர்டர் எடுத்துக் கொண்டு, பின்னர் அதை அவரவர் வீடுகளுக்கு அவர்கள் குறிப்பிடும் நேரத்தில் டெலிவரி செய்ய ஏற்பாடு செய்கிறேன்."

"அட... இது ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறதே! முன்பெல்லாம் காய் வாங்குவதற்கு மார்க்கெட் போக வேண்டும். பின்பு நிறைய சூப்பர் மார்க்கெட்ஸ் வந்தன. இப்பொழுது வீட்டுக்கே காய் மற்றும் பழங்களைக் கணினி மூலம் ஆர்டர் எடுத்து டெலிவரி செய்கிறீர்களா?"

"யெஸ்... நான் இந்தத் தொழிலில் ஈடுபடுவது நிறையப் பேருக்குப் பிடிக்கவில்லை. இது ரொம்ப லாப கரமான தொழில் இல்லை என்று என்னைப் பயமுறுத் தினார்கள்."

"ஓ... அப்படியா?"

"அவர்கள் சொல்வதிலும் உண்மை இருக்கத்தான் செய்தது. இதே மாதிரி ஒரு முயற்சியில் சில ஆண்டுகள் முன்பு, ஐ.ஐ.எம்.மைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் ஈடுபட்டனர். ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை... இந்த வியாபாரம் அவர்களுக்குச் சரிப்பட்டு வரவில்லை. அதனால் அவர்களுக்கு இரண்டு கோடிக்கு மேல் பணம் நஷ்டம்."

"காட்! இது எல்லாம் தெரிந்தும் நீங்கள் மீண்டும் அதே பிஸினெஸில் ஈடுபடத் துணிந்தீர்களே! எனக்கு இது ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறது."

"ம்... புதிதாக ஒன்றில் ஈடுபடுவதற்கு முன்பு அதைச் சார்ந்த விஷயங்கள் எல்லாவற்றையும் நான் தெரிந்து கொள்வேன். அது என்னுடைய வழக்கம். ஆனால் அந்த விஷயங்களை வைத்து என் முடிவை மாற்றிக்கொள்ள நான் முயல மாட்டேன். பெரும்பான்மையான சமயங்களில் நான் அப்படித்தான்!"

"ம்... விஷயங்களைச் சேகரிப்பதே முடிவுகளை எடுப்பதற்குத்தான். ஆனால் நீங்கள் வித்தியாசமான அணுகு முறையைப் பின்பற்றுகிறீர்கள்!"

"ம்... இது கேலியா? இல்லை பாராட்டா?"

"உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது?"

"ம்... உண்மையைச் சொல்லவா?"

"ம்... சொல்லுங்க!"



"நீ சொல்வது உண்மை என்று நான் நம்புகிறேன். அதற்குக் காரணம் உன் கண்கள். அதில் உண்மை தெரிகிறது. ஆனால் சொல்வது நீ என்பதால் என் மூளை அதை நம்ப மறுக்கிறது."

அவள் இதழ்களில் புன்னகை படர்ந்தது.

"ம்... நீங்கள் உங்கள் மூளை சொல்வதைத்தான் கேட்பீர்கள் என்று எனக்குத் தோன்றுகிறது."

"ம்... கரெக்ட். நான் ஒரு எக்ஸ்ட்ராவெர்ட். அப்புறம் என் முடிவுகள் எல்லாமே ஒரு லாஜிக்கைச் சார்ந்தே இருக்கும். அப்படி என்றால் என்னவென்று தெரியுமா? நான் சொல்வது உனக்குப் புரிகிறதா, அநன்யா?"

"ம்... புரிகிறது! எக்ஸ்ட்ராவெர்ட் என்றால் சட்டென எல்லாரிடமும் சகஜமாகப் பேசும் இயல்புடைய ஆண், இல்லை, பெண்ணைக் குறிக்கும். அவர்களால் சுலபமாக யாரிடம் வேண்டுமானாலும் பழக முடியும். எந்த ஒரு சூழ்நிலையிலும் அவர்கள் ரொம்ப யோசித்து முடிவெடுக்க மாட்டார்கள்.

"அவர்கள் கடைசி நிமிட பிரஷர்களை எல்லாம் ரொம்பக் கூலாக எடுத்துக் கொள்வார்கள். ம்... உதாரணத்திற்கு ஒரு முக்கியமான மீட்டிங்கில் கடைசி நிமிஷத்தில் பேச வேண்டிய ஒரு முக்கியமான நபர் வரவில்லை என்று வைத்துக் கொள்வோம்.

"அதற்கெல்லாம் நீங்கள் பதற மாட்டீர்கள். ஏன் என்றால் நீங்கள் ஒரு எக்ஸ்டராவெர்ட். கடைசி நிமிட டென்ஷன் எல்லாம் நீங்கள் ரொம்ப சகஜமாக எடுத்துக் கொள்வீர்கள். என்ன, நான் சொன்ன பதில் ஓ.கே.வா?"

"வாவ்! ரொம்பச் சரி! அப்புறம் என் ஜட்ஜ்மெண்ட்... அதாவது முடிவெடுக்கும் திறமை பற்றி..."

"ம்... நீங்கள் உங்கள் மனம் - அதாவது உள்ளுணர்வு சொல்வதை வைத்துச் சட்டென முடிவெடுக்க மாட்டீர்கள். உங்களுக்கு எல்லாவற்றுக்கும் ஆதாரம் வேண்டும். நீங்கள் ஃபேக்ட்ஸை நம்புவீர்கள். கணிதத்தில் அப்புறம் விஞ்ஞானத்தில் நல்ல திறமை உள்ளவர்கள் பெரும்பாலும் இந்த வகையைச் சார்ந்தவர்களாக இருப்பார்கள்.

" 'மையர்ஸ் அண்ட் பிரிக்ஸ்' என்று இருவர் சேர்ந்து 'டெம்பர்மெண்ட் இண்டிகேட்டர்' என்று ஒன்றைக் கண்டு பிடித்தார்கள். யார் எந்தக் குணம் என்பதை இதன் மூலம் கண்டுபிடிக்கலாம். அவர்கள் ஒவ்வொருவர் பெர்ஸனாலிடியைக் கண்டுபிடிக்க நிறையக் கேள்விகளைத் தயார் செய்து இருக்கிறார்கள்.

"இது ரொம்பப் பிரபலமான கருவி, பெர்ஸனாலிடியைக் கண்டுபிடிக்க. இதை வேலை கொடுப்பதற்கு முன்பு நிறைய நிறுவனங்கள் தங்கள் கம்பெனியில் வேலை செய்யப் போகிறவர்களின் பெர்ஸனாலிடியைத் தெரிந்து கொள்ள உபயோகப்படுத்துகிறார்கள்.

"அது மட்டும் இல்லை... திருமணம் செய்து கொள்வதற்கு முன்பு மணமகனும் மணமகளும் இந்தக் கருவியில் உள்ள கேள்விகளுக்குப் பதில் அளித்து அவரவர் பெர்ஸனாலிடியைப் பற்றித் தெரிந்து கொள்கிறார்கள். இது வெளிநாட்டில் ரொம்பப் பிரபலம் ஆன ஒன்று. இன்னும் இந்தியாவில் இது சரியாக உபயோகப்படுத்தப் படவில்லை!" - என்றாள் அழுத்தமாக அவள்.



அவன் கைதட்டினான், புன்னகைத்தபடியே.

"சூப்பர் அநன்யா! அற்புதம். உனக்கு எவ்வளவு விஷயங்கள் தெரிந்து இருக்கிறது. என்னால் நம்ப முடிய வில்லை. இவ்வளவு சின்ன வயதில் அழகாக இவ்வளவு விஷயங்களை எடுத்துச் சொல்கிறாயே! நீ கண்டிப்பாக எம்.பி.ஏ. படித்து இருப்பாய் என்று எனக்குத் தோன்றுகிறது. படித்ததை ஞாபகமாகச் சொல்கிறாயே... அமேசிங்!"

"ம்... இதெல்லாம் ஞாபகம் இருக்கிறது. பட்... எது தேவையோ அது எனக்கு நினைவில்லையே! என்ன செய்வது?" - என்றாள் மெலிந்த குரலில் அவள்.

அவள் முகத்தில் ஏமாற்றம் தெரிந்தது. அவள் முகத்தைப் பார்க்க அபிஷேக்கிற்குப் பாவமாக இருந்தது.

"கவலைப்படாதே! உனக்குச் சீக்கிரமாக நினைவு திரும்பிவிடும். அத்வித் இஸ் எ குட் டாக்டர்!" - என்றான். மென்மையாகப் புன்னகைத்தபடியே.

"தேங்க்ஸ்!" - என்றாள் அவளும், புன்னகை ஒன்றை வழங்கியபடியே!

# 12

## நட்சத்திரங்களால்
## அமைக்கப்பட்ட
## கூரை
## நம்
## வீட்டிற்கு!

நிலவுப்
பெண்
தலையணையாக!
பஞ்சுப்
பொதிகளாக
மேகக்
கூட்டங்கள்
நமக்காக!
.........
நமக்கே
நமக்காகக்
காத்துக் கொண்டு
இருக்கின்றன!
எங்கே
நீ?
சீக்கிரமாக
வா, பெண்ணே!

"ம்... உனக்கு என் கம்பெனியில் என்ன வேலை என்று கேட்கவில்லையே, அநன்யா?"

"ம்... கேட்க வேண்டும் என்று நினைத்தேன். அதற்குள் நீங்கள் என்னைப் புகழ்ந்து தள்ளினீர்கள். அதனால் ஏற்பட்ட குளிரில் என் உடலும் மூளையும் மரத்துப் போய்விட்டன!" - என்றாள் கண்களில் குறும்பு மின்ன அநன்யா.



"அட... நீ ரொம்ப ரிலாக்ஸ்டா இருக்கியே... உனக்கு ரொம்பக் கஷ்டமான வேலை தான் கொடுக்க வேண்டும் போல."

"ம்... உங்கள் கம்பெனியின் பழங்களையும் காய் களையும் டெலிவரி மட்டும் செய்யச் சொல்லி விடாதீர்கள்."

"ஏன்... 'டெலிவரி- கேர்ல்' வேலை உனக்குப் பிடிக்க வில்லையா? உன் தரத்திற்கு அது குறைந்த வேலை என்று நினைக்கிறாயா?"

"அச்சச்சோ... அதெல்லாம் இல்லை!"

"அப்புறம் ஏன் தயங்குகிறாய்? வொயிட்-காலர் வேலைதான் வேண்டும் என்று நினைக்கிறாயா?"

"நோ... நோ வே. நான் போகும் ரூட்டை மறந்து போய் விடுவேனோ என்று பயம். ஒரு வீட்டிற்குக் கொடுப்பதற்குப் பதில் வேறு ஒரு வீட்டிற்குப் போய்க் கொடுத்துவிடப் போகிறேன் என்று ஒரு பயம் எனக்கு!"

அவன் அதைக் கேட்டுக் கலகலவெனச் சிரித்தான். சிரிக்கும் பொழுது மீசையின் கீழ் மின்னிய வெண் பற்கள் அவள் மனதை ஏதோ செய்தன.

"அதைத் தடுக்க இப்படிச் செய்யலாமே!"

"எப்படிச் செய்யலாம்?"

"ம்... நீ 'கஜினி' படத்தில் வரும் சூர்யா போல் பேப்பரில் அங்கங்கே வழி எல்லாம் எழுதி வைத்துக் கொள்!"

"ம்... என் நிலைமை உங்களுக்குக் கிண்டலாகி விட்டது... என்ன செய்வது?"

"கமான்... ஸ்போர்டிவாக எடுத்துக் கொள்வோம் என்று நான் நினைத்தேன்!"

"ம்... நான் ஒன்றும் அழவில்லையே! ஸ்போர்டிவாகத் தான் எடுத்துக் கொள்கிறேன்!"

"ம்... ஆனால் முகம் டல்லாகி விட்டதே!"

"என் முகமே அப்படித்தான்!"

"அப்படி ஒன்றும் எனக்குத் தோன்றவில்லை!"

"நல்லாப் பாருங்க... உங்களுக்குத் தெரியும்!" - என்றவள் கண்களை விரித்து நாக்கை நீட்டிப் பயம் காட்டினாள்.

அவன் அவள் செய்யும் குறும்புகளைப் பார்த்துச் சிரித்தான்.

"நீ எப்படி இருந்தாலும் அழகுதான்!"

"அட! டயலாக் எல்லாம் நல்லா இருக்கே!"

"டயலாக் இல்லை... உண்மைதான்!"

"இப்ப நீங்க உங்க மனசு சொல்றதைக் கேக்கறீங்க... மூளை சொல்றதை இல்லை!"

"பரவாயில்லை...!" - என்றபடியே அவளை நெருங்கினான் அவன்.

"ப்ளீஸ்! விளையாட்டுப் போதும். நான் என்ன வேலை செய்ய வேண்டும் என்று சொல்லுங்க."

"ம்... இதுதான் என்னுடைய வெப்-சைட்." - என்று லாப்டாப்பில் ஒரு இணைய தளத்தைக் காட்டினான் அபிஷேக்.



"ஓ... ரொம்ப ஸிம்பிளாக ஆனால் அட்ராக்டிவாக இருக்கிறதே! வெப்-பேஜில் உள்ள பெண் போட்டோ கூட நன்றாக இருக்கிறதே!"

"யெஸ்! வீட்டிற்குத் தேவையானதை வாங்குவது பெரும்பாலும் பெண்கள்தான். அதுவும் அத்தியாவசியப் பொருட்களை வாங்குவது பெரும்பாலும் பெண்கள்தான். அதனால்தான் பெண் மாடலை ஹோம் பேஜில் வரும்படி டிஸைன் செய்தேன்."

"ம்... நீங்க ஜெனிலியா, தமன்னா, கத்ரீனா கைப் இவங்களில் யாராவது ஒருவரைத்தான் வெப்-பேஜில் மாடலாக வைத்திருப்பீர்கள் என நினைத்தேன்."

"ஆஹா... என் மேல் எவ்வளவு நம்பிக்கை உனக்கு?" அவன் கலகலவெனச் சிரித்தான்.

"சரி... சொல்லுங்க... இந்த வெப்-சைட்டில் என் வேலை என்ன?"

"சொல்லத்தான் வர்றேன். அதற்குள் நீ குறுக்கே குறுக்கே பேசற... நீ எப்பவுமே இப்படித்தானா?"

"இப்படித்தானான்னா எப்படி?"

"தொணதொணன்னு பேசிக் கொண்டு இருப்பாயா?"

"ம்... தெரியவில்லை. எனக்கு ஞாபகம் ஏதும் இல்லை!" - என்றாள் மெலிந்த குரலில்.

"பரவாயில்லை... விட்டுவிடு. உனக்கு இருப்பதே கொஞ்சம் மூளை. அதை ரொம்பக் கஷ்டப்படுத்தாதே!"

"அட... யாரோ கொஞ்ச நேரம் முன்பு எனக்கு ரொம்ப மூளை அப்படின்னு சொன்னாங்க. இப்ப இப்படிச்

மாத்தி மாத்திப் பேசறவங்களை என்ன சொல்றாங்க! ரொம்ப மாத்தி மாத்திப் பேசறவங்களை என்ன செய்யலாம்?"

"அதற்கு முன்பு நீ செய்ய வேண்டிய வேலை எல்லாம் பட்டியல் போட்டுச் சொல்லி விடுகிறேன்."

"ஓ... ஷ்யூர்..."

"இந்த வெப்-சைட் வழியாகத்தான் ஆர்டர்கள் வரும். ஒரு நாளைக்கு எவ்வளவு ஆர்டர்கள் எந்தெந்த இடத்தில் இருந்து வருகிறது என்று நீ இதில் இருந்து சேகரிக்க வேண்டும்."

"ஓ... சரி. அப்புறம்?"

"எந்த இடங்களில் இருந்து நிறைய ஆர்டர்கள் வருகிறது என்று எனக்கு ஒரு ரிப்போர்ட் வேண்டும்."

"ஓ... சரி. அப்புறம்?"

"முதலில் இதைச் செய்து முடி. அப்புறம் மற்ற வேலைகளைப் பற்றி உனக்குச் சொல்கிறேன்."

"ஓ.கே. பாஸ்!"

"ஏய்! இது என்ன? கொள்ளைக்கூட்டத் தலைவனா நான்... பாஸ் என்று அழைக்கிறாயே!"

"அட...! என்ன நீங்க... ஸார்ன்னு கூப்பிட வேண்டாம் அப்படின்னு சொல்றீங்க. அதான் பாஸ் அப்படின்னு கூப்பிட் டேன். இப்ப என்னடான்னா அதுக்கும் ஒரு அர்த்தம் சொல நீங்க. ம்... உங்களை நான் எப்படித்தான் கூப்பிடுவது?"

"பெயர் சொல்லிக் கூப்பிடு... அபிஷேக்... இல்ல அபி. ரெண்டுமே ரொம்ப ஈஸியாக வாயில் நுழையக் கூடிய பெயர்தான்!"



"நோ... நோ... அது தப்பு!"

"ஏன்?"

"பெரியவர்களைப் பெயர் சொல்லி அழைப்பது மரியாதை இல்லை!"

"தோடா... நான் என்ன ஐம்பது வயதை நெருங்கிக் கொண்டு இருக்கும் ரிடையர் ஆகப் போகும் ஆளா என்ன? நான் யூத் தான்!"

"ம்... அதை நீங்களே இப்படிச் சொல்லிக்கொண்டு அலையக் கூடாது. நாங்க சொல்லணும்."

"ஸோ...! உன்னைப் பொறுத்தவரை நான் யூத் இல்லை... அப்படித்தானே!"

"யெஸ்... யெஸ்!" - தீர்மானமாக ஒலித்தது அவள் குரல்.

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?" - அவன் குரல் பதட்டமாக ஒலித்தது.

அவள் அவனை நிதானமாகப் பார்த்தாள் தலை முதல் கால் வரை.

"ம்... பார்த்து முடிச்சாச்சா? இப்பச் சொல், நான் யூத் தானே?"

"ம்... நீங்க பார்க்க ஹாண்ட்ஸம்மாக இருக்கிறீர்கள். அது என்னவோ உண்மைதான். ஆனால்... ஆனால்..." - என்று இழுத்தாள் அநன்யா.

"என்ன ஆனால்... சீக்கிரமாகச் சொல்!" - பொறுமை இன்றி ஒலித்தது அவன் குரல்.

"ம்... யூத் என்றால் வெறும் பெர்ஸனாலிடி மட்டும் போதாது!"

"வேறென்ன வேண்டும்? நவீன கேட்ஜெட்ஸ் எல்லாம் உபயோகப்படுத்தணும். அப்படித்தானே! என்னிடம் ஐ-போன் இருக்கிறது. ப்ளாக் பெர்ரி உள்ளது. அப்புறம் லேப்டாப் இருக்கிறது. வேறு என்ன வேண்டும் சொல்!"

"அட... இதெல்லாம் இருந்தால் யூத்தாகி விட முடியுமா? முடியவே முடியாது."

ஒரு சின்னப் பெண் தனக்குச் சவால் விடுவதை அவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. கோபம் அவன் உடலில் புகை போல் படர்ந்தது.

"என்னிடம் புது மாடல் கார்கள் உள்ளன. ஃபோர்ட், ஃபியஸ்டா, ஹோண்டா சிவிக் ம்... ம்... பென்ஸ் புக் செய்து விடுவேன், அடுத்த வருடம்."

"அதெல்லாம் பணம் இருந்தால் போதும்... எழுபது வயது தாத்தாகூட வாங்கிவிடலாம்."

"என்ன இருக்க வேண்டும் யூத்திடம்? ஒரு வேளை விஜய் மல்லையா போன்றவர்கள்தான் உன் கண்களுக்கு யூத்தாகத் தெரிகிறார்கள் போல!"

"புரியவில்லை எனக்கு!"

"கிங்-பிஷர் ஏர்லைனின் சொந்தக்காரர் விஜய் மல்லையா. பணத்தை அவர் தண்ணி போல் செலவு செய்வார். ஒரு பிரபல ஹிந்தி நடிகைக்கு அவர் ஒரு தீவைப் பரிசாக அளித்து உள்ளார். ஹவாயில் உள்ள அந்தத் தீவு பல கோடிகள் பெறுமானம் உள்ளது.



"அது மட்டும் இல்லை. இன்னொரு ஹிந்தி மாடலுக்கு அவர் விலை உயர்ந்த கார் ஒன்றைப் பரிசாகக் கொடுத்து உள்ளார். உல்லாசமாக வாழ்வதில் அவருக்கு ஆசை அதிகம். அவர் க்ரூஸ் ஷிப்பில் கடல் வழியாகப் பயணம் செய்யும் பொழுது ஆடிப்பாடி மகிழ்விக்க அழகிகள் கூட்டம் கப்பலில் இடம் பெறும். அதற்கான செலவெல்லாம் அவர்தான் ஏற்றுக்கொள்வார். உன்னுடைய அகராதியில் அவர்தான் யூத் போல..."

அவன் சொன்னதைக் கேட்டு அவள் முகம் சிவந்தது. சே! எப்படி எல்லாம் பேசுகிறான் பார் என்று அவனை மனதிற்குள் திட்டினாள் அவள்.

"என்ன பதிலைக் காணோம்!"

"ம்... நீங்க சொல்றதைப் பார்த்தால் பணம் படைத்தவர்களும், பெண்களுடன் பொழுதைப் போக்குபவர் களும் தான் யூத் போல. அப்படிப் பார்த்தால் டாட்டா நிறுவனத்தை நடத்தி வரும் ரத்தன் டாட்டா இப்பொழுது ஒரு புது வகையான தங்கக் காரை விளம்பரத்திற்கு மட்டுமே பயன்படுத்தி வருகிறார். எண்பது கிலோ தங்கம், அறுபது கிலோ வெள்ளி, உயர் ரகக் கற்கள் கொண்டு உருவாக்கப் பட்ட அந்தக் கார் வெறும் விளம்பரத்திற்கு மட்டுமே! விற்பனைக்கு இல்லை!

"வளரும் நாடான இந்தியாவில் இன்னும் கோடிக் கணக்கான மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ் கிறார்கள். வட்டியின் கொடுமையைத் தாங்க முடியாமல் எவ்வளவு விவசாயிகள் தற்கொலை செய்து கொள் கிறார்கள்? அதே இந்திய நாட்டில்தான் இந்த ஆடம்பரத்

தனமான கூத்துகளும் விளம்பரம் என்ற பெயரில் நடக்கிறது!" - என்று படபடத்தாள் அநன்யா.

"ஏய்! கூல் டவுன். முதலில் விளையாட்டுத்தனமாகப் பேசினாய். இப்பொழுது ரொம்ப சீரியஸாக ஆகிவிட்டாய்!"

"ஸாரி... நான் எங்கேயோ ஆரம்பித்து எங்கேயோ முடித்து விட்டேன்!"

"ம்... இட்ஸ் ஓ.கே. ஆனால் நீ இன்னும் என் கேள்விக்குப் பதில் சொல்லவில்லையே!"

"விட்டால்... 'என் கேள்விக்கு என்ன பதில்' என்று பாட்டுப் பாடுவீர்கள் போல."

"அட... இவ்வளவு பழைய பாட்டெல்லாம் கூட உனக்குத் தெரியுதே! உனக்கு ஞாபக சக்தி ரொம்ப அதிகம்தான்!"

அவள் முகம் வாடியது. அதை அவனும் கவனித்தான்.

"அச்சோ! ஸாரி... உன் மனதைப் புண்படுத்த வேண்டும் என்று நான் அதைச் சொல்லவில்லை. ஸாரி... வெரி ஸாரி, அநன்யா."

"ம்... பரவாயில்லை! நீங்கள் வேண்டும் என்று சொல்லவில்லை. சும்மா கிண்டலுக்குத்தான் சொல்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும்."

"தட்ஸ் குட். உன்னிடம் பிடித்ததே நீ சட்டெனப் பழைய நிலைமைக்கு வருவதுதான்!"

"அதனால்தான் நான் உங்களிடம் வேலை பார்க்க ஒப்புக் கொண்டேன்."



"உன்னிடம் பேசி ஜெயிக்க முடியாது!" - என்றான் புன்முறுவலோடு அவன்.

"சரி... நீங்கள் கொடுத்த வேலையை நான் செய்யப் போகிறேன். டிஸ்டர்ப் செய்யாதீர்கள்." - என்றபடியே லேப்டாப்பை எடுத்தாள் அவள்.

## 13

இருளுக்குக்
கருமை
அழகு!
மலருக்கு
மென்மை
அழகு!
கதிரவனுக்கு
வெம்மை
அழகு!
வானவில்லுக்கு
வர்ணம்
அழகு!
கவிதைக்குக்
கற்பனை
அழகு!
எனக்கு
எப்பொழுதுமே
நீ
அழகு, பெண்ணே!

அடுத்த இரண்டு மணி நேரம் லேப்டாப்பில் மூழ்கினாள் அநன்யா. அவ்வப்பொழுது தோன்றிய சந்தேகங்களை அபிஷேக்கிடம் கேட்க, அவன் அதை நிவர்த்தி செய்தான்.

அவன் கேட்ட ரிப்போர்ட்ஸை எல்லாம் முடிக்கும் பொழுது மணி மதியம் மூன்று. வெளியே போய்விட்டு வீட்டிற்குள் வந்த அபிஷேக் திகைத்தான்.

காரணம்... அநன்யா லேப்டாப்பில் அவன் கிளம்பும்பொழுது எவ்வளவு தீவிரமாக, ஆர்வமாக வேலை செய்து கொண்டு இருந்தாளோ, அதே தீவிரத்துடன் அவன் திரும்பி வரும்பொழுதும் வேலை பார்த்துக் கொண்டு இருந்தாள்.

"ஹலோ... அநன்யா! பயங்கர சீரியஸா வொர்க் செய்யற?"

"ம்... என்ன செய்யறது? என்னோட முதல் அஸைன் மெண்ட் இது. சொதப்பக் கூடாது பாருங்க, அதனால் தான் கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுக் கொண்டு பார்க்கிறேன்!"

"அப்படியா? என்ன... எங்கே, நான் பார்க்கிறேன்!" - என்றவன், சட்டென அவள் முகத்தைக் கையில் ஏந்தினான்.

"என்ன இது?" - என்று அவள் பதறினாள்.

"ம்... கண்ணில் விளக்கெண்ணெய் என்று சொன்னாயே! அது முகத்தில் வழிகிறதா என்று பார்க் கிறேன்." - என்றான் கண்களில் குறும்பு மின்ன.

அவள் உதடுகளில் புன்னகை பரவியது.



"விளையாட்டு வேண்டாம்... ரிப்போர்ட்ஸ் எல்லாம் கரெக்டாக இருக்கிறதா என்று பாருங்கள்!"

"ஓ.கே. மேடம்... நான் செக் செய்யறேன்."

"இதோ இந்த ரிப்போர்ட் போன மாதத்தில் எந்த இடத்தில் விற்பனை அதிகம் என்று சொல்கிறது. இந்த மாதிரியான 'கிராஃப்' உங்களுக்கு ஓ.கே.வா? இல்லை 'பை சார்ட்' போல் போடலாமா?"

"இல்லை அநன்யா... இதுவே இருக்கட்டும். துல்லிய மாகத் தெரிகிறது, விவரங்கள் எல்லாம்!"

"சரி... அப்புறம் இந்த ரிப்போர்ட்டைப் பாருங்கள்... மாதத்தில் எந்தெந்த நாட்களில் விற்பனை அதிகம் என்று சொல்கிறது."

"யெஸ்! சனிக்கிழமை இல்லை ஞாயிற்றுக்கிழமை களில் தான் விற்பனை அதிகமாக இருக்கிறது."

"ஆமாம்! இப்பொழுது பெரும்பாலான வீடுகளில் அடுத்த வாரத்திற்குத் தேவையான காய்கறிகள், பழங்கள் எல்லாவற்றையும் வாங்கி ஃப்ரிட்ஜில் வைத்து விடுகிறார்கள். வார நாட்களில் அதற்கு நேரம் இல்லாமல் போய்விடுகிறது."

"ஆனால் டெலிவரி- பாய் மூலம் வீட்டிற்குப் போய் டெலிவரி செய்கிறோமே நாம்!"

"இருந்தாலும் காய்களைக் கட் செய்ய வேண்டும். அதுவும் கீரை எல்லாம் சுத்தமாகப் பழுது போக க்ளீன் செய்ய வேண்டுமே! அதற்கெல்லாம் எங்கே நேரம் இருக்கும், வார நாட்களில். அதனால் நிறையப் பெண்கள் சனிக்கிழமை, இல்லை... ஞாயிற்றுக் கிழமைகளில்

காய்கறிகளை நறுக்கி பிளாஸ்டிக் கவர்களில் போட்டு ஃப்ரிட்ஜில் வைத்து விடுவார்கள்."

"ஓ... பாவம்! ஃபிரெஷ்ஷாகக் காய்கறிகளைக் கட் செய்து சாப்பிட்டால்தான் சத்து வீணாகாமல் இருக்கும். அவர்களுக்கு நாம் ஏதாவது செய்ய வேண்டும். காய்கறிகள், பழங்கள் எல்லாம் சத்து வீணாகாமல் அவர்களுக்குக் கிடைக்க வேண்டும். என்ன செய்யலாம்?"

"இப்படிச் செய்தால் என்ன?"

"எப்படி?"

"டெலிவரி- பாய்ஸ் கூட கட்டிங்-கேர்ல்ஸ் என்று அழகான இளம் பெண்களைக் காய்கள், பழங்கள் கட் செய்வதற்கு வீட்டிற்கு அனுப்பி வைக்கலாம்!" - என்றாள் சிரிக்காமல் அவள்.

"ம்... கிண்டலா அநன்யா!"

"இல்லை... விஜய் மல்லையா ரேன்ஜிற்கு உங்களைப் பற்றி எல்லோரும் பேசுவார்கள். அதற்குத்தான் இந்த ஐடியா! ஹவ் இஸ் இட்?"

"படு கேவலமாக இருக்கிறது உன் ஐடியா!"

"சரி... நீங்களே யோசியுங்கள், என்ன செய்யலாம் என்று. எனக்கு வேறு ஏதாவது வேலை கொடுங்கள். போர் அடிக்கிறது."

"காட்! சரியான வேலைப் பூதமாக இருக்கிறாயே நீ? என் பாடு கஷ்டம்தான்!"

"ம்... உங்களை நான் யூத் இல்லை என்று சொன்னது தப்புதான். அதற்காக என்னை இப்படிப் பழி வாங்கக் கூடாது."



"என்ன சொல்கிறாய் நீ? புரியவில்லையே!"

"ம்... என்னைப் பூதம் என்று சொன்னீர்களே! அதைத்தான் சொன்னேன்!"

அவன் அதைக் கேட்டுச் சிரித்தான்.

"சரி... ஒரு சின்ன மாற்றம்... இப்படி வேண்டுமானால் செய்யலாமா?"

"எப்படி?"

"அழகான பூதம் என்று சொல்லட்டுமா?"

"நீங்கள் அத்வித் ஸாரிடம் அப்பாயிண்ட்மெண்ட் வாங்குவது நல்லது என்று நினைக்கிறேன்."

"எதற்கு?"

"உங்கள் கண்ணில் ஏதோ கோளாறு என்று நினைக்கிறேன். ஒரு அழகான பெண்ணைப் போய்ப் பூதம் என்று சொல்கிறீர்களே! அதனால் உங்கள் கண்ணை செக் செய்து கொள்ளுங்கள்."

அவன் அதைக் கேட்டுச் சிரித்தான்.

"திருவிளையாடல் படத்தில் வரும் சிவாஜி கணேசன் போல் எல்லாவற்றுக்கும் சிரித்து வையுங்கள். ஆஹா... என்ன சிரிப்பு உங்கள் சிரிப்பு. தெய்வீகச் சிரிப்பையா உங்கள் சிரிப்பு!"

"ஏய் அநன்யா... உன் மாதிரி ஒரு வாயாடிப் பெண்ணை நான் இதுவரை சந்தித்ததே இல்லை!"

"ஓ... அப்ப நிறையப் பெண்களுடன் உங்களுக்குப் பழக்கம் போல..."

"சே... சே... நான் கலியுக ராமன்!"

"ஓ... அவ்வளவு மோசமானவரா நீங்கள்?"

"ஏய்! காப்பியத் தலைவன் ராமனைப் போய் இப்படிச் சொல்றியே... வெரி பேட்!"

"சீதையைச் சந்தேகப்பட்ட ராமரை என்னால் காவிய புருஷராக ஏற்றுக் கொள்ள முடியாது. பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் ராமன், குரு சொல்வதை ஏற்று நடக்கும் ராமன், சபரிக்கு விமோசனம் அளித்த ராமன் என அவ்வளவு இடத்தில் கொடி பறக்கச் செய்த ராமன், சீதை விஷயத்தில் செய்தது ரொம்பப் பெரிய தப்பு.

"அவரிடம் உள்ள எல்லா நல்ல குணங்களையும் இந்த ஒரு விஷயம் அழித்து விடுகிறது. என்னால் இதை ஏற்றுக் கொள்ளவே முடியாது."

"சரி... ராமனைப் பிடிக்காது. அப்ப யாரைப் பிடிக்கும் உனக்கு? கண்ணனையா?"

"ம்... கண்ணன் ஜாலி கேரக்டர். கண்ணனைக் கொஞ்சம் பிடிக்கும்! அவர் சின்ன வயதுக் குறும்புகள், யசோதையை அவர் பாடாகப் படுத்துவது - இதெல்லாம் எனக்குப் பிடிக்கும். ஆனால் அவர் பின்னால் பெண்கள், கோபிகைகள் மயங்கிப் போவது எனக்குப் பிடிக்கவில்லை."

அவன் அதைக் கேட்டுச் சிரித்தான்.

"இப்ப எதுக்கு இப்படிச் சிரிக்கிறீங்க?"

"நான் ஒன்று சொன்னால் நீ கோபித்துக் கொள்ளக் கூடாது. சரியா?"

"கோபிக்கவில்லை! சொல்லுங்கள்.",



"காலேஜ் நாட்களில் என்னைச் சுற்றிப் பெண்கள் கூட்டம் இருக்கும். மற்ற மாணவர்களுக்கெல்லாம் என் மேல் கொஞ்சம் பொறாமையே!"

"ஓ... இதெல்லாம் வேறா? பெண்கள் உங்களைச் சுற்றி வருவார்கள். நீங்களும் அதை என்கரேஜ் செய்வீர்கள்... அப்படித்தானே!"

"அதில் என்ன தப்பு?"

"தப்பு ஒன்றும் இல்லை... எல்லைக் கோட்டைத் தாண்டாத வரையில்!"

"அது என்ன எல்லைக்கோடு? எனக்குத் தெரிந்தது எல்லாம் லக்ஷ்மணன் வரைந்த கோடுதான்!"

திருடன்...! வேண்டும் என்றே தெரியாதது போல் நடிப்பதைப் பார். என் வாயிலிருந்து அதை வரவழைக்க வேண்டும் என்று நினைக்கிறான் போல!

"ம்... நீங்கள் சேத்தன் பகத் எழுதிய புத்தகங்களைப் படித்து இருக்கிறீர்களா? படிக்காமல் இருப்பீர்களா? நீங்கள்தான் யூத் என்று சொல்லிக் கொண்டு திரிபவர் ஆயிற்றே! சேத்தன் பகத் யூத் ஐகான். அதனால் படித்து இருப்பீர்கள்.

"அவர் எழுதிய எல்லாப் புத்தகத்திலும் கண்டிப்பாக இடம் பெறும் ஒரு விஷயம், எல்லைக் கோட்டை மீறுவது தான். ஆண்கள் பெண்கள் எல்லோரும் கல்லூரியில் படிக்கும் பொழுதே, குறிப்பாக ஐ.ஐ.டி.யிலும், ஐ.ஐ.எம்.மிலும் படிக்கும் மாணவ மாணவியர், எல்லைக் கோட்டை மீறுகிறார்கள் என்பதைப் போல் எழுதுகிறார்.

"நம்முடைய கலாச்சாரச் சீரழிவை இவரின் புத்தகங்கள் வெளிப்படையாகக் காட்டுகிறதா, இல்லை இவர் புத்தகம் விற்பதற்காக இப்படி எழுதுகிறாரா என்று தெரியவில்லை!"

"அச்சச்சோ! நான் இந்த விஷயத்தில் 'யூத் ஐகானாக' சேத்தன் பகத்தை எடுத்துக் கொள்ள மாட்டேன். மற்ற விஷயங்களில் வேண்டுமானால் அவர் எழுதுவதில் எனக்கு உடன்பாடு உண்டு. லஞ்சம் நம் நாட்டில் எல்லா விடங்களிலும் தலைவிரித்து ஆடுவதைப் பற்றிச் சொல்கிறார். அப்புறம் நம் அரசியல் ஸிஸ்டத்தில் உள்ள சீர்கேடுகள், இதை யெல்லாம்கூட அவர் அழகாகச் சொல்கிறாரே!"

"ம்... பரவாயில்லையே! நீங்கள் இதை எல்லாம் விரும்பிப் படிக்கிறீர்களே!"

"ம்... நீ என்னை விஜய் மல்லையா ரேஞ்ஜிற்குக் கற்பனை செய்து வைத்துக் கொண்டு இருக்கிறாய். அது உன்னுடைய தப்பு. என் தப்பு இல்லை."

"உன்னைச் சொல்லிக் குற்றம் இல்லை. என்னைச் சொல்லிக் குற்றம் இல்லை. காலம் செய்த கோலமடா... கடவுள் செய்த குற்றமடா..." என்று பாட்டுப் பாடினாள் அவள்.

அவன் சிரித்தான்.

"நீ என்ன வேலை பார்த்துக் கொண்டு இருந்து இருப்பாய், இந்த விபத்திற்கு முன்பு என்று எனக்குத் தெரிந்து விட்டது."

"என்ன வேலை? சொல்லுங்க சீக்கிரம்!"



"ம்... ஏதாவது எஃப்.எம். சானலில் ரேடியோ ஜாக்கியா இருந்து இருப்பாய். அதற்கான எல்லாத் தகுதிகளும் உன்னிடம் அதிகப்படியாகவே இருக்கிறது!"

"ஓ...! நான் அவ்வளவு அழகாக இருக்கிறேனா? தேங்க்ஸ்... தேங்க்யூ ஸோ மச்!"

"ஏய் மக்கு! ரேடியோ ஜாக்கி (ஆர்.ஜே.) எப்படி இருந்தால் என்ன? மக்கள் ஆர்.ஜே.யின் குரலை மட்டுமே கேட்க முடியும். நல்ல குரல் வளம், நாட்டு நடப்பு, அரசியல், விளையாட்டு, இலக்கியம் இதில் எல்லாம் ஆர்வம் இருக்க வேண்டும்.

"அப்புறம் சில நேரம் கடி ஜோக் சொல்ல வேண்டும். சில நேரம் உணர்ச்சி வெள்ளம் பொங்க, குரலில் அழுகை வரவேண்டும். அதைக் கேட்கிறவர்களின் மனம் கரைந்து அவர்கள் உருகி அழ வேண்டும்."

"ம்... அதைத்தான் தொலைக்காட்சியின் டி.வி. சீரியல்கள் தவறாமல் செய்து வருகிறதே!"

"கரெக்ட்... தொலைக்காட்சியின் பெரும்பான்மையான நிகழ்ச்சிகள் அப்படி இருக்கும். ஆனால் ரேடியோவில் நிலைமை இன்னும் அவ்வளவு மோசமாகவில்லை. அதுவரை ரேடியோ பரவாயில்லை தான்!"

"நான் ஆர்.ஜே.யாக இருக்க வாய்ப்பு இல்லை. டி.வி.யில் தொகுப்பாளினி இல்லை... நியூஸ் ரீடராக இருந்து இருப்பேன்!"

"ஏன் அவ்வளவு தீர்மானமாகச் சொல்கிறாய்?"

"பிகாஸ் ஐயாம் பியூட்டிபுல். நான் ரொம்ப அழகு. கண்டிப்பாக ஆங்கில நியூஸ் ரீடராக இருந்து இருப்பேன்.

அதனால்தான் இங்கே உள்ளவர்களுக்கு என்னை அடையாளம் தெரியவில்லை." - என்றாள் ஸ்டைலாக அநன்யா.

"முதலில் உன் மூளை ஏதேனும் குழம்பி இருக்கிறதா என்று அத்வித்தை டெஸ்ட் செய்யச் சொல்லணும். சம்திங் இஸ் ராங்!" - என்றான் சீரியஸாக அபிஷேக்.

# 14

உன்
வார்த்தைகள்
எவ்வளவு
இதமாக
இருக்கின்றன!
..........
காயம்பட்ட
மனதிற்கு
மயில்
இறகாக
உன்
வார்த்தைகள்!
..........
என்
மனதில்
இருந்த
பகை
உணர்ச்சி



சுத்தமாகப்
போய்விட,
நான் புதிதாகப்
பிறந்து விட்டேன்!

அன்று சனிக்கிழமை என்பதால் அரை நாள் விடுமுறை சுப்ரியாவுக்கு. கல்பாக்கம் வந்து இரண்டு வாரங்கள் ஓடிவிட்டன. நாட்கள் இறக்கை கட்டிக்கொண்டு பறக்கிறது என்று நினைத்தபடியே நடந்தாள்.

கம்பெனி கார் ஓட்டும் டிரைவருக்கு உடம்பு சரியில்லை. அதனால் வேலை முடிந்த பின்பு பஸ்ஸில் போவது என்று முடிவு செய்தாள். பஸ் ஸ்டாண்டை நோக்கி நடந்து சென்று கொண்டு இருந்தவளை உராய்வது போல் வந்து நின்றது ஒரு பைக்.

"அட... நீயா தீபக்! நான் பயந்து விட்டேன்!"

"இது என்ன பெங்களூரா, இல்லை... மும்பையா பயப்பட... இது கல்பாக்கம் ப்ரியா. அநாவசியப் பயம் இங்கே வேண்டாம். அதுவும் இங்கு இருப்பது யார்? எஜமான் இருக்கும் இடத்தில் எந்தப் பயமும் இல்லை!"

"ஏய்! என்ன நீ? 'யாமிருக்கப் பயமேன்?' முருகர் படத்திற்குக் கொடுக்கற பில்டப் மாதிரி கொடுக்கற?"

"கடவுளே! அப்படி எல்லாம் பேசாதே! நான் எஜமான் என்று சொன்னது அத்வித் ஸாரைத் தான்!"

"ஓ... அவரா?"

"யெஸ்... அவரே தான்! சரி, எதுக்கு இப்படி வெயிலில் நடந்து வர?"

"ம்... டிரைவருக்கு உடம்பு சரியில்லை போல. பாவம், காலையிலேயே ரொம்ப முடியாமல்தான் ஓட்டிக் கொண்டு வந்தார். அதனால் நான்தான் அவரை மதியம் வர வேண்டாம் என்று சொன்னேன்."

"ஓ... அப்படியா? சரி, வா... நான் உன்னை வீட்டில் விட்டு விட்டுப் போகிறேன்."

"வேண்டாம் தீபக். உனக்கெதுக்குச் சிரமம்? பஸ் வந்து விடும். நான் அதிலேயே போய் விடுவேன்."

"ப்ரியா... நான் எஜமான் வீட்டைத் தாண்டித்தான் போவேன். அதனால் எனக்கு எந்தச் சிரமமும் இல்லை. சீக்கிரம் ஏறு!"

"சரி... ஓ.கே." - என்றபடியே அவன் பின்னால் உட்கார்ந்தாள் அவள்.

தீபக் சுப்ரியாவுடன் கல்லூரியில் படித்தவன். கல்லூரியில் படிக்கும் பொழுது அவ்வளவு பரிச்சயம் இல்லை.

காரணம் இருவருக்கும் வெவ்வேறு நண்பர் உலகம். அதனால் 'ஹாய், ஹலோ'வோடு மட்டுமே இருந்தது அவர்கள் நட்பு.

ஆனால் கல்பாக்கம் வந்த பின்பு தீபக்கை இ.டி.பி. டிபார்ட்மெண்ட்டில் பார்த்த சுப்ரியாவுக்கு இன்ப அதிர்ச்சி. தெரியாத இடத்தில் ஒரு பழகிய முகம் தெரிந்தால் சட்டென ஒரு தோழமை ஏற்படும்.

வெளிநாட்டுப் பயணங்கள் பொழுதுகூட அப்படித் தான். இந்தியாவில் பக்கத்து வீட்டில் இருக்கும் ஒரு நபரிடம்



ரொம்பப் பேசிப் பழகாத நாம், வெளிநாட்டில் அதே நபரிடம் மணிக்கணக்காகப் பேசுவதற்குக் காரணம், ஒரு வகையான தேடல்.

தெரிந்தவர்களைப் பார்த்தவுடன் அந்தத் தேடல் வெற்றி பெறுகிறது. சுப்ரியாவும், தீபக்கும் கல்லூரியில் பேசாவிட்டாலும் கல்பாக்கத்தில் நிறையப் பேசினார்கள். இருவருக்கும் இடையே ஒரு அழகான நட்பு மலர்ந்தது.

அதனால்தான் தீபக் அழைத்தவுடன் எந்த விதமான தயக்கமும் இன்றி அவன் பைக்கில் ஏறி உட்கார்ந்து கொண்டாள் அவள்.

பாதி தூரம் தாண்டி இருப்பார்கள் அவர்கள். அப்பொழுது ஒரு கார் அவர்கள் அருகே உரசிக் கொண்டு வந்து நின்றது.

யார் அது... இப்படிக் காட்டான் மாதிரிக் காரை பைக் அருகே கொண்டு வந்து நிறுத்துவது என நினைத்தபடியே கோபமாகப் பைக்கில் இருந்து இறங்கினான் அவன்.

காரின் டிரைவர் சீட்டில் இருந்து கதவைத் திறந்து கொண்டு இறங்கினான் அத்வித். அவன் முகம் கோபத்தில் இறுகி இருந்தது.

"கம்பெனி கார் வரவில்லையா?" - அதிகாரமாக ஒலித்தது அவன் குரல்.

"இல்லை...!" - என்றாள் மொட்டையாக அவள்.

"இல்லை ஸார்... டிரைவருக்கு உடம்பு சரியில்லை போல. அதனால் ப்ரியாதான் வர வேண்டாம் அப்படின்னு சொல்லிட்டாங்க!"

"ஓ...!" - அவன் உதடுகள் ஏளனமாக வளைந்தன.

"ரொம்ப வெயிலா இருக்கு அப்படின்னு பஸ்ஸில் போக இருந்தவங்களை நான்தான் வற்புறுத்தி பைக்கில் ஏறச் சொன்னேன்."

"ஓ... அப்படியா?"

"ஆமாம்... ஸார்!"

"சரி தீபக்... நீ கிளம்பு. நான் சுப்ரியாவை அழைத்துச் செல்கிறேன். உனக்கு இதில் ஏதும் ஆட்சேபனை இல்லை என்று நினைக்கிறேன்."

"ஐயோ... அதெல்லாம் இல்லை ஸார்!" - என்றான் அழாத குறையாக அவன்.

"சரி தீபக்... பை..." - என்றான் அத்வித்.

அடுத்த நொடி தீபக்கை அங்கு காணவில்லை. சே! இவன் ஏன் இப்படிச் செய்தான்? என்னிடம் சொல்லாமல் கொள்ளாமல் பைக்கை எடுத்துக் கொண்டு பறந்து விட்டானே என்று அவனைத் திட்டினாள்.

"காரில் ஏறு!" - கோபமாக ஒலித்தது அத்வித் குரல்.

"நான் பஸ்ஸில் வருகிறேன்."

"ஏய்...! நீ என்ன நினைத்துக் கொண்டு இருக்கிறாய் உன் மனதில்? அவனோடு டூ வீலரில் நெருங்கி உட்கார்ந்து கொண்டு வருகிறாய். அவன் யார் என்றே உனக்குத் தெரியாது. இங்கே வந்த பின்புதான் உனக்குத் தெரியும். ஆனால் அவனோடு பேசிச் சிரித்துக் கொண்டு போகிறாய். ஆனால் என்னோடு காரில் ஏறத் தயங்குகிறாய். வெரி குட்!" - என்றான் குத்தலாக.



"ஷட் அப். தீபக் என்னோட காலேஜ்-மேட். அதனால் வாய்க்கு வந்ததை உளறாதீங்க!" - என்று படபடத்தாள் சுப்ரியா.

"நீ முதலில் காரில் ஏறு!" என்றவன், அவள் கையைப் பிடித்து வலுக்கட்டாயமாக அவளைக் காரினுள் தள்ளினான்.

"சே... ஏன் இப்படிக் காட்டுமிராண்டி மாதிரி நடந்து கொள்றீங்க?"

"நீ ஒழுங்கா நடந்து கொண்டால் நான் இந்த மாதிரி நடந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை."

"லுக்... இப்ப நான் என்ன கொலைக் குற்றமா செஞ்சேன்? நீங்கதான் வீட்டிலேயே பேஷண்ட் என்ற பெயரில் ஒரு அழகான பெண்ணிற்குச் சிகிச்சை அளித்து வருகிறீர்கள். நான் அதில் எல்லாம் தலையிட்டேனா என்ன? நீங்க மட்டும் ஏன் என் விஷயத்தில் தலையிடுகிறீர்கள்?"

அதைக் கேட்ட அத்வித்தின் முகத்தில் இறுக்கம் தளர்ந்தது. ஸோ... இவள் என்னைக் கவனித்துக் கொண்டு தான் இருக்கிறாள்.

"என்ன... பதிலையே காணோம்?"

"நீயாக எதையாவது கற்பனை செய்து கொண்டால் அதற்கு நான் பொறுப்பு இல்லை!" - என்றான் தணிந்த குரலில்.

"அதே போல் நீங்களும் எதையாவது கற்பனை செய்து கொண்டால் நான் பொறுப்பு இல்லை. மோகினியைப் பற்றிப் பேசியவுடன் உங்கள் கோபம் குறைந்து விட்டதே!

இதில் இருந்தே தெரியவில்லை... சே... சே...” – சீறினாள் அவள்.

“மோகினியா? யார் அது?”

“உங்கள் வீட்டில் இருக்கிறாளே, அநன்யா... அவளைத்தான் சொன்னேன் அப்படி!”

“சே... பாவம் சுபா அவள்... அப்படி எல்லாம் பேசாதே. அவள் நிலைமையில் வேறு எந்தப் பெண் இருந்திருந்தாலும் அவ்வளவுதான். அழுதழுது, கண்கள் சிவந்து, முகம் சோர்ந்து போய்க் காட்சி அளிப்பார்கள். ஆனால் அநன்யா எவ்வளவு ஸ்போர்டிவாக எடுத்துக் கொண்டு உற்சாகமாக இருக்கிறாள். அதனால் அவளைப் பற்றி அபாண்டமாகப் பேசாதே. இதுவே முதலும் கடைசியுமாக இருக்கட்டும்.” – கண்டிப்பாக ஒலித்தது அவன் குரல்.

“அவளைப் பற்றி லெக்சர் கொடுக்கத்தான் என்னைக் காரில் வலுக்கட்டாயமாக ஏற்றினீர்களா?”

அவன் முகத்தில் சட்டென சந்தோஷப் பூக்கள் பூத்தன. தன்னைப் பற்றிப் பேச வேண்டும் என்று சுப்ரியா சொல்லாமல் சொல்கிறாள் என்று அவனுக்குப் புரிந்தது.

“வேறு என்ன பேசலாம் சுபா?” – என்றான் ஒன்றுமே தெரியாதவன் போல.

சுபா என்று அழைத்தால் அது அவளுக்கு ரொம்பப் பிடிக்கும் என்று அவனுக்குத் தெரியும். அதனால்தான் வார்த்தைக்கு வார்த்தை சுபா என்று அழைத்தான்.

“நமக்குள் பேச வேறு எதுவுமே இல்லையா?” – மெல்லிய குரலில் கேட்டாள் சுப்ரியா.



அவள் மனதில் தான் இருக்கிறோம் என்று அத்வித்திற்குத் தெளிவாகப் புரிந்தது. அவன் உடல் முழுவதும் புதிய செல்கள் உற்பத்தி ஆவது போல் ஒரு உணர்வு தோன்றியது.

“உன்னைப் பற்றி நான் நினைப்பதை நிறுத்தவே முடியாது சுபா. நீ என் உடலின் எல்லா செல்களிலும் இருக்கிறாய்!”

“அட! டாக்டர் எப்பக் கவிஞனானீங்க?”

“ம்... உன்னைப் பார்த்தவுடன் சுபா. உன் அருமை உன்னைப் பிரிந்த பொழுதுதான் எனக்குப் புரிந்தது! ஐ மிஸ் யூ எ லாட் சுபா!”

அவள் மனம் உருகியது. அவன் பேசியது அவள் மனதில் இனிய நாதம் இசைப்பது போல் இருந்தது.

“என்ன சுபா! பேச மாட்டேங்கற?” – என்றவன், காரை ஓரமாக நிறுத்தினான்.

அவன் குரலில் இருந்த ஏதோ ஒன்று அவள் மனதை அலைக்கழித்தது. அவள் மௌனமாக இருந்தாள். அவன் கை விரல்களை அவள் கண்கள் ஆராய்ந்து கொண்டு இருந்தன.

அவள் கையை அவன் மென்மையாகப் பற்றினான். பின்பு அதில் இதழ் பதித்தான்.

“சுபா... ப்ளீஸ்... ஏதாவது பேசு!” – என்று அவள் காதோரம் அவன் கிசுகிசுத்தான்.

அவள் கண்களை மூடிக் கொண்டாள். ஏதோ ஒரு புதிய உலகில் பறப்பது போல் இருந்தது அவளுக்கு.

"ப்ளீஸ் அதி..." – என்று முனகினாள் அவள்.

"நான் உன் மனதில் இருக்கிறேனா சுபா இன்னும்..."

அவள் கண்கள் கலங்கின. உதடுகள் துடித்தன. சே! என்ன வார்த்தை கேட்டுவிட்டான் இவன்? சட்டென இப்படி அமிலம் போல் வார்த்தையைச் சிதற விட்டுவிட்டானே என்று கோபம் அவளுள் தீப் போல் வேகமாகப் பரவியது.

அவனை எரித்து விடுவது போல் பார்த்தாள். அவன் கையை உதறினாள்.

"காரை எடுங்கள்!" – என்று கத்தினாள்.

கார் சீறிப் பாய்ந்தது. காரின் எப்.எம்.மில் பாடல் ஒலித்தது.

நினைக்கத் தெரிந்த
மனமே, உனக்கு
மறக்கத் தெரியாதா?
பழகத் தெரிந்த
உயிரே, உனக்கு
விலகத் தெரியாதா?
உயிரே, உனக்கு
விலகத் தெரியாதா?

அங்கே கனத்த மௌனம் பரவி இருந்தது. இருவரும் மற்றவரைப் பற்றி நினைத்தபடியே அவர் அவர் உலகில் மூழ்கி இருந்தனர்.

காரில் இருந்து இறங்கிய இருவரும் மீண்டும் முகமூடிகளை மனதில் அணிந்து கொண்டு வீட்டினுள் நுழைந்தனர்.



## 15

அமுதைப்
பொழிந்து
கொண்டு
இருக்கிறது
நிலவு!
...........
மேகங்கள்
கரிய நிறத்துடன்
நிலவை
ஆக்ரோஷமாக
மறைக்க
முயல்கிறது!
...........
மெல்லிய
சாரல்
கலந்த
மழையின்
துளி
என்
மேல்
பட்டுத்
தெறிக்கிறது!

"செல்வி... இன்னிக்குச் சாப்பாடு ரொம்ப அருமையாக இருந்தது. நீதான் செய்தாயா?"

"அட... என்ன இப்படிச் சொல்லிட்டீங்க.. உங்களுக்கு விஷயமே தெரியாதா?"

"அட... என்ன இப்படிச் சொல்றீங்க? நீங்க சொன்னால்தானே எனக்குத் தெரியும்!" அவளைப் போலவே பேசினான் அத்வித்.

"எஜமான்! கிண்டல் செய்யாதீங்க. இன்னிக்குச் சமையல் செஞ்சது எல்லாம் அனன்யா மேடம்தான்!"

"ஓ... அதுதான் ரொம்ப நன்றாக இருந்தது சாப்பாடு... வழக்கத்திற்கு மாறாக!"

"எஜமான்! அப்ப நான் செஞ்சது... உங்களுக்குப் பிடிக்கவே இல்லையா?" - அழுதுவிடும் தொனியில் கேட்டாள் அவள்.

"செல்வி! காரக்குழம்பு வைப்பதில் உன்னை மிஞ்ச யாராலும் முடியாது. இன்னிக்கு எல்லாமே வடநாட்டு உணவு வகைகள்...

"நீ அதெல்லாம் செய்வதற்கு வாய்ப்புகள் குறைவு. உன்னைச் சீண்டவே அப்படிச் சொன்னேன். தப்பா எடுத்துக்காதீங்க..."

"அட... என்ன எஜமான் நீங்க... இப்படி எல்லாம் பேசறீங்க...? அந்த மேடம் கிட்ட இருந்து... நானும் வடநாட்டு உணவு வகை செய்யும் முறையை எல்லாம் கற்றுக் கொள்கிறேன்.

"அப்புறம் பாருங்க... நீங்க அசந்து போயிடுவீங்க... நான் சமையல் செய்யறதைப் பார்த்து!"

"தட் இஸ் தி ஸ்பிரிட் செல்வி!"



"என்ன எஜமான்... என்ன சொல்றீங்க?"

"செல்வி! உன்னை ஆவின்னு ஸார் சொல்றார்!" என்றாள் அநன்யா.

"அச்சோ... எஜமான் என்ன இது?" - பதறினாள் செல்வி.

"செல்வி! சும்மா உன்னைச் சீண்டவே அப்படிச் சொல்றா, அநன்யா... நீ அதைப் போய் நம்பறியே?" என்றான் அத்வித், சிரித்தபடியே.

"அம்மா... இனிமே விளையாட்டுக்குக் கூட அப்படிச் சொல்லாதீங்க."

"ஏன் செல்வி... உனக்குப் பயமா? பேய், பிசாசு, ஆவி இதைப் பற்றிப் பேசினால் உனக்கு அலர்ஜியா?" என்றாள் அநன்யா.

"ஆமாம் மேடம்... சின்ன வயசில எங்க ஆத்தா நிறையப் பேய்க் கதைகள் சொல்லி இருக்காங்க. கதை இல்லை மேடம்... நிஜம். என்ன ஆச்சு தெரியுமா? ஒரு நாள்..." என்று நீட்டி முழக்கினாள்.

"அச்சோ... செல்வி! இப்ப வேண்டாமே... ப்ளீஸ்! இன்னொரு நாள் எனக்கு ரொம்பப் போர் அடிக்கும். அப்ப சொல்லு... கேக்கறேன்!" - என்றாள் அநன்யா.

"அட... என்ன இப்படிச் சொல்லிட்டீங்க..."

அதைக் கேட்டு அநன்யா சிரித்தாள். "செல்வி! உன் கூடப் பேசப் பயமா இருக்கு..."

"அட... என்ன இப்படிச் சொல்லிட்டீங்க... எஜமான் வேற என்னை ஆவி மாதிரி ஏதோ சொன்னார்..." என்றாள் அழாத குறையாக.

"அச்சோ... செல்வி! நான் அந்த அர்த்தத்தில் சொல்லலை. உன் கூடப் பேசினால் நீ பேசற மாதிரி... 'அட... என்ன இப்படிச் சொல்றீங்க?' அப்படின்னு பேசிடுவே னோன்னு எனக்குப் பயமா இருக்கு."

"அடப் போங்க மேடம்!" என்று சற்றே தெளிவான முகத்துடன்... செல்வி அங்கிருந்து சென்றாள்.

"ரொம்ப அப்பாவியான பெண்... இல்ல டாக்டர்?"

"ஆமாம் அனன்யா... சரி, உன் வேலை எல்லாம் எப்படிப் போகிறது?"

"ரொம்ப சுவாரசியமா இருக்கு டாக்டர்! கணினியில் எனக்குக் கொஞ்சம் பரிச்சயம் என்று நான் நினைக்கிறேன். அது புதிது போல் எனக்குத் தோன்றவே இல்லை.

"அவர் சொல்வதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. அவர் கேட்ட விதத்தில் ரிப்போர்ட்ஸைத் தயாரிக்க என்னால் முடிந்தது."

"ம்... நீ கண்டிப்பாக ஏதாவது மெட்ரோவில்தான் வேலை பார்த்துக் கொண்டு இருந்திருப்பாய் என நான் நினைக்கிறேன்... இந்த விபத்திற்கு முன்பு!

"உன்னுடைய ஆங்கில உச்சரிப்பு... நீ பழகும் விதம்... எல்லாமே எனக்கு அதைச் சொல்லாமல் சொல்கிறது."

"ம்... தெரியவில்லை... டாக்டர்! என்னைத் தேடிக் கொண்டு யாருமே வரவில்லையா?" என்றாள் மெல்லிய குரலில்.

"இல்லை... அநன்யா!"



"யாருமே வரமாட்டார்களா... டாக்டர்?" அவள் குரல் கம்மியது. கண்கள் கலங்கின.

"அனன்யா... என்ன இது? நீ தைரியமான பெண் என்று நான் நினைத்தேன். ஆனால் நீ... அது தப்பு என்று நிரூபிப்பது போல் நடந்து கொள்கிறாயே!" என்றபடியே அவள் தோள் மேல் ஆதரவாகக் கை பதித்தான்.

தன் அறையிலிருந்து அந்தக் காட்சியைப் பார்த்த சுப்ரியாவிற்குக் கோபத்தால் உடல் நடுங்கியது.

சே... எவ்வளவு கேவலமான எண்ணம் அத்வித்திற்கு! என்னிடம் பேசும் பொழுது மட்டும் எரிந்து விழுகிறான். இதே மோகினியுடன் பேசுவது என்றால் நேரம் போவதே தெரியவில்லை... அவனுக்கு.

அதுவும் பேச்சு மட்டும் இல்லை. தொட்டுப் பேசும் அளவுக்கு அத்வித் முன்னேறி இருக்கிறான். மோகினியும் அதற்குத் தகுந்தாற் போல் நடந்து கொள்கிறாள்.

எவ்வளவு கேவலமான நினைப்புகளை மனதில் வைத்துக் கொண்டு என்னையும் தீபக்கையும் தப்பாகப் பேசினானே... இவன்! இப்பொழுதே போய் நறுக்கென அவனை நாலு வார்த்தை கேட்கலாமா? - துடித்தது அவள் மனம். கஷ்டப்பட்டு அவள் தன்னை அடக்கிக் கொண்டாள்.

அவள் மனதின் ஒரு மூலையில் தொடங்கிய ஏமாற்ற உணர்வு வலியாக மாறியது.

"என்ன அனன்யா... அத்வித்...! நான் உங்கள் பிரைவஸியில் குறுக்கிடுகிறேனா?" என்று கேட்டபடியே அவர்கள் அருகே வந்தான் அபிஷேக்.

"கமான் அபிஷேக்...! அநன்யா டல்லாக இருந்தாள். ஒரு டாக்டர் என்ற முறையில் நான் அவளுக்கு ஆறுதல் சொன்னேன். தட்ஸ் ஆல்!"

"ஓ... உன்னிடம் ட்ரீட்மெண்ட்டிற்கு வரும் எல்லா பேஷண்ட்ஸிடமும் நீ இப்படித்தான் நடந்து கொள்வாயா?" – கோபம் அப்பட்டமாக அவன் குரலில் தெரிந்தது.

"வாட் டு யூ மீன்...! என்ன அபிஷேக்... இதெல்லாம்?"

"நீயும் அனன்யாவும் சில நிமிடங்களுக்கு முன்பு நடந்து கொண்ட விதம் எனக்கு அப்படித்தான் இருந்தது."

"சே... அபிஷேக்...! நான்..." என்று அத்வித் முடிக்கும் முன்பு அனன்யா குறுக்கிட்டாள்.

"டாக்டர்... ப்ளீஸ் வேண்டாம்! என்னாலே உங்களுக்கிடையே பிரச்சனை வேண்டாம். நான்... நான்... தப்பு என் பேரில்தான்... நான் இங்கே தங்குவதால்தான் எல்லாப் பிரச்சனையும்... நான் கிளம்பறேன்..." என்றவள் வேகமாகத் தன் அறைக்குச் சென்றாள்.

அவளைப் பின்தொடர்ந்தான் அபிஷேக்.

"இப்ப என்ன ஆச்சுன்னு இப்படி ஸீன் போடறே?"

அநன்யா அவனை எரித்து விடுவது போல் பார்த்தாள்.

"என்ன...? கேள்வி கேட்டால்... பதில் சொல்லத் தெரியாதா உனக்கு? நீ ஒன்றும் கண்ணகி இல்லை. நீ பார்த்தால் நான் ஒன்றும் பொசுங்கிப் போக மாட்டேன்."



"நான் கண்ணகியா இல்லையா... என்பது வேறு விஷயம். ஆனால் நான் மாதவி இல்லை. அதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்."

"ம்... ஞாபகம் வைத்துக் கொள்வதைப் பற்றி நீ பேசுகிறாயா... குட் ஜோக். நீ நடந்து கொள்ளும் முறையைப் பார்த்தால் எனக்கு நீ நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணா என்று சந்தேகமாக இருக்கிறது!" என்றான் அழுத்தமாக, அபிஷேக்.

அனன்யாவின் கை அனிச்சையாக அவன் கன்னத்தில் கோபமாகப் பதிந்தது. அவள் கண்கள் அனலைக் கக்கின.

"சே... ஐ ஹேட் யூ!" என்று சீறினாள்.

"உண்மை கசக்கத்தான் செய்யும்..." என்று உறுமிவிட்டு அங்கிருந்து வேகமாக வெளியேறினான் அபிஷேக்.

அவன் சென்ற பின்புகூட... அவன் சொன்ன சொற்கள் அவள் காதில் ஒலித்துக் கொண்டிருந்தன.

'சே! எவ்வளவு கேவலமான எண்ணம் இவனுக்கு... என்னைப் பற்றி...' – என்று மனம் குமைந்தாள் அநன்யா.

அன்று இரவு தூங்க முடியாமல் தவித்தாள் அநன்யா.

அபிஷேக் சொன்னதையே அவள் மனம் குரங்கு போல் பிடித்துக் கொண்டிருந்ததுதான்... அதற்குக் காரணம்.

அறையில் இருப்பது ஏனோ மூச்சு முட்டுவது போல் தோன்ற... சட்டென அறையை விட்டு வெளியே வந்தாள்.

இரவு நேரக் காற்று அவள் முகத்தைத் தொட்டுச் சென்றது. தோட்டத்தில் இருந்த பூக்களின் மணம் அவள் நாசியை நிறைத்தது.

நிலவு வானில் அமைதியாக ஊர்வலம் போய்க் கொண்டிருந்தது. நட்சத்திரங்கள் புடைசூழ... இயற்கையை அனுபவித்தபடியே தோட்டத்தில் இருந்த பெஞ்ச்சில் உட்கார்ந்தாள் அனன்யா.

அருகே இருந்த நீச்சல் குளத்தில் இருந்து ஒரு உருவம் வெளிப்படத் திடுக்கிட்டாள் அவள். அருகில் வர வர... அவளுக்கு அந்த உருவம் ஒரு பெண் என்று புரிந்தது.

ஒரு பத்தடி இடைவெளியில் அந்த உருவம் தெளிவாகத் தெரிந்தது அவளுக்கு. 'ஓ... இது சுப்ரியா. நீந்துவது பிடிக்கும் போல்...' - எனத் தனக்குள் நினைத்துக் கொண்டாள்.

நீச்சல் உடையில் இவள் ரொம்ப அழகாக இருக்கிறாள் என நினைத்தபடியே தலை முதல் கால் வரை அவளைப் பார்த்தவள் திடுக்கிட்டாள்.

காரணம் சுப்ரியாவின் கால் அருகே ஒரு பாம்பு ஊர்ந்து வந்து கொண்டிருந்தது.

சுப்ரியா இரண்டு அடி எடுத்து வைத்தால்... அவ்வளவுதான்! பாம்பு அவள் காலைப் பதம் பார்க்கும் அபாயம் இருந்தது.

என்ன செய்வது என்று புரியாமல் உடலும் மூளையும் மரத்துப் போக... சிலை போல் ஒரு நொடி இருந்தாள் அநனன்யா.



தொலைவில் ஒலித்த ஒரு பறவையின் குரல் அவள் மூளையின் இயக்கத்தை உயிர்ப்பித்தது.

சட்டென எழுந்தவள் சுப்ரியா மேல் பாய்ந்து அவளைப் பின்னால் தள்ளினாள்.

"ஏய்... என்ன இது? என்ன இப்படிக் காட்டுமிராண்டி மாதிரி நடந்துக்கிற? சே...!" என்று சீறினாள் சுப்ரியா.

"ஸாரி... உங்களைப் பயமுறுத்தணும்னு செய்யலை... எனக்கு வேறு வழி தெரியலை.

"அங்கே பாருங்க... அதோ போகுது பாருங்க... பாம்பு. நீங்க அதைக் கவனிக்கலை. பாம்பு உங்களை எதுவும் செய்யக் கூடாதுன்னுதான் நான் உங்க மேல விழுந்து உங்களைத் தள்ளி விட்டேன். ஸாரி... ரொம்ப ஸாரி!"

"காட்! எவ்வளவு பெரிய பாம்பு! நான்... நான்... எப்படி இதைக் கவனிக்காமல் விட்டேன்! சே... முட்டாள் மாதிரி ஏதோ யோசனையில் மூழ்கியபடி நடந்து வந்திருக்கிறேன்.

"ஸாரி.. நான் உன்னை... உங்களை வேறு திட்டி விட்டேன். ஐ அம் வெரி ஸாரி!"

"பரவாயில்லை. திடீர்னு யாராவது இப்படி நடந்து கொண்டால் கோபம் வருவது நியாயம்தான். உங்கள் மேல் தப்பு இல்லை. நான் உங்கள் அழகைக் கண்டு அதிசயித்திருந்தேன். கீழே பார்த்தால் பாம்பு.

"அப்புறம்... என்னை நீங்க ஒருமையிலேயே அழைக்கலாம். வாங்க... போங்க... வேண்டாம்."

அதைக் கேட்ட சுப்ரியாவின் இதழில் புன்னகை அரும்பியது. தன்னை அனன்யா அழகி என்று சொன்ன வுடன் சட்டென்று சுப்ரியாவிற்கு அவளைப் பிடித்துப் போனது.

அனன்யாவிற்கு மோகினி என்று பெயர் வைத்தது அதிகப்படி இல்லை... என்று அவள் பலமுறை நினைத்திருக்கிறாள்.

சாதாரண ஆடையில் எந்த ஒப்பனையும் இல்லாமல் ஒளிரும் அனன்யாவின் அழகைக் கண்டு அவள் பிரமித்திருக்கிறாள், பலமுறை.

அப்படிப்பட்ட அழகான பெண்... தன்னை அழகி என்று பாராட்டியவுடன் அவள் மனம் இறக்கையில்லாமல் மேலே மேலே பறந்தது.

நிலவொளியில் தெரிந்த அனன்யாவின் முகத்தை உற்றுப் பார்த்தாள் சுப்ரியா. அந்த முகத்தில் கள்ளம் கபடம் இல்லை. பளிங்கு போல் பிரகாசித்தது, அவள் முகம்.

"என்ன... எதுவும் பேச மாட்டேங்கிறீங்க... பாம்பைப் பார்த்த அதிர்ச்சியில் இருந்து நீங்க இன்னும் மீளலைன்னு நினைக்கிறேன்.

"நான் வேண்டுமானால் டாக்டர் ஸாரை அழைக்கவா? ஆனால் அதில் ஒரு ஆபத்து இருக்கிறது. உங்களை அவர் இந்த மாதிரி நீச்சல் உடையில் பார்த்தால் அவ்வளவுதான்...

"அப்புறம் வேறு வகையில் உங்களுக்கும் ஸாருக்கும் பிடிக்கும் வகையில்... இனிமையான ஆபத்து ஏற்பட வாய்ப்பு இருக்கு!" என்று குறும்பாகக் கண்ணடித்தாள் அநன்யா.



அதைக் கேட்டவுடன் சுப்ரியாவிற்கு அனன்யா மேல் இருந்த கோபம், எரிச்சல் எல்லாம் பஞ்சாகப் பறந்து போனது.

அநன்யாவிற்குக் கண்டிப்பாக அத்வித் மேல் தப்பான எண்ணம் ஏதுமில்லை என்பது சுப்ரியாவிற்குத் தெள்ளத் தெளிவாகப் புரிந்தது.

அந்த மாதிரி ஒரு எண்ணம் இருந்தால் தன்னைக் காப்பாற்ற அநன்யா முயற்சி செய்ய மாட்டாள். ஒரு துரும்பைக் கூடக் கிள்ளிப் போட மாட்டாள்.

ஆனால் அனன்யா பெரிய ஆபத்தில் இருந்து என்னைக் காப்பாற்றி இருக்கிறாள்.

அது மட்டும் இல்லை... இவள் என்னையும் அத்வித்தையும் இணைத்துப் பேசுகிறாள்.

இவள் மனதில் அத்வித் மேல் ஆசை இருந்தால் என்னையும் அத்வித்தையும் இணைத்து... இவள் பேச மாட்டாள்... என்று தீர்மானித்தாள் சுப்ரியா.

"இனிமையான ஆபத்து... எங்கள் திருமணத்திற்குப் பின்பு நடக்கட்டும் அனன்யா! அதற்கு முன்னால்... லக் வேண்டும். எனக்கு அது இருக்கிறதா என்று சந்தேகமாக இருக்கிறது!" என்றவளின் குரல் நடுங்கியது. கண்கள் கலங்கின. உதடு துடித்தது.

அதைப் பார்த்த அநன்யாவின் மனம் இளகியது. சுப்ரியாவின் கையை உரிமையாகப் பற்றினாள்.

# 16

நீ
இங்கே
இப்பொழுது
என்னுடன்
இல்லை!
.........
ஆனால்
உன்
நினைவு
எப்பவும்
என்
மனதில்
பொக்கிஷமாகப்
பத்திரமாக
உள்ளது!
.........
சகியே!
சில நேரங்களில்
தோன்றுகிறது
...........
உன் நினைவுகளே
எனக்குப்
போதும் என்று!

**அ**ன்று இரவு சுப்ரியாவும், அனன்யாவும் நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டிருந்தார்கள்.



சுப்ரியாவின் மனதில் நிம்மதி படர்ந்தது. அநன்யாவின் மனதில் அத்வித் இல்லை என்பது அவளிடம் பேசிக் கொண் டிருக்கும்பொழுது அவளுக்குப் புரிந்து விட்டது.

அனன்யா மேல் அவளுக்குப் பரிவும், பாசமும் பொங்கியது. பாவம்... தான் யார் என்றே இந்தப் பெண்ணிற்குத் தெரியவில்லை.

இது எவ்வளவு கஷ்டமான விஷயம். ஆனால் அதை எல்லாம் மனதில் வைத்துக் கொள்ளாமல் இந்தப் பெண் சிரித்த முகத்துடன் இயல்பாக இருக்கிறாளே.. நிச்சயமாக இவள் ரொம்ப வித்தியாசமான பெண்தான் என்று நினைத்துக் கொண்டாள் சுப்ரியா.

"உன்னுடன் பேசிக் கொண்டே இருக்கலாம் போல் இருக்கிறது அனன்யா! நேரம் போவதே தெரியவில்லை."

"ம்... எனக்கும் அப்படிச் சொல்லத்தான் ஆசையாக இருக்கிறது. ஆனால் ரொம்ப தூக்கம் வருகிறது!" என்றாள், கொட்டாவியை அடக்கியபடியே அனன்யா.

"காட்! இப்ப மணி என்ன?"

"ரொம்ப ஒண்ணும் இல்லை... காலை மணி மூன்று."

"ஓ... இவ்வளவு நேரம் ஆயிடுத்தா... ஸாரி! ரொம்ப ஸாரி. என்னால உன் தூக்கம் போச்சு... இன்னிக்கு!"

"ம்... இதே டயலாக்கை டாக்டர் ஸார் உங்களிடம் சீக்கிரம் சொல்லப் போகிறார்... பாருங்க!"

"ச்சீ... போ... அநன்யா! எனக்கு ஒரு சந்தேகம்!"

"ஐயோ! மறுபடியுமா...! இன்னிக்கு என் தூக்கம் எல்லாம் காலி போல..."

"ஏய்... ஒரு நாள் தூங்காட்டி ஒன்றும் ஆகாது. என்ன சந்தேகம்னு கேட்க மாட்டியா?"

"ம்... சொல்லுங்க. என்ன சந்தேகம் உங்களுக்கு? அடியேன் உங்கள் சந்தேகத்தைத் தெளிவு செய்கிறேன்!" என்றாள், நாடக பாணியில்.

"நீ ஏன் அத்வித்தை... டாக்டர் ஸார் என்று அழைக்கிறாய்? அண்ணா... என்று அழைக்கலாமே!"

அனன்யா சுப்ரியாவின் முகத்தைக் கூர்ந்து கவனித்தாள். அவள் உதட்டில் லேசான புன்னகை அரும்பியது.

"ம்... ம்... அத்வித் ஸாரை அப்படி நினைக்க முடியலை என்னால்... ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே அன்பு, பாசம்... இதையெல்லாம் தாண்டி வேறு எந்த உணர்வும் இருக்க முடியாதா?"

"புரியலை... அனன்யா! நீ உன் மனசில் என்ன இருக்குங்கிறதைத் தெளிவாகச் சொல்..."

"ம்... அவர் என் உயிரைக் காப்பாற்றியவர். அவரால் தான் நான் இப்பொழுது உங்கள் முன் நின்று கொண்டு பேசிக் கொண்டிருக்கிறேன்!" என்றவளின் குரல் தழு தழுத்தது.

"ஒரு சின்னத் திருத்தம்!"

"எ... என்ன... அது? நான் என்ன... தப்பாகச் சொல்லி விட்டேன்..."



"ம்... என் முன்னால் நீ நின்று கொண்டு ஒன்றும் பேசவில்லை. உட்கார்ந்து கொண்டுதான் பேசிக் கொண்டிருக்கிறாய்!" என்றாள் சிரிக்காமல், சுப்ரியா.

அதைக் கேட்ட அனன்யா கலகலவெனச் சிரித்தாள்.

"ஸோ... அத்வித் மேல் உனக்கு மரியாதை... அப்படித்தானே!"

"ம்... அது வெறும் மரியாதை மட்டும் இல்லை. ஒரு பக்தி... எனக்குச் சரியா சொல்ல வரலை... அவர் இருக்கும் திசையை நான் வணங்கத் துடிக்கிறேன். அவர் என் வாழ்க்கையை எனக்குத் திருப்பி உயிர்ப்பித்துக் கொடுத்தவர்.

"எனக்கு உயிர்ப் பிச்சை கொடுத்தவர். ரொம்ப கருணை உள்ளவர். என் கண்களுக்கு அவர் பிரம்மதேவன் போல் தான் காட்சி அளிக்கிறார்."

"ம்... அப்ப என்னைப் பார்த்தால் எப்படித் தெரிகிறது, உனக்கு?"

"ம்... அந்த வெள்ளைக் கமலத்தில் உள்ள சரஸ்வதி தேவி நீங்கதான்! டாக்டர் ஸாருக்கும் உங்களுக்கும் ஜோடிப் பொருத்தம் ரொம்ப நல்லா இருக்கு..."

அவள் சொன்னதைக் கேட்டுச் சுப்ரியாவின் மனம் மகிழ்ச்சியில் திளைத்தது. சே! அத்வித் மேல் இவளுக்கு எவ்வளவு பக்தி! அதைப் போய் நான் தப்பாகப் புரிந்து கொண்டேனே...!

இந்தத் தூய்மையான அன்பைக் கொச்சைப்படுத்த எப்படி எனக்கு மனம் வந்தது? - தன்னையே கடிந்து கொண்டாள் அவள்.

"ஐ அம் ஸாரி அநன்யா!"

"ஏ... எதுக்கு ஸாரி? இப்ப என் தூக்கத்தைக் கெடுத்தற்கா?"

"இல்லை..."

"வேறு எதுக்கு?"

"உனக்கும் அத்வித்திற்கும்... ஸாரி... நான் உங்கள் இருவரையும் தப்பாக நினைத்து விட்டேன். ஐ அம் வெரி ஸாரி... அநன்யா!"

"புரியுது. நீங்க நினைத்ததில் எந்தத் தப்பும் இல்லை. எப்பவுமே இந்தச் சமுதாயம் ஆண் - பெண் உறவைக் கொச்சைப்படுத்தித்தான் பார்க்கிறது...

பெண்ணுடன் பேசிப் பழகுபவன்... அவள் அண்ணனாக, தம்பியாக இருக்க வேண்டும். இல்லை... அந்த மாதிரி உறவு முறையைச் சும்மாவாவது பெயரளவில் குறிப்பிட வேண்டும்.

ஒரு ஆரோக்கியமான நட்போ, பக்தியோ இருந்தால்... அது நம் சமூகத்தில் ஒட்டாத ஒன்றாக இருக்கும்.

பெண்களின் சுதந்திரம் என்ற பெயரில்... பெண்கள் சிகரெட் பிடிக்கிறார்கள்... மது அருந்துகிறார்கள்... இதெல்லாம் சுதந்திரம் இல்லை. சும்மா அலட்டிக் கொள்ளும் நாகரிகம்...

கொஞ்ச நாளில் திகட்டிப் போகும், அலுத்துப் போகும் என்பது தெரியாமல் மாயையில் மூழ்கி உள்ள இந்தப் பெண்களை நினைத்தால் ரொம்ப பரிதாபமாக இருக்கிறது."



"அட... நீ என்ன பெண்ணின் சுதந்திரத்தைப் பற்றி இவ்வளவு அழகாகப் பேசுகிறாயே... குட்... குட். இப்ப பெண்கள் ரொம்ப மாறி விட்டார்கள். அவர்களுக்கு நிறைய ஆப்ஷன்ஸ் இருக்கிறது.

"ஒருவேளை ரொம்ப நாள் அடங்கியிருந்ததாலோ... இல்லை... அடக்கப்பட்டு இருந்ததாலோ... இந்த மாதிரிச் சூழல் வந்தவுடன் என்ன செய்வது என்று புரியாமல் குழம்பிப் போய் இந்த மாதிரி மடத்தனமான காரியங்களில் ஈடுபடுகிறார்களோ...?"

"ம்... அப்படியும் இருக்கலாம். மனுதர்மத்திற்கு முன்பு பெண்ணுக்கு நிறைய உரிமைகள் இருந்தன. போர்க் களத்தில் படைகளைத் தலைமை தாங்கி நடத்திச் செல்வது, சுயம்வரம் வைத்துத் தனக்குப் பிடித்தமானவனைக் கணவனாகத் தேர்ந்தெடுப்பது, சொத்தில் முழுப் பங்கு... இல்லை, பெரும்பான்மையான பங்கு என எவ்வளவோ இருந்தன.

"மனு எனும் புண்ணியவான் அதில் எல்லாம் மண்ணை அள்ளிப் போட்டு விட்டான். அதன் பின்பு ரொம்ப வருடங்கள் அடங்கியே இருந்தனர், பெரும்பான்மையான பெண்கள்..."

"ம்... இப்ப பொறுத்தது போதும் பொங்கி எழு... எனப் பொங்குகிறார் போல...!"

"நல்ல விஷயத்திற்காகப் பொங்குவது தப்பே இல்லை..."

சுவர்க் கடிகாரம் மணி ஐந்து என்று குயில் போல் ஐந்து முறை கூவி நிரூபித்தது.

"ஆஹா... இன்னும் ஒரு மணி நேரமானால் போதும். விடிந்து விடும்..." என்றாள் சுப்ரியா.

"நான் இப்பவாவது என் அறைக்குப் போகலாமா?" என்றாள் பரிதாபமாக அனன்யா.

"ஓ... ஸாரி... ரியலி ஸாரி...! போய்த் தூங்கு..."

"ம்... பெரிய மனது வைத்து இப்பொழுதாவது விட்டீர்களே... அதுவே போதும்."

"குட் நைட் அனன்யா!"

"ம்... இது குட் நைட் இல்லை... குட் மார்னிங்!" - என்றபடியே அவள் அறையிலிருந்து வெளி வந்தாள் அனன்யா.

கொட்டாவியை அடக்கியபடியே நடந்து வந்தவளுக்குச் சட்டெனத் தலை சுற்றுவது போல் தோன்றியது. எதிரில் இருந்த பொருட்கள் எல்லாம் ஆடுவது போல் உணர்ந்தாள், அவள்.

கண்களைக் கசக்கிக் கொண்டு நடக்க முயற்சி செய்தாள். காற்றில் மிதப்பது போல் ஒரு நூதன உணர்வு அவளை ஆட்கொண்டது.

எதிரில் ஒரு உருவம் மங்கலாகத் தெரிய... உதவி கேட்க வாயைத் திறக்க முயன்றாள். ஆனால் வெறும் காற்றுதான் வந்தது அவளுக்கு.

கீழே விழப் போனவளை இரண்டு வலிய கரங்கள் தாங்கிப் பிடித்தன. அந்தக் கரங்கள் அவளைத் தூக்கின. ஒரு குழந்தையைப் போல் தன் அகன்ற மார்பில் ஒண்டிக்



கொண்டிருக்கும் அனன்யாவைப் பார்த்துப் பதறினான் அபிஷேக்.

"நீ அவளை ரொம்ப வேலை வாங்குகிறாய் போல... அதுதான் வேலைச் சுமை பொறுக்க முடியாமல் மயங்கிக் கீழே விழுந்து விட்டாள்..." என்றான் அத்வித், குற்றம் சாட்டும் குரலில்.

"சே... சே... நான் அவ்வளவு கல் மனதுக்காரன் இல்லை. என்ன பேச்சு பேசுகிறாய்... நீ? நான் என்னவோ அவளைச் செங்கல் பாண்ட் தூக்கச் சொன்னது போல் அல்லவா பேசுகிறாய்!"

"ம்... கம்ப்யூட்டர் வேலை அவளுக்கு ரொம்ப ஸ்ட்ரெஸ்ஃபுல்லாக இருந்ததோ என்னவோ? அதனால்தான் மயங்கி விழுந்து விட்டாள் போல..."

"இ... இல்லை... அண்ணன் பாவம்! அவரை ஏதும் சொல்லாதீர்கள். நடந்ததற்கெல்லாம் நான்தான் காரணம்..." என்றாள், மெல்லிய குரலில் சுப்ரியா.

"சுபா... நீ என்ன சொல்றே?"

"என்னுடன்தான் அநன்யா... இரவு முழுக்கத் தூங்காமல் பேசிக் கொண்டிருந்தாள்."

"வாட்... உன்னுடனா...? உனக்கு அவளைப் பிடிக்கவே பிடிக்காதே... எப்படி நீங்கள் ஒத்துப் போனீர்கள்?" என்றான் அத்வித், ஆச்சரியமாக.

"அதெல்லாம் ரகசியம். அது எங்கள் இரண்டு பேருக்கும் மட்டுமே உரிய ஒன்று. இப்போ நேரத்தை வீணாக்காமல் இவள் உடம்புக்கு என்னவென்று சொல் லுங்கள்."

"ம்... உடம்புக்கு ஒன்றும் இல்லை. பி.பி. கொஞ்சம் குறைவாக இருக்கு. அதனால்கூடத் தலைச் சுற்றல் வந்திருக்கலாம்."

"அப்பாடா... இப்பத்தான் நிம்மதியாச்சு மனசு. பாவம்! நம்மை நம்பி வந்த பெண்... இவளுக்கு என்னமோ ஏதோ என்று நான் பதறிப் போய் விட்டேன்!" என்றாள் மீனா.

"நீ எப்படி அண்ணா... கரெக்டா சினிமாப் படத்தில் வருவது போல் இவள் மயக்கம் போட வரும்பொழுது அவள் கீழே விழாமல் தாங்கிப் பிடித்தாய்?" என்றாள் கிண்டலாக, சுப்ரியா.

"ஏய்... உனக்குக் கிண்டல் அதிகமாகி விட்டது..." என்று அடிப்பது போல் கையை ஓங்கினான் அபிஷேக்.

"அச்சோ... என்னைக் காப்பாற்றுங்கள்!" என்று மீனாவின் பின்னால் ஒளிந்து கொண்டாள்.

"பாவம் தம்பி... சும்மா விளையாட்டுக்கு உங்களைச் சீண்டுது... நீங்க அதைப் போய் சீரியஸாக எடுத்துக் கொள்கிறீர்களே... சரி, நீங்க எப்படி சரியா இங்கே வந்தீங்க?"

"இல்லை... ஆன்ட்டி! நான் வாக்கிங் போவதற்காகக் கிளம்பி வெளியே வந்து கொண்டிருந்தேன். அப்பொழுது தான் அநன்யாவைப் பார்த்தேன். அவள் ஒரு தினுசாகத் தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்து கொண்டிருந்தாள்.

"அவளைப் பெயர் சொல்லி அழைத்தேன். ஆனால் அவளுக்கு அது எதுவும் கேட்கவில்லை. கீழே விழப் போனாள்..."



"உடனே நீ இதுதான் சாக்கு என ஓடிப் போய் அவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டாய்... அப்படித்தானே அண்ணா!"

அதைக் கேட்டு அத்வித் சிரித்தான். மீனாவும் மகனின் சிரிப்பில் இணைந்து கொண்டாள்.

அபிஷேக்கிற்கு என்னவோ போல் இருந்தது. ஆனால் தன்னையும் அனன்யாவையும் இணைத்துப் பேசியது அவனுக்குப் பிடித்தது. அவன் மனதில் ஏதோ இனிய நாதம் ஒலிப்பது போல் ஒரு உணர்வு தோன்றியது.

கண்களை மூடி அந்த உணர்வை அனுபவித்தான். அவனை அறியாமல் அவன் இதழ்களில் மெல்லிய புன்னகை பரவியது.

"அண்ணா... அதற்குள் டுயட் பாட ஆரம்பித்து விட்டாய் போல... டுயட்டில் என்ன உடை போட்டிருக் கிறாள், அநன்யா?

ஹிந்திப் படங்களில் வருவது போல் சுடிதாரா... இல்லை... பாரதிராஜா படத்தில் வருவது போல் வெள்ளை உடையா... இல்லை, தெலுங்குப் பட ஹீரோயின் போல்..." என்று அவள் முடிக்கும் முன்பு அவள் கன்னத்தைக் கிள்ளினான் அபிஷேக்.

"என்ன இது... நீ இன்னிக்கு ஒரு மாதிரியாகப் பேசுகிறாய்? ஏதோ சரியில்லை...! அத்வித்... நீ இவளையும் பரிசோதித்துப் பார். ஸம்திங் இஸ் ராங்!" - என்றான், அபிஷேக் சீரியஸாக.

# 17

நிழல்களின்
தரிசனம்
எனக்கு
அடிக்கடி
கிடைக்கின்றது!
ஆனால்
நிஜத்தின்
அறிமுகம்
எனக்குக்
கிடைக்கவில்லை!
சட்டென
நீ
வந்தாய்
ஒரு
மின்னல்
போல்
என்
வாழ்வில்!
..........
கனவு
கண்டேன்
நான் கண்
விழித்தபடியே!

அனன்யா மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தாள். முதலில் என்ன நடந்தது என்று அவளுக்குப்



புரியவில்லை. பின்பு லேசாக நடந்ததெல்லாம் அவள் மனதில் ஃபிளாஷ் பேக் போல் ஓடியது.

படுக்கையில் இருந்து எழுந்திருக்க முயன்றாள் அவள்.

"ஹாய்... கண் விழிச்சிட்டியா... நீ?" என்றான் உற்சாகமாக அபிஷேக்.

"ம்... ஆமாம்."

"பரவாயில்லை... மயக்கம் அடைந்தவர்கள் கண் விழிக்கும் பொழுது கேட்கும் முதல் கேள்வியை... நீ கேட்கவில்லை. தட்ஸ் குட்."

"அது என்ன கேள்வி?"

"நான் எங்கே இருக்கிறேன்?' என்று கண்களைக் கசக்கிக் கொண்டு கேட்பார்கள். ஆனால் நீ அப்படி ஏதும் செய்யவில்லை!" என்றான், புன்னகைத்தபடியே அபிஷேக்.

"ம்... சுப்ரியா அறையில் பேசிக் கொண்டிருக்கும் பொழுது நான் நன்றாகத்தான் இருந்தேன். அப்புறம் அவங்க அறையிலிருந்து நடந்து வந்தேன். அப்பதான் தலை சுற்றுவது போல் இருந்தது."

"ம்... நீ மயங்கிக் கீழே விழப் போனாய். நான்தான் உன்னைத் தாங்கிப் பிடித்து... தூக்கிக் கொண்டு வந்தேன். அது ஞாபகம் இருக்கா... உனக்கு?"

அவள் கன்னங்களில் அவளை அறியாமல் செம்மை படர்ந்தது.

"இ... இல்லை. ஞாபகம் இல்லை..."

"மீண்டும் வேண்டுமானால் ஆக்ஷன் ரீப்ளே செய்யவா?" - என்றபடியே அவளை நெருங்கினான், அபிஷேக்.

அவள் அவனை முறைத்தாள்.

"ஆனால் அதில் ஒரு சங்கடம் இருக்கிறது."

"என்ன சங்கடம்?"

"உன் வெயிட் கொஞ்சம் அதிகம்தான். அதுதான் யோசனையா இருக்கு! உன்னை அப்ப தூக்கினதுக்கே நான் அத்வித்திடம் போய் பெய்ன் கில்லர் போட்டுக் கொண்டேன். அதற்குப் பின்புதான் கை வலி சரியானது."

அவள் முகம் கோபத்தால் சிவந்தது. சே! என்ன இப்படிச் சொல்லி விட்டான்... நான் என்ன அவ்வளவு வெயிட்டாக... குண்டாகவா இருக்கிறேன்? அவள் மனதில் ஒரு சோக கீதம் ஒலித்தது.

"ஹலோ அனன்யா...! அப்பாடா... நீ கண்விழித்து விட்டாயே... அதுவே எனக்கு நிம்மதியாக இருக்கு... நீ மயக்கம் போட்டு விழுந்ததற்கு நான்தான் காரணம் என்று அத்வித் என்னை ரொம்ப ஓட்டித் தள்ளுகிறார்..." என்றபடியே, உற்சாகமாக அவளை நோக்கி வந்தாள், சுப்ரியா.

"சே... சே... நீங்க எப்படிக் காரணமாவீங்க?"

"ம்... நான் போட்ட பிளேடு தாங்க முடியாமல்தான் நீ மயங்கி விழுந்து விட்டாயாம்... சில பேர் பேசுவதைக் கேட்டால் அவ்வளவு போர் அடிக்குமாம். அதனால் மூளை சோர்ந்து போய் விடுமாம். அதனால் மயக்கம் வர வாய்ப்பு இருக்கு... என்று அத்வித் சொன்னார்."



"ஓ காட்...! அப்படி எல்லாம் எதுவும் இல்லை. நீங்கள் ரொம்ப சுவாரசியமாகப் பேசினீர்கள். எனக்கு நேரம் போனதே தெரியவில்லை. ஆனால் சில பேருடன் பேசிக் கொண்டிருந்தால் மூளையே சூடாகி விடும்..." என்றாள், அபிஷேக்கைப் பார்த்தபடியே அனன்யா.

"ஆனால் அதெல்லாம் மூளை இருப்பவர்களுக்குத் தானே... உனக்குத்தான் அது இல்லவே இல்லையே...!" என்றான், கண்களில் குறும்பு கொப்புளிக்க அபிஷேக்.

அனன்யாவின் முகம் வாடியது. அவன் விளையாட் டுக்காகச் சொன்னது அவள் மனதைத் தைத்தது.

"சரி... அநன்யா ரெஸ்ட் எடுக்கட்டும். அவளை டிஸ்டர்ப் செய்ய வேண்டாம். ப்ளீஸ்... எல்லாரும் கிளம்புங்க!" என்றான் கண்டிப்பான தொனியில் அத்வித்.

அதைக் கேட்டு எல்லோரும் அங்கிருந்து வெளியேறி னார்கள்.

"டாக்டர் ஸார்... எனக்கு ஒரு சந்தேகம்..."

"என்ன அனன்யா?"

"நான் மயக்கமடைந்ததற்கு ஏதாவது காரணம் இருக்கா? என்னிடம் மறைக்காமல் சொல்லுங்கள்..."

"அதெல்லாம் ஏதுமில்லை அனன்யா... நீ மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதே."

"கஷ்டமாக இருக்கிறது டாக்டர்! சில நேரம் நான் இயல்பாக இருப்பது போல் காட்டிக் கொள்கிறேன். ஆனால் மனதிற்குள் நான் அழுது கொண்டிருக்கிறேன், டாக்டர்!

"என்னுடைய தேடல் எப்போ முடிவுக்கு வரும் என்று எனக்குத் தெரியவில்லை. நான் யார் என்று தெரியாமல் புத்தம் புதிதாக எல்லாமே இருப்பதை நினைக்க நினைக்க... மனம் சோர்வாகி விடுகிறது.

"என்னைத் தேடிக் கொண்டு யாருமே வர மாட்டார்களா... டாக்டர்! நான்... நான் அனாதையாக இருந்திருப்பேனோ? அதனால்தான் என்னைத் தேடிக் கொண்டு யாரும் வரவில்லை... போல!" என்றவளின் கண்கள் கலங்கின.

"அனன்யா... என்ன இது? இப்படி எல்லாம் பேசறே... நீ ரொம்ப தைரியமான பெண்... அப்படின்னு நான் அம்மாவிடமும் சுப்ரியாவிடமும் சொல்லிக் கொண்டிருப்பேன். பட்... நீ இப்படி மனதிற்குள் எல்லாச் சோகங்களையும் பூட்டிக் கொண்டு... வெளியே சிரித்துப் பேசிக் கொண்டு இருந்திருக்கிறாய்... அப்படித்தானே!"

"என்ன செய்வது டாக்டர்...?"

"அநன்யா... பழைய நினைவுகள் உன்னை அநாவசியமாகக் கட்டிப் போடும். உன் முன்னேற்றத்தைத் தடுக்கும் ஒரு சங்கிலி போல் உன்னை அது கட்டிப் போட்டு விடும். உனக்கே தெரியாமல் நீ அதில் மாட்டிக் கொண்டு திணறுவாய். அதனால் அந்த நினைப்பெல்லாம் இல்லாமல் நீ அமைதியாக இருக்க உனக்குக் கடவுள் உதவி செய் திருக்கிறார்... என்று நினைத்துக் கொள் அனன்யா!"

"ம்... ஜே.கே. சொன்ன தத்துவத்தை நீங்கள் ரொம்ப அழகாகப் புரியும்படி சொல்கிறீர்கள்... டாக்டர்!" – என்றாள் லேசான புன்னகையுடன் அவள்.



"ம்... நீ நிறையப் படித்திருக்கிறாய். அது எல்லாம் உனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. அதுவே ஒரு நல்ல அறிகுறிதான். இந்த மாதிரி விஷயங்களை கம்பேர் செய்து பார்க்கும் திறன் மூளைக்கு உண்டு.

"அது உனக்கு நன்றாக வேலை செய்கிறது. நீ இதே போல்... பேசிக் கொண்டிரு. எதைப் பற்றியாவது தெரிந்து கொள்ள முயற்சி செய். நீ கணினியில் ரொம்ப சர்வ சாதாரணமாக ரிப்போர்ட்ஸ் எல்லாம் தயாரித்து அபிஷேக்கிற்குக் கொடுத்தாயாம். அபிஷேக் என்னிடம் சொன்னான்.

"இந்த மாதிரிச் செயல்களில் ஈடுபடுவதற்கு உன் பழைய வாழ்க்கையில் நீ அதைச் செய்ததால்தான். அதனால் உன் மூளைக்கு எவ்வளவு வேலை கொடுக்க முடியுமோ... அவ்வளவு வேலை கொடு. கண்டிப்பாக உனக்குச் சீக்கிரமே ஞாபகம் திரும்பும். எனக்கு நம்பிக்கை இருக்கிறது..." என்றான், தீர்மானமாக அத்வித்.

"ரொம்ப தேங்க்ஸ் டாக்டர்!"

"எதற்கு இப்ப தேங்க்ஸ் அனன்யா...!"

"என் உயிரைக் காப்பாற்றியவர் நீங்கள். என்னை உங்கள் வீட்டிலேயே தங்க வைத்து எனக்கு ஆதரவு அளிக்கிறீர்கள். நீங்களும்... உங்கள் அம்மாவும் நடமாடும் தெய்வங்கள்தான் ஸார்...

"நான் உங்களுக்கு ரொம்பவே நன்றிக் கடன் பட்டிருக் கிறேன். அதை எப்படி அடைக்கப் போகிறேன் என்று எனக்குத் தெரியவில்லை."

"அநன்யா... எனக்கு ஒரு உதவி செய்வாயா?"

"என்ன டாக்டர்... இப்படிக் கேட்டுட்டீங்க. நீங்க எனக்குக் கட்டளை பிறப்பிக்கணும். அதுதான் சரி வரும்..." என்றாள் அனன்யா.

"சரி... எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொள். இன்னொரு முறை நன்றிக் கடன் அப்படி... இப்படி... என்று பெரிய வார்த்தைகள் எல்லாம் உபயோகிக்காதே... ப்ளீஸ்!

"மனிதனுக்கும் மிருகத்திற்கும் உள்ள வேறுபாடு சக உயிர்களிடம் அன்பு பாராட்டுவதே... அதனால் இதைப் பெரிய விஷயமாக எடுத்துக் கொள்ளாதே. அதோடு நீ இங்கே சும்மா ஒன்றும் தங்கவில்லையே...

"அபிஷேக்கிடம் நீ வேலை பார்க்கிறாய். அதற்கு உனக்குச் சம்பளம் கிடைக்கப் போகிறது. அதை நீ அம்மாவிடம் கொடுக்கப் போகிறாய். அதனால் சும்மா ஓசியில் இங்கே இருப்பது போல் பில்டப் கொடுக்காதே... அனன்யா!" என்றான், கண்களில் குறும்பு மின்ன அத்வித்.

"சரி... டாக்டர்! நான் இனி அப்படிப் பேசவில்லை."

"தட்ஸ் குட்."

"உங்களுக்குப் பசிக்கவே பசிக்காதா... எனக்கு ரொம்ப பசிக்கிறது. சீக்கிரம் வாங்க... சாப்பிடலாம்!" என்றாள், அறையினுள் நுழைந்தபடியே சுப்ரியா.

"பசிக்குது... ஆனால் உணவு பிடிக்கவில்லை. என்ன செய்வது சுபா? இதற்கு என்ன பெயர்?" என்றான் மென்மையான குரலில் அத்வித்.

அவள் முகம் அந்தி வானமாகச் சிவந்தது.



"என்ன சுபா பதில் இல்லை... நானே சொல்லவா?" - அவன் குரல் குழைந்தது.

"ம்..."

"இதுக்குப் பெயர் பயம். காரணம் இன்று சமையல் செய்தது நீ... அதனால்தான் பசி எடுத்தும் சாப்பிடப் பயமாக இருக்கிறது."

சுப்ரியாவின் முகம் கோபத்தால் சிவந்தது. அத்வித் சொன்னதைக் கேட்டு... அனன்யா சிரித்தாள்.

"அனன்யா... நீயும் இவர் கட்சியா?" என்று செல்லமாகக் கோபித்துக் கொண்டாள் சுப்ரியா.

"சே... சே... நான் உன் கட்சிதான் எப்பொழுதுமே!"

"அப்ப வா... சாப்பிட நீயாவது வா..."

"நான் வரேன். எனக்கு ரொம்ப பசிக்குது."

"ம்... நீங்க வந்தால் வாங்க. இல்லை... பசியோடவே இருங்க. நாங்க சாப்பிடப் போறோம்!" என்றாள், சுப்ரியா உற்சாகமாக.

"ம்... ரெண்டு பெண்களும் சேர்ந்து கொண்டீர்கள்... இனி நான் அம்பேல்தான்!"

"ம்... இப்ப எல்லா இடத்திலும் பெண்களின் ஆட்சி தான். எங்க கைதான் ஓங்கி இருக்கு. அதனால பார்த்து ஜாக்கிரதையா நடந்து கொள்ள வேண்டியது உங்க பொறுப்பு!" என்றாள் சுப்ரியா.

"ஆமாம்... சுபா! நீ சொல்வது நூற்றுக்கு நூறு உண்மை. குடியரசுத் தலைவர் ப்ரதீபா பாடீல், உ.பி. முதலமைச்சர் மாயாவதி, மேற்கு வங்காள முதலமைச்சர்

மம்தா பானர்ஜி, நம்ம தமிழ் நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதா, காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா... என்று பட்டியல் நீண்டு கொண்டுதான் போகிறது..."

"ரொம்ப சோகமாகச் சொல்கிறீர்களே... இதை?"

"அச்சச்சோ... என் முகமே அப்படித்தான். வேண்டு மானால் சிரித்தபடி இப்படிச் சொல்லவா!" – என்று பல்லைக் காட்டி ஈ என்று சிரித்தான் அவன்.

"ப்ளீஸ்... சகிக்கலை. இப்படி எல்லாம் செய்யா தீர்கள்..."

"சரி சுபா... வா, சாப்பிடப் போகலாம். அனன்யா... வா நீயும்...!"

டைனிங் ஹாலில் உணவுப் பண்டங்களின் மணம் காற்றில் கலந்திருந்தது.

"ஆஹா... என்ன அருமையான வாசனை!" என்று மூச்சை இழுத்தபடியே உள்ளே நுழைந்தான் அபிஷேக்.

"எல்லாம் யார் சமைத்தது... நான்தான்...!" என்று இல்லாத காலரைத் தூக்கி விட்டுக் கொண்டாள் சுப்ரியா.

"ம்... அதுதானே பயமாக இருக்கிறது..."

"அண்ணா... யூ... டூ... நீங்க கூட இப்படிப் பேசறீங்களே!"

"ம்... என்ன செய்வது? சமையலில் ஏ.பி.சி.டி. கூடத் தெரியாது. அதுதான் பயமாக இருக்கிறது. ஆனால் ஒரு விஷயம் தெம்பைக் கொடுக்கிறது!" என்றான் அபிஷேக்.

"என்ன அது?"



"ம்... கூடவே டாக்டர் இருப்பதால் பயமின்றி ரிஸ்க் எடுக்கலாம். அதுதான் சாப்பிடத் தெம்பைத் தருகிறது."

"நீங்க இப்படிப் பேசறது சரியில்லை. சுப்ரியாவின் சமையல் நன்றாக இருக்கும். எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நான் சாப்பிடப் போகிறேன்!" என்றபடியே நாற்காலியில் உட்கார்ந்தாள்.

"சோதனை எலி... நீ..." என்றான் அபிஷேக்.

அனன்யா அவனை முறைத்தாள்.

## 18

நீ
இல்லாத
இடம்
வெறுமையாகக்
காட்சி
அளிக்கிறது!
எதைக்
கொண்டு
அந்த
வெறுமையைப்
போக்குவது?
இயற்கை
அழகா?
புத்தகங்களா?
இசையா?

எல்லா
முயற்சியிலும்
தோற்றுப்
போய்
முடிவுக்கு
வந்தேன்!
உன்னை
அழைப்பது
என்று!

அன்று அநன்யாவிற்கும், அபிஷேக்கிற்கும் தான் பணிபுரியும் இடத்தைக் காட்டுவது என முடிவு செய்திருந்தாள் சுப்ரியா. அதற்காகவே ஐ.ஜி.கேர் நிறுவனத் தலைவரிடம் இருந்து ஸ்பெஷல் பெர்மிஷன் வாங்கியிருந்தாள்.

அத்வித்திற்கு முக்கியமான ஆபரேஷன் இருப்பதால் வர முடியாது என்று சொல்லி விட்டான் அவன்.

அதோடு... அத்வித்திற்கு அந்த இடங்கள் எல்லாம் பழக்கமான ஒன்று. புதிது இல்லை. அது மட்டும் இல்லை. ஏனோ இந்த மாதிரி அணுமின் நிலையங்கள் எல்லாம் அவன் மனதை ஈர்ப்பது இல்லை.

ஆனால் ஒரு கசப்பான உணர்வை மட்டுமே அவன் மனதில் அது விதைத்தது. இந்த மாதிரி இடங்களில் ரேடியோ ஆக்டிவ் பொருட்கள் நிறைய இருக்கும்.

தீ, வெள்ளம், சுனாமி பேன்ற இயற்கைச் சீற்றங் களைச் சமாளிக்கும் விதத்தில் இவை கட்டப்பட்டு இருக்கின் றனவா?



அந்தச் சந்தேகம் அவன் மனதை எப்பொழுதுமே அரித்துக் கொண்டிருக்கும்.

கல்கத்தாவில் நடந்த தீ விபத்து ஒன்று அவன் நினைவுக்கு வந்தது. ஹாஸ்பிடலில் நடந்த அந்தத் தீ விபத்து காரணமாக ஹாஸ்பிடலில் இருந்த பல நோயாளிகள் இறந்து போனது அவன் மனதை உலுக்கியது.

அதை விடக் கொடுமை ஹாஸ்பிடலில் புற்றுநோய்ச் சிகிச்சைக்காக இருந்த ரேடியோ ஆக்டிவ் பொருட்கள் கசிந்திருக்குமோ... அதனால் ஏதேனும் சேதம் ஏற்படுமோ என்பதைப் பரிசீலனை செய்வதற்காகப் பாபா அணு ஆராய்ச்சி நிலையத்திலிருந்து ஒரு குழு... நிலைமையைக் கண்டு அறிவதற்காக ஹாஸ்பிடலுக்கு வந்தது அவன் நினைவுக்கு வந்தது.

ஹாஸ்பிடலில் சிகிச்சைக்காகக் கொஞ்சம் ரேடியோ ஆக்டிவ் பொருட்கள் இருக்கும். ஆனால் அணுமின் நிலையங்களில் அதைப் போல் பெருமடங்கு அளவில் பொருட்கள் இருக்கும் என்பது அவனுக்குத் தெரியும்.

இத்தனை சக்தி வாய்ந்த பொருட்களால் மனித குலத் திற்கு எந்த அழிவுச் சக்தியும் ஏற்படாமல் இருக்க வேண்டுமே என்ற கவலை அவன் மனதை அரித்தது. அதனால்தான் இன்னொரு அணுமின் நிலையம் இங்கே வரப் போவதாகச் செய்தி வந்தவுடன் மனம் கொதித்துப் போனான் அத்வித்.

எப்படியாவது அதைத் தடை செய்ய வேண்டும் என்று அவன் உறுதி பூண்டான். அதனால்தான் அகிம்சைப் போராட்டத்தின் மூலமாக அதை எதிர்த்துப் போராடத் தொடங்கினான்.

கல்பாக்கத்தில் அவனுக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. அதனால் அவன் சொல்வதைக் கேட்க மக்கள் தயாராக இருந்தனர்.

மக்கள் சக்தி அடுத்த அணுமின் நிலையத்திற்கு ஆதரவாக இல்லை என்பது அரசாங்கத்துக்குப் புரிந்தது. அதனால் அந்த முயற்சியைத் தற்காலிகமாகக் கைவிட்டு இருந்தது.

"போகலாமா... அனன்யா!" என்ற சுப்ரியாவின் குரல்... அத்வித்தை மீண்டும் நிஜ உலகிற்கு அழைத்து வந்தது.

"நான் ரெடி... போகலாமே! டாக்டர் ஸார்... நீங்க வரலையா?"

"இல்லை அநன்யா. எனக்கு ஒரு எமெர்ஜென்ஸி ஆபரேஷன். அதனால் வர முடியாது."

"ம்... அநன்யா! உண்மையான காரணம் அது இல்லை..." என்றாள் சுப்ரியா.

"வேறு என்ன?"

"அத்வித்திற்கு அணுமின் நிலையம் என்றால் அலர்ஜி!"

"அப்படியா... ஏன் டாக்டர் ஸார்?"

"சுற்றுப்புறத்திற்கு எந்த நன்மையும் இதனால் இல்லை. அது மட்டும் இல்லை... ஆபத்துகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது."

"பட்... இதனால் நன்மைகள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறதே... மின்சார உற்பத்திக்கு இது உதவி புரியும். நம் நாட்டில் மின்சாரம் இப்பொழுது ரொம்ப அத்தியாவசியமான ஒன்றாகி விட்டது."



"ம்... நான் உன்னுடன் இதைப் பற்றி வாதாட விரும்பவில்லை... சுபா!"

"சரி... உங்களுக்கு விருப்பம் இல்லை என்றால் நானும் அதைப் பற்றி மேற்கொண்டு பேச விரும்பவில்லை. அநன்யா... வா நாம போகலாம். அபிஷேக்கும் வருவதாகச் சொன்னான். எங்கே அவனைக் காணோம்?"

"நான் ரெடி. நீங்க பேசுவதைக் கேட்டபடியே நின்று கொண்டிருந்தேன். சபாஷ்! சரியான போட்டி... என்று சொல்லலாம் என நினைத்தேன். ஆனால் அதற்குள் அத்வித் சரண்டர் ஆகிவிட்டான்."

"சுபாவிடம் பேசி ஜெயிக்க முடியாது, அபிஷேக். அதனால்தான் நான் அப்படிச் செய்தேன்."

"ஸோ... திருமணத்திற்கு அப்புறம் உங்களுக்குள் பிரச்சனையே வராது. வந்தாலும் டாக்டர் ஸார்... உங்ககிட்ட சரண்டர் ஆகிவிடுவார்!" என்றாள் அனன்யா, உற்சாகமாக.

அதைக் கேட்ட சுப்ரியாவின் முகத்தில் செம்மை படர்ந்தது. அவள் ஏதும் பேசாமல் தலை குனிந்தாள். அத்வித் இதழில் கர்வம் கலந்த புன்னகை படர்ந்தது.

"போகலாமா... சுப்ரியா!" என்று அபிஷேக் அங்கு பரவியிருந்த மௌனத்தைக் கலைத்தான்.

"ம்... போகலாம் அண்ணா! வா அனன்யா..." என்றவள், பார்வையை அத்வித்திடம் இருந்து விடை பெற்றுக் கொண்டாள்.

கல்பாக்கத்தில் அவனுக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. அதனால் அவன் சொல்வதைக் கேட்க மக்கள் தயாராக இருந்தனர்.

மக்கள் சக்தி அடுத்த அணுமின் நிலையத்திற்கு ஆதரவாக இல்லை என்பது அரசாங்கத்துக்குப் புரிந்தது. அதனால் அந்த முயற்சியைத் தற்காலிகமாகக் கைவிட்டு இருந்தது.

"போகலாமா... அனன்யா!" என்ற சுப்ரியாவின் குரல்... அத்வித்தை மீண்டும் நிஜ உலகிற்கு அழைத்து வந்தது.

"நான் ரெடி... போகலாமே! டாக்டர் ஸார்... நீங்க வரலையா?"

"இல்லை அநன்யா. எனக்கு ஒரு எமெர்ஜென்ஸி ஆபரேஷன். அதனால் வர முடியாது."

"ம்... அநன்யா! உண்மையான காரணம் அது இல்லை..." என்றாள் சுப்ரியா.

"வேறு என்ன?"

"அத்வித்திற்கு அணுமின் நிலையம் என்றால் அலர்ஜி!"

"அப்படியா... ஏன் டாக்டர் ஸார்?"

"சுற்றுப்புறத்திற்கு எந்த நன்மையும் இதனால் இல்லை. அது மட்டும் இல்லை... ஆபத்துகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது."

"பட்... இதனால் நன்மைகள் ஏற்பட வாய்ப்பு இருக் கிறதே... மின்சார உற்பத்திக்கு இது உதவி புரியும். நம் நாட்டில் மின்சாரம் இப்பொழுது ரொம்ப அத்தியாவசியமான ஒன்றாகி விட்டது."



"ம்... நான் உன்னுடன் இதைப் பற்றி வாதாட விரும்பவில்லை... சுபா!"

"சரி... உங்களுக்கு விருப்பம் இல்லை என்றால் நானும் அதைப் பற்றி மேற்கொண்டு பேச விரும்பவில்லை. அநன்யா... வா நாம போகலாம். அபிஷேக்கும் வருவதாகச் சொன்னான். எங்கே அவனைக் காணோம்?"

"நான் ரெடி. நீங்க பேசுவதைக் கேட்டபடியே நின்று கொண்டிருந்தேன். சபாஷ்! சரியான போட்டி... என்று சொல்லலாம் என நினைத்தேன். ஆனால் அதற்குள் அத்வித் சரண்டர் ஆகிவிட்டான்."

"சுபாவிடம் பேசி ஜெயிக்க முடியாது. அபிஷேக். அதனால்தான் நான் அப்படிச் செய்தேன்."

"ஸோ... திருமணத்திற்கு அப்புறம் உங்களுக்குள் பிரச்சனையே வராது. வந்தாலும் டாக்டர் ஸார்... உங்ககிட்ட சரண்டர் ஆகிவிடுவார்!" என்றாள் அனன்யா, உற்சாகமாக.

அதைக் கேட்ட சுப்ரியாவின் முகத்தில் செம்மை படர்ந்தது. அவள் ஏதும் பேசாமல் தலை குனிந்தாள். அத்வித் இதழில் கர்வம் கலந்த புன்னகை படர்ந்தது.

"போகலாமா... சுப்ரியா!" என்று அபிஷேக் அங்கு பரவியிருந்த மௌனத்தைக் கலைத்தான்.

"ம்... போகலாம் அண்ணா! வா அனன்யா..." என்றவள், பார்வையை அத்வித்திடம் இருந்து விடை பெற்றுக் கொண்டாள்.

'போய் வா...' என்பது போல் அவனும் கண்களால் விடை கொடுத்தான்.

வெளியே இனோவா தயாராக இருந்தது. டிரைவர் அவர்கள் வருவதைப் பார்த்துப் பவ்யமாக கார் கதவைத் திறந்தார்.

அவர்கள் உட்கார்ந்தவுடன் கார் சீறிப் பாய்ந்தது. சுப்ரியா அத்வித்தை நினைத்தபடியே கனவுலகில் மிதந்து கொண்டிருந்தாள்.

தன் அருகே அழகான பதுமை போல் உட்கார்ந் திருந்த அநன்யாவின் அழகை ரசித்தபடியே லயித்திருந் தான் அபிஷேக்.

"மேடம்! இறங்கலையா?" என்று டிரைவர் சொன்ன வுடன்... எல்லோரும் அவரவர் கனவுலகில் இருந்து வெளியே வந்தனர்.

சுப்ரியா தன் கைப்பையில் இருந்த பெர்மிஷன் லெட்டரை அங்கிருந்த செக்யூரிட்டியிடம் கொடுத்தாள்.

"தேங்க்ஸ் மேடம்! நீங்க அவங்களை அழைத்துக் கொண்டு போகலாம்!" என்றார் அவர்.

பிரம்மாண்டமான கட்டடத்தைப் பார்த்துப் பிரமித்தாள், அநன்யா.

"இந்த ஐ.ஜி.கேர் நிலையம் எப்பொழுது நிறுவப்பட்டது தெரியுமா?" என்றாள் சுப்ரியா.

"ம்... தெரியாது."

"இது 1971ஆம் ஆண்டு இங்கே தொடங்கப்பட்டது. இது சென்ட்ரல் கவர்ன்மெண்ட்டைச் சேர்ந்தது. அடாமிக் எனர்ஜி மூலமாக இங்கே நிறைய ஆராய்ச்சிகள் நடக் கின்றன."



"ஓ... அப்படியா!"

"ஆமாம்... உலகிலேயே முதல் முறையாக ஒரு ரீஆக்டர் யூ-233 எனும் எரிசக்தி மூலம் இங்கே இயங்குகிறது தெரியுமா?"

"காமினி தானே... அந்த ரீஆக்டர் பெயர்!" என்றான் அபிஷேக்.

"ஆமாம் அண்ணா... யூ ஆர் ரைட்!"

"ம்... எப்பவுமே நான் மிஸ்டர் ரைட்தான்."

அவர்கள் பேசுவதில் மனம் பதியாமல் ஏதோ ஒரு நிலையில் இருந்தாள் அனன்யா.

"சேஃப்டி ரிசர்ச் இன்ஸ்டிட்யூட் இதுதான். உலகத் தரம் வாய்ந்த பாதுகாப்பு வசதிகள் இங்கே இருக்கின்றன."

"சுனாமியின் பொழுது இங்கே எந்தப் பாதிப்பும் இல்லை... அப்படித்தானே சுப்ரியா!"

"ஆமாம் அண்ணா... 2004ஆம் ஆண்டு சுனாமி தமிழகத்தைப் புரட்டிப் போட்டது. கிட்டத்தட்ட ஐம்பது பேர் கல்பாக்கத்தில் உயிரிழந்தனர் சுனாமியால். சுனாமி மெமோரியல் ஒன்று கல்பாக்கத்தில் உள்ளது.

"ஆனால் அணுமின் நிலையம் சேதம் அடைந்து விட்டது என்று ஒரு வதந்தி பரவியது... சுனாமியின் பொழுது. அது வெறும் வதந்தியே. எந்தச் சேதமும் இல்லாமல் அணுமின் நிலையம் மூடப்பட்டது, சுனாமி வந்த பொழுது.

பின்பு கொஞ்ச நாட்களுக்குப் பிறகு பழைய நிலைமைக்கு வந்தது அணுமின் நிலையம்."

"ஆமாம்... இப்பொழுது கல்பாக்கத்தில் உள்ள கடற்கரையில் சுனாமியிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக நிறைய மரங்களை வளர்க்கிறார்கள். அதோடு பெரிய சுவர் ஒன்று உள்ளது. சுனாமியிலிருந்து ஊர் மக்களைக் காப்பாற்ற... அதனால் எந்தப் பயமும் இல்லை."

"அனன்யா... நீ என்ன எதுவுமே பேசாமல் வருகிறாய். உனக்கு இதெல்லாம் பிடிக்கவில்லையா?" என்றாள், சுப்ரியா.

"ம்... எனக்கு இந்த இடம், அப்புறம் நீங்கள் சொல்லும் தகவல்கள் எல்லாமே ரொம்ப பரிச்சயமானதாகத் தோன்றுகிறது..." என்றாள் மெல்லிய குரலில்.

"அனன்யா... உனக்கு இதைப் பற்றி வேறு என்ன விஷயங்கள் நினைவுக்கு வருகிறது? கமான்... யோசித்துப் பார். நீ ஒருவேளை இந்த மாதிரியான இடத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்து இருப்பாயோ?"

"ம்... அதுதான் நானும் யோசிக்கிறேன். பட்... என்னால் ரொம்பத் தெளிவாக எதையும் சொல்ல முடியவில்லை. நான்... நான்... எனக்குத் தலை வலிக்கிறது. எ... எனக்கு மயக்கமா..." என்று சொல்லி முடிப்பதற்குள் அவள் கால்கள் தள்ளாடின.

எல்லாமே அவள் கண்களுக்கு மங்கலாகத் தெரிந்தன.

"காட்... அநன்யா!" என்று பதறியபடியே அவளைத் தூக்கினான் அபிஷேக்.



"அண்ணா... எ... என்ன இது...! பாவம்... இந்த மாதிரி எல்லாம் ஆகும் என்று தெரிந்திருந்தால் நான் இவளை... இங்கே அழைத்துக் கொண்டே வந்திருக்க மாட்டேன்!" என்று பதறினாள் சுப்ரியா.

"சுப்ரியா! பதட்டப்படாதே. டிரைவரைக் கூப்பிடு. காரை இங்கே உடனே எடுத்துக் கொண்டு வரச் சொல். சீக்கிரம்... நாம் உடனே இவளை வீட்டிற்கோ... இல்லை... அத்வித்தின் ஹாஸ்பிடலுக்கோ அழைத்துச் செல்ல வேண்டும்!" என்று அவளை அவசரப்படுத்தினான் அபிஷேக்.

தன் கையில் மயங்கிக் கிடந்த அனன்யாவைக் கண்டு அவன் மனம் நொந்து போனது. பாவம்... என்ன பிரச்சனை என்று தெரியவில்லையே... இவளுக்கு!

என்ன காரணமாக இருக்கும்... இப்படி அடிக்கடி மயங்கி விழுவதற்கு? சே... கிளம்பும் பொழுது நன்றாக இருந்தாளே... எனப் பதறியது அவன் நெஞ்சம்.

கார் அவர்களை நோக்கி வருவது தெரிந்தது.

"ஸார்... பின்னாடி படுக்க வைங்க அவங்களை..." என்றபடியே டிரைவர் கார் கதவைத் திறந்தார்.

அநன்யாவைப் படுக்க வைக்க அவர் உதவி செய்தார்.

தன் மடியில் தலை வைத்துப் படுத்துக் கொண்டிருந்த அனன்யாவைப் பார்க்கப் பார்க்க அவன் மனம் துடித்தது. கடவுளே! நான் இதுவரை இந்த மாதிரி ஒரு உணர்வை அனுபவித்ததே இல்லை.

இவள் மேல் எனக்குத் தோன்றும் இந்த உணர்விற்கு என்ன பெயர்...? என் மனம் ஏன் இப்படி அலை மோதுகிறது? - யோசிக்கத் தொடங்கினான் அபிஷேக்.

# 19

அந்த
ஒற்றை
நிலவைப்
பார்க்கும்
பொழுது
உன்
நினைவு
என்
மனவானில்!
அந்த
ஒற்றை
ரோஜாவைப்
பார்க்கும்
பொழுது
உன் நினைவு!
உன்னைப்
பற்றிய
நினைவுகள்
சுகமாக
என் மனதில்
எப்பொழுதும்!

**ஹா**ஸ்பிடலில் இருந்து வீட்டுக்கு வந்தாள், அநன்யா. தான் யார் என்று தெரிந்தவுடன், மனம் உற்சாகத்தில் திளைப்பது இயல்பு.



இந்த அம்னீஷியா எனும் நோயின் பிடியிலிருந்து விடுபட்டு நான் மீண்டும் பழையபடி மாறியிருக்கிறேன்.

இது எவ்வளவு சந்தோஷமான விஷயம். ஆனால் நான் ஏன் இப்படிச் சோர்ந்து போய்... எதையோ பறிகொடுத்தது போல் இருக்கிறேன்.

சுய ஆராய்ச்சியில் ஈடுபட்டாள் அனன்யா. நான் சம்விதா. நான் இங்கே வந்தது அத்வித்தின் மனதை மாற்றுவதற்கு.

அப்பாவின் தலைமையில் இங்கே புதிய அணுமின் நிலையம் அமைக்கப்பட வேண்டும். அப்பாவின் நாற்பது வருட உழைப்பு அது.

அந்த உழைப்பு வீணாகக் கூடாது. அவர் லட்சியம் சிதைந்து போகக் கூடாது. அதற்காகத்தான் நான் இங்கே வந்தேன்.

நான் வந்த பேருந்து விபத்திற்குள்ளானது. அதனால் தான் இவ்வளவு குழப்பங்கள் இங்கே... அத்வித்தின் மனதில் இடம் பெற்று எப்படியாவது இந்த அணுமின் நிலையம் இங்கே வரச் செய்ய வேண்டும்.

அப்படி நினைத்துக் கொண்டுதானே நான் இங்கே வந்தேன். அந்தப் பேருந்தில் ஏறி அமர்ந்தேன். அப்பாவிடம் எப்படியாவது இந்த வேலையைச் செய்து முடித்துவிட்டு வருவேன் என்று தீர்மானமாகச் சொன்னேனே... இப்பொழுது நான் என்ன செய்வது?

அத்வித்தின் மனதில் சுப்ரியா இருக்கிறாள். அதே போல் சுப்ரியாவும் அத்வித் மேல் உயிரையே வைத்திருக் கிறாள்.

இவர்கள் அன்பு தழைக்க நானும் உதவி செய்திருக்கிறேன். சே! என் மனதில் உள்ள கீழ்த்தரமான எண்ணங்களைப் பற்றித் தெரிந்தால் அத்வித்தும், சுப்ரியாவும் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்?

அத்வித்தைக் காதலித்து... பின்பு அனுமின் நிலையம் வர அவன் தடை ஏதும் சொல்லா விட்டால்தான் திருமணம் என்று அவனை மிரட்டும் முடிவோடுதான் நான் இங்கே வந்தேன் என்று என்னைப் பற்றிய உண்மை எல்லாம் தெரிந்தால் அவர்கள் எல்லோரும் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்?

ச்சீ... இவ்வளவு கேவலமான புத்தியா உனக்கு? உன் லட்சியத்திற்காக... உன் பிடிவாதத்திற்காக... உன் குறிக்கோளிற்காக நீ என்ன வேண்டுமானாலும் செய்வாயா?

அவ்வளவு மோசமான பெண்ணா நீ... என்று முகத்தில் காறித் துப்ப மாட்டார்களா? அதை என்னால் எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்?

எல்லாவற்றுக்கும் மேலாக அபிஷேக்... அவன் என்னை எவ்வளவு கேவலமாக நினைப்பான்?

அபிஷேக்... நான் என் மனதை உங்களிடம் பறிகொடுத்து விட்டேன். இது எப்படி நடந்தது? ஏன் நடந்தது? - என்ற கேள்விக்கெல்லாம் என்னிடம் பதில் இல்லை.

ஆனால் நீங்கள் உண்மை தெரிந்தால் என்னைப் பற்றி ரொம்ப அசிங்கமாக நினைப்பீர்கள். என்ன வேண்டுமானாலும் செய்வாள் இவள்... என உங்கள் மனதில் என்னைப் பற்றி ஒரு எண்ணம் உருவாகும்.



இதிலிருந்து நான் தப்ப வேண்டும். இதிலிருந்து நான் மொத்தமாகத் தப்ப வேண்டும். எப்படி? என்ன செய்வது?

அவசரமாக யோசித்தாள். சட்டென மூளையில் ஒரு பொறி எட்டிப் பார்த்தது. அவள் மனதில் ஒரு தெளிவு பிறந்தது.

நினைத்ததைச் செயல்படுத்த வேண்டும் என்று அவள் மனம் அவளை அவசரப்படுத்தியது. மனதில் தோன்றியதை வார்த்தைகளாகக் கடிதம் மூலம் எழுதினாள் அவள்.

கடிதத்தைக் கண்ணில் படுமாறு அறையில் இருந்த டீப்பாய் மேல் வைத்தாள். பின்பு தன் அறையை விட்டு வெளியேறினாள்.

"ஏதாவது வேண்டுமா, அநன்யா?" என்றபடியே அவளை நோக்கி வந்தாள் மீனா.

"ஆன்ட்டி! மத்தவங்க எல்லாம் எங்கே? வீடே அமைதியா இருக்கு..."

"ம்... அத்வித்தும் சுப்ரியாவும் திருமணத்துக்குத் தேவையானதை வாங்கப் போயிருக்காங்க. நகை மட்டும் வாங்கிட்டு வருவாங்க. துணி எல்லாம் அப்புறம் இன்னொரு நாள் வாங்குவாங்க.

"எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு... அனன்யா! நீ வந்த பிறகுதான் இந்த மாதிரி நல்ல விஷயங்கள் எல்லாம் வீட்டில் நடைபெறுகிறது.

"அத்வித்திற்குப் பெண்கள் என்றாலே... ஏன் இப்படி ஒரு அலர்ஜி என்று நான் நினைத்துக் கொண்டிருந்தேன். அவன் சுப்ரியாவை விரும்பியது எனக்குத் தெரியவே தெரியாது.

சுப்ரியாவும் இங்கே கல்பாக்கத்தில் உள்ள அணுமின் நிலையத்தில் உள்ள ஈ.டி.பி. டிபார்ட்மெண்டில் வேலைக்கு அப்ளை செய்திருக்கிறாள்.

கண்டிப்பாக அவளுக்குக் கிடைத்து விடும். அதன் பின்பு இருவரும் இங்கேயே செட்டில் ஆகிவிடுவார்கள்."

"ம்... ரொம்ப நல்ல விஷயம். கேட்கவே இனிமையாக இருக்கிறது ஆன்ட்டி!

"டாக்டர் ஸாரும், சுப்ரியாவும் ஒருவரை ஒருவர் ஆழமாக நேசித்தார்கள். இருவருக்கும் இடையே பிரச் சனையே அவரவர் வேலைதான்... அதுதான் அவர்களைச் சேர விடாமல் தடுத்து வந்தது. இப்பொழுது ஒரு வழியாகப் பிரச்சனை தீர்ந்தது. என் மனம் ரொம்ப நிம்மதியாக இருக்கிறது... ஆன்ட்டி!" என்றாள் உற்சாகமாக அனன்யா.

"சுப்ரியாவிற்கு உன் மேல் பிரியம் அதிகம் அனன்யா. நீ இங்கே இருந்தது அவளுக்கு ரொம்பப் பிடித்தது.

"முதலில் உன் மேல் அவளுக்குக் கோபம், பொறாமை எல்லாமே ஏற்பட்டது என்னவோ உண்மை. ஆனால் அப்புறம் எல்லாமே மாறிவிட்டது."

"ம்... டாக்டர் ஸார் மீது எனக்கு அந்த மாதிரி எண்ணம் ஏதும் இல்லை என்று தெரிந்தவுடனேயே சுப்ரியாவின் மனம் மாறி விட்டது.

"என்னிடம் ரொம்ப அன்பாக நடந்து கொண்டார்கள். அவர்களுக்கும் அத்வித் ஸாருக்கும் இடையே நான் இல்லை... என்று தெரிந்த பின்பு அவர்கள் மனம் இளகி விட்டது!" என்றாள் அநன்யா.



"ஆமாம்... அநன்யா! அவளுக்கு அத்வித் மேல் ரொம்ப ஆழமான அன்பு. நல்ல பெண்."

"ம்... சரி! அபிஷேக் ஸார் எங்கே ஆன்ட்டி?"

"ஏன்... அவன் இல்லாவிட்டால் உனக்குப் போர் அடிக்கிறதா, அநன்யா!"

அநன்யாவின் முகத்தில் செம்மை படர்ந்தது. ஏதும் சொல்லாமல் தலை குனிந்தாள்.

"ஆன்ட்டி... கிண்டல் வேண்டாம். அவர் எங்கே?"

"மிஷின் ஏதோ வாங்க வேண்டும் என்று டெல்லி வரை போயிருக்கான்."

"ஓ... என்ன மிஷின்?"

"ம்... காய் எல்லாம் அழகாக்க் கட் செய்து கொடுக்குமாம்... அந்த மிஷின். ஜெர்மனியிலிருந்து அந்த மிஷினை இறக்குமதி செய்திருக்கிறார்கள் போல...

"காய்கறிகள் மற்றும் பழங்கள் எல்லாவற்றையும் நம் தேவைக்கேற்ப அழகாக வெட்டிக் கொடுக்குமாம். அதை அப்புறம் பிளாஸ்டிக் கவரில் போட்டு ஸீல் செய்து, வீடு களுக்கு டெலிவரி செய்யலாமாம்.

"ம்... விஞ்ஞானம் எவ்வளவு தூரம் முன்னேறி விட்டது. ஆச்சரியமாக இருக்கிறது. இன்னும் கொஞ்ச நாளானால் டாக்டர் செய்யற ஆபரேஷனுக்குப் பதிலாக ஏதாவது மிஷினே ஆபரேஷனைச் செய்து விடும் போல..."

"நீங்க சொல்றது இப்பவே இருக்கு, ஆன்ட்டி!"

"அப்படியா!"

"ஆமாம் ஆன்ட்டி... ஒரு இருதய ஆபரேஷன் செய்வதற்கு ஒரு ரோபோ... ரொம்ப உதவி செய்ததாம். ஆபரேஷன் வெற்றிகரமாக முடிந்ததாம்."

"ம்... இதெல்லாம் உனக்கு ஞாபகம் இருக்கு, அநன்யா... தேவலையே!"

எனக்கு... என்னைப் பற்றிய எல்லாமே நினைவுக்கு வந்து விட்டது என்று சொல்லத் துடித்த உதடுகளை அடக்கினாள், அநன்யா. இவ்வளவு நல்ல உள்ளம் படைத்தவர்களை ஏமாற்றுகிறோமே என்று அவள் மனம் துடித்தது. 'இவர்களிடம் எல்லாவற்றையும் சொல்லி விடலாமா என்று அவள் மனதில் சஞ்சலம் தோன்றியது.

"என்ன அநன்யா... ஏன் முகம் வாடிவிட்டது? உனக்குச் சீக்கிரமாகவே பழைய நினைவுகள் திரும்பி விடும். கவலைப்படாதே.

"அத்வித் கூட அப்படித்தான் சொன்னான். உனக்கு அடிக்கடி மயக்கம் வருவது நல்ல அறிகுறிதானாம். அதனால் நீ அனாவசியமாகப் பயப்பட வேண்டாம்... என்ன நான் சொல்வது புரிகிறதா?"

"ம்... தேங்க்ஸ் ஆன்ட்டி! உங்களுக்கும் டாக்டர் ஸாருக்கும் நான் ரொம்பக் கடமைப்பட்டு இருக்கிறேன். நீங்கள் இல்லாவிட்டால் என் நிலைமை என்ன ஆகியிருக்கும் என்று நினைக்கவே எனக்குப் பயமாக இருக்கிறது."

"அட... என்ன அநன்யா... இதுக்குப் போய் தேங்க்ஸ் எல்லாம் சொல்றே! என் நிலைமையில் யாராக இருந்தாலும் இதைத்தான் செய்திருப்பார்கள்..."



"ஆன்ட்டி... எனக்கு அவசரமாக ஒரு உதவி நீங்கள் செய்ய வேண்டும். எனக்குக் கொஞ்சம் பணம் வேண்டும். அபிஷேக் ஸார் ஒரு வேலை கொடுத்திருக்கிறார். அது பற்றித் தெரிந்து கொள்ள எனக்குச் சில புத்தகங்கள் வாங்க வேண்டும். அதற்காகத்தான்... நான் பணம் கேட்கிறேன்."

"ஓ... அப்படியா! இதுக்கு ஏன் இப்படித் தயங்கித் தயங்கிக் கேட்கிறாய், அனன்யா!

"நீ இந்த வீட்டுப் பெண். நீ உரிமையாகக் கேட்கலாம்... சரியா?" என்றபடியே அறையினுள் சென்றாள் மீனா.

திரும்பி வந்தவளின் கையில் ஆயிரம் ரூபாய்க் கத்தை ஒன்று இருந்தது.

"இந்தா... அனன்யா!" – என்று அவளிடம் நீட்டினாள் மீனா.

"ஆன்ட்டி! எனக்கு இவ்வளவு பணம் வேண்டாம். ஐந்நூறு ரூபாய் போதும். அதற்கு மேல் தேவைப்படாது. ப்ளீஸ்... ஐந்நூறு ரூபாய் மட்டும் கொடுங்க..."

"அட வெச்சுக்கோ... அனன்யா! புத்தகம் விலை முன்ன பின்னே இருந்தால் என்ன செய்வாய்?"

அநன்யாவின் மனச்சாட்சி அவளைக் கொல்லாமல் கொன்றது.

'கடவுளே! இவர்களை நான் ஏமாற்றுகிறேனே... சே! என்ன கொடுமை இது!' என்று தன்னையே கடிந்து கொண்டாள்.

"தேங்க்ஸ் ஆன்ட்டி. நான் கிளம்பறேன்..."

"சரி... அநன்யா! எப்படிப் போகப் போகிறாய்?"

"வந்து... வந்து... பஸ்ஸில்தான் போகப் போகிறேன், ஆன்ட்டி!"

"அச்சோ... அதெல்லாம் வேண்டாம். காரிலேயே போ அனன்யா... நான் டிரைவரிடம் சொல்கிறேன்."

"எதுக்கு ஆன்ட்டி அதெல்லாம்..." என்று பதறினாள். தன் குட்டு வெளிப்பட்டு விடுமோ என்ற பயம் அவளுக்கு.

"இல்லை அநன்யா... நீ காரில் போவதாக இருந்தால் போ. இல்லாட்டி அத்வித் வந்தவுடன் போ..." என்றாள் கண்டிப்பான குரலில் மீனா.

"சரி, ஆன்ட்டி... நான் நீங்க சொல்றபடியே கேட்கிறேன். காரிலேயே போகிறேன்."

"சரி... பார்த்துப் போயிட்டு வா."

"சரி... ஆன்ட்டி!"

காரில் உட்கார்ந்தவளின் மனம் கனத்தது. கண்கள் கலங்கின. மீனாவின் வெகுளித்தனத்தை நான் எனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறேனே... சே...! என்று தன்னையே கடிந்து கொண்டாள் அவள்.

"மேடம்! எங்கே போகணும்?"

"ம்... திருவான்மியூர் போகணும்."

"சரிங்க மேடம்!"

"இங்க இருந்து போய்ச் சேர எவ்வளவு நேரம் ஆகும்?"



"கிட்டத்தட்ட எழுபது கிலோ மீட்டர்... மேடம்! ரெண்டு மணி நேரத்துக்குள்ள போயிடலாம். சீக்கிரமாப் போகணுமா மேடம்?"

"இல்லை... இல்லை... நீங்கள் வழக்கமாகப் போகும் வேகத்திலேயே போங்க. அவசரம் ஏதும் இல்லை!"

"சரிங்க மேடம்!"

அடுத்த இரண்டு மணி நேரம் அநன்யா எனும் சம்விதா அமைதியில் மூழ்கினாள்.

கார் சென்னையைத் தொட்டது.

அவள் மனம் சிலிர்த்தது. சென்னையை விட்டு ரொம்ப வருடம் பிரிந்தது போல் ஒரு உணர்வு தோன்றுகிறதே... அது ஏன்?

அப்பாவிடம் நான் என்ன சொல்வது? அப்பாவின் முகத்தைப் பார்க்க எனக்குச் சக்தியே இல்லையே... அப்பாவிடம் நான் எப்படிப் பேசப் போகிறேன்?

நான் தோற்று விட்டேன் அப்பா... என்று சொல்ல வேண்டுமே... கடவுளே! இது என்ன அவஸ்தை! இதற்குத் தீர்வே இல்லையா? யோசித்தாள் அவள்.

"இன்னிக்கு என்ன தேதி?"

"இன்னிக்கு டிசம்பர் ஆறு மேடம்!"

"'ஓ... ஆறா!'

இது என்ன கோயின்சிடென்ஸ். நான் அப்பாவிடம் சபதம் போட்டு விட்டுச் சென்னையை விட்டுக் கிளம்பிச் சரியாக மூன்று மாதங்கள் முடிந்து விட்டன.

மூன்று மாதங்கள் கழித்துத்தான் என்னைத் தொடர்பு கொள்ள வேண்டும் என்று அப்பாவிடம் சொன்னது அவள் நினைவுக்கு வந்தது.

அவளை அறியாமல் ஒரு பெருமூச்சுப் பிறந்தது.

## 20

கோபத்தில்
வார்த்தைகள்
தெறித்தன!
............
உன்
முகத்தில்
சோகம்
ஏமாற்றம்
பரிதவிப்பு
எல்லாமே
தெரிந்தன,
கலவையாக!
............
அதற்குப்
பின்பு
உன்னைச்
சந்திக்கும்
துணிவு



எனக்கு
இல்லை!
............
ஆனால்
உன் முகம்
துரத்துகிறது...
என்னை!

அன்று கல்லூரி மாணவர்களுக்கு லெக்சர் எடுத்து முடித்து விட்டு ஸ்டாஃப் ரூமை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தாள் சம்விதா.

அன்று எம்.பி.ஏ. மாணவர்களுக்கு லெக்சர் எடுத்த டாபிக் 'மையர்ஸ் பிரிக்ஸ்'.

அதைப் பற்றிப் பாடம் எடுக்கும் பொழுது ஏனோ அவள் மனம் அபிஷேக்கையே சுற்றிச் சுற்றி வந்தது. இன்று மட்டும் இல்லை... அவன் நினைப்பு... அவன் முகம்... அவன் பேச்சு... இவை எல்லாமே அவளை அடிக்கடி அலைக்கழித்தது.

கல்பாக்கத்தை விட்டுச் சென்னை வந்து ஒரு மாதம் மேல் ஆகிவிட்டது. நாட்கள் எவ்வளவு வேகமாக ஓடுகின்றன என்று நினைத்தபடியே ஸ்டாஃப் ரூமில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்தாள் அவள்.

வழக்கத்திற்கு விரோதமாக அன்று ஸ்டாஃப் ரூம் காலியாக இருந்தது. ஓ! முதலாம் ஆண்டு ஸ்டூடண்ட்ஸிற்கு எக்ஸாம் நடக்கிறது... அதனால் மற்ற எல்லா ஸ்டாஃப்ஸும் இன்விஜிலேஷனில் பிஸியாக இருக்கிறார்கள் போல எனத்

தனக்குள்ளேயே பேசியபடியே அங்குள்ள புத்தகத்தில் மூழ்கினாள்.

ஸ்டாஃப் ரூமில் இருந்த இன்டர்காம் ஒலி அவளைப் புத்தகம் மேற்கொண்டு படிக்க முடியாமல் தடையாக இருந்தது.

"ஹலோ... சம்விதா ஹியர்!"

"மேடம்! உங்களைத் தேடி விசிட்டர் ஒருத்தர் வந்திருக்கிறார்."

"அப்படியா! நான் யாரையும் வரச் சொல்ல வில்லையே...!"

"ம்... ரொம்ப முக்கியமான விஷயமாம் மேடம்...! உங்களைக் கண்டிப்பாகப் பார்க்கணுமாம்..."

"ஓ... சரி. நான் அங்கு வருகிறேன். விசிட்டர் பெயர் என்ன மேகலா?"

"ம்... பெயர் அனந்த்... மேடம்!"

"சரி... நான் அங்கே வருகிறேன்!" - என்றபடியே ரிசீவரை வைத்தாள்.

யாராக இருக்கும் என்று யோசித்தபடியே ரிசப்ஷனை நோக்கி நடந்தாள். ரிசப்ஷனில் இருந்த சோபாவில் உட்கார்ந் திருந்தவனைப் பார்த்துச் சன்னமாக அதிர்ந்தாள் அவள்.

"ஹாய் அநன்யா...!" என்றான் அபிஷேக்.

"நான்... நான்... உங்களுக்கு எப்படி நான் இங்கே இருக்கிறேன் என்று தெரியும்?" என்றாள், திக்கித் திணறிய படியே.



"நான் உன்னுடன் பேச வேண்டும். வா, வெளியே போய்ப் பேசலாம். அதனால்தான் அனந்த் என்று பொய் சொன்னேன்..." என்று அவள் கைமணிக்கட்டைச் சுவாதீன மாகப் பற்றினான் அபிஷேக்.

"நான் எங்கேயும் வரத் தயாராக இல்லை... உங்க ளுடன்!" என்றபடியே கையை விடுவித்துக் கொள்ள முயன்றாள்.

"ஏன்... வர முடியாது?"

"எனக்கு வேலை இருக்கு. கிளாஸ் எடுக்கணும்..."

"நான் வேண்டுமானால் உன் ஹெச்.ஓ.டி.யிடம் பேசுகிறேன். கண்டிப்பாக உனக்குப் பர்மிஷன் கிடைக்கும்!" என்றபடியே ரிசப்ஷனைத் தாண்டி உள்ளே நுழையப் போனான் அபிஷேக்.

"ஏய்... என்ன இது?" என்று அவன் கையைப் பற்றினாள் சம்விதா.

"தட்ஸ் குட். வா, வெளியே போய்ப் பேசலாம்."

"நமக்குள் பேச ஒன்றும் இல்லை. நான் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பெண் கிடையாது. என்னுடன் பேசி... ஏன் உங்கள் நேரத்தை வீணாக்குகிறீர்கள்?" என்றாள் குத்தலாக.

அவன் முகம் இறுகியது.

"ம்... சொன்னாலும் சொல்லாவிட்டாலும் நீ நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பெண் இல்லைதான்!" என்றான், அழுத்தமாக.

அவள் முகம் கோபத்தால் சிவந்தது.

"தெரிந்தும்... ஏன் என்னைத் தேடிக் கொண்டு வந்தீர்கள்?" சீறினாள் அவள். அவளை அறியாமல் அவள் குரல் உயர்ந்தது.

"உன் ஸ்டூடன்ட்ஸ் முன்பு தான் நாம் சண்டை போட வேண்டுமா? எனக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை. உனக்குச் சரி... என்றால் எனக்கும் சம்மதமே!"

ரிசப்ஷனுக்கு முன்பு இருந்த நோட்டீஸ் போர்டைப் பார்க்கும் சாக்கில் காலேஜ் மாணவர்கள் தங்களைச் சுவாரசியமாக வேடிக்கை பார்ப்பதைக் கவனித்தாள், சம்விதா.

"போ... உன் கைப்பையை எடுத்துக் கொண்டு வா. உனக்குப் பத்து நிமிடங்கள் டைம் தருகிறேன். சொல்ல வேண்டியவர்களிடம் சொல்லி விட்டுச் சீக்கிரமாக வா..." என்றான் தணிந்த குரலில் அபிஷேக்.

ஸ்டாஃப் ரூமிற்குள் சென்ற சம்விதா இண்டர்காம் மூலம் ஹெச்.ஓ.டி.யைத் தொடர்பு கொண்டாள்.

"குட் மார்னிங் ஸார்... நான் சம்விதா பேசறேன்."

"குட் மார்னிங்... சம்விதா!"

"ஸார்... ஒரு எமெர்ஜென்சி. அதனால் நான் இப்ப போக வேண்டும்... இன்று எனக்கு வேறு எந்தப் பீரியட்டும் இல்லை."

"ம்... ஓ.கே. சம்விதா! நாளைக் காலேஜ் வருவாய் தானே!" என்றவரின் குரலில் கிண்டல் தொனித்தது.

"ம்... வருவேன் ஸார்! ஏன் ஸார் உங்களுக்குச் சந்தேகம்?"



"ம்... ரிசப்ஷனில் நடந்ததை நான் வெப்-கேம் மூலமாகப் பார்த்தேன்.

"யார் சம்விதா... அந்த ஹாண்ட்ஸம் பெர்ஸன். ஏதோ சுவாரசியமாக நடக்கப் போகிறது என்று என் உள்ளுணர்வு கூறுகிறது."

சம்விதாவின் முகம் சிவந்தது. என்ன பதில் சொல்வது என்று திகைத்தாள். தன்னைச் சமாளித்துக் கொண்டு பேசினாள்.

"ம்... அப்படி எல்லாம் ஏதும் இல்லை ஸார்! ஹி இஸ் மை ஃபிரெண்ட். அவ்வளவுதான்!"

"ஓ... வெறும் ஃபிரெண்ட் தானா? பொய் சொல்ல ஆரம்பித்து விட்டாய், சம்விதா! உன் மனதில் கள்ளம் புகுந்து விட்டது.

"சரி... சரி... அபிஷேக்கின் பொறுமையை நான் சோதிக்க விரும்பலை. சீக்கிரமாக் கிளம்பிப் போ. நாளை நல்ல செய்தியுடன் வா!" என்றார் சிரித்தபடியே அவர்.

"தேங்க்ஸ் ஸார்!" என்று ரிசீவரை வைத்தவள்... திகைத்தாள்.

அபிஷேக் என்று பெயரைச் சொன்னாரே... இவருக்கு எப்படி இவன் பெயர் தெரிந்தது... என்று யோசித்தபடியே கைப்பையை எடுத்துக் கொண்டு... ரிசப்ஷன் நோக்கி நடந்தாள்.

"சரியாகப் பத்து நிமிடங்கள் ஆக... இன்னும் நாற்பது விநாடிகள் இருக்கு. குட்... கரெக்டாக வந்து விட்டாயே!"

"ஆமாம்... பெரிய ராக்கெட் லாஞ்ச் செய்யப் போறே பார்... நீ! இவ்வளவு துல்லியமாக டையத்தைப் பார்க்கிற துக்கு?"

"நான் இவ்வளவு பதட்டமாக இருந்ததே கிடையாது என் வாழ்க்கையில்..."

"ம்... உனக்கு அடுத்தவர்களைப் பதட்டப்படுத்தித் தானே பழக்கம்?"

"என்ன செய்வது... ஒரு மோகினி என்னை ரொம்பவே பதட்டப்படுத்தி விட்டாள்."

அதைக் கேட்டவுடன் அவள் முகம் அவளை அறியாமல் சிவந்தது.

"அவளுக்கு என்ன தண்டனை தரலாம், அனன்யா?" என்றான், உல்லாசமாகச் சிரித்தபடியே அபிஷேக்.

"லுக்... சொல்ல வந்ததைச் சீக்கிரமாகச் சொல் லுங்கள்."

"சரி... ஏன் அப்படி அவசர அவசரமாகச் சொல்லாமல் கொள்ளாமல் வீட்டை விட்டு ஓடி வந்தாய்?"

அவள் மௌனமாக இருந்தாள். என்ன பதில் சொல்வ தென்று தெரியாமல் திணறினாள். "நான் கடிதம் எழுதி வைத்து விட்டுத்தான் வந்தேன்."

"ம்... அந்தக் கடிதத்தினால்தான் நீ எங்கே இருக் கிறாய்... என்று என்னால் கண்டுபிடிக்க முடிந்தது."

"ஆனால்... நான் கடிதத்தில் வரப் போகும் இடத்தைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லையே... எப்படி உங்களுக்கு இந்த இடம் தெரிந்தது?"



"ம்... நீ ஒரு மக்குத்தனமான வேலையை உன்னை அறியாமல் செய்திருந்தாய். அதுதான் எனக்கு உதவியாக இருந்தது... இங்கு வருவதற்கு!"

"எ... என்ன அது?"

"ம்... கடிதம் எழுதியிருந்தாய் அல்லவா... அதில் கையொப்பம் என்ன இருந்தது தெரியுமா? சம்விதா என்று கையெழுத்துப் போட்டு இருந்தாய்..."

"காட்! நான் என்னை அறியாமல் கடிதத்தில் அப்படி எழுதிவிட்டேன். ஆனால் என் பெயரை வைத்து எப்படி நான் வேலை பார்க்கும் இடத்திற்கு வந்தீர்கள்?"

"ம்... தேங்க்ஸ் டு ஃபேஸ்புக். நீ ஃபேஸ்புக்கில் ரிஜிஸ்டர் செய்திருக்கிறாய். அதனால் சம்விதா என்ற பெயரில் கணினியில் கூகுள் வழியாகத் தேடினேன். மொத்தம் மூன்று பேர்தான் சிக்கினார்கள்.

"என் அதிர்ஷ்டம் மூன்று பேருமே புகைப்படத்துடன் அவர்கள் பயோடேட்டாவைப் ஃபேஸ்புக்கில் பதிவு செய்திருந் தனர். அதனால் உன்னை அடையாளம் கண்டுபிடிப்பது ரொம்பவே சுலபமாக இருந்தது."

"சே... கடிதத்தில் என் பெயரைக் குறிப்பிட்டதால் தான் எல்லாத் தொல்லையும்..."

"உன் பெயர் ரொம்ப வித்தியாசமாக இருக்கிறது... அதுவும் இன்னொரு காரணம்."

"சரி... சொல்லுங்கள். டாக்டர் ஸார் எப்படி இருக் கிறார்? சுப்ரியா சந்தோஷமாக இருக்கிறார்கள் தானே! மீனா ஆன்ட்டியை நான் ரொம்ப மிஸ் செய்யறேன்."

"ம்... அவர்கள் எல்லாரையும் மட்டுமே நீ மிஸ் செய்கிறாய்... அப்படித்தானே!"

"யெஸ்!"

"நான் கொஞ்சம் கூட உன் மனதில் இல்லை. அப்படித்தானே!"

"கரெக்டாகச் சொல்லி விட்டீர்களே!"

"ம்... ஆனால் எனக்கு அப்படி இல்லை அனன்யா... ஐ மிஸ் யூ!"

"ஆச்சரியமாக இருக்கிறதே... நான் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பெண் இல்லை என்று இப்பொழுது கூட நீங்கள் சொன்னீர்கள். நீங்கள் என்னை மிஸ் செய்வது எனக்கு ரொம்ப ஆச்சரியமாக இருக்கு..."

"ம்... நான் அன்று உன்னை அப்படிப் பேசியது தவறுதான். நீ... நீ... அத்வித்துடன் நெருக்கமாக இருந்தது எனக்குள் ஏதோ ஒரு உணர்வைத் தூண்டியது.

"ஐ அம் ஸாரி. நான் அப்படிப் பேசி இருக்கக் கூடாது. ஆனால் இப்பொழுது உன்னை அப்படிச் சொல்வதற்குக் காரணம் உண்டு."

"என்ன அது?" - சீறினாள் அவள்.

"ம்... சொல்லாமல் கொள்ளாமல் ஓடி வந்தாய் அல்லவா... அதனால்தான் அப்படிச் சொன்னேன். என் நினைப்பே உனக்கு வரவில்லையா... அங்கிருந்து கிளம்பும் பொழுது..." - என்றவன் காரை ஓரமாக நிறுத்தினான்.

அவள் எதுவும் சொல்லாமல் மௌனமாக இருந்தாள்.



"சொல் அனன்யா... சொல்!" என்று அவள் முகத்தைக் கையில் ஏந்தினான்.

"இல்லை... அதெல்லாம் ஏதும் இல்லை..." என்றவள், அவன் கையைத் தட்டி விட்டாள்.

"உன் மனதில் நான் இல்லை. அப்படித்தானே!"

"ஆமாம்."

"சரி... நீ உண்மையை ஒத்துக் கொள்ளும்வரை நான் காரைக் கிளப்ப மாட்டேன்."

"இது என்ன... பைத்தியக்காரத்தனம்...?" என்றபடியே கார் கதவைத் திறக்க முயன்றாள்.

"இது சென்ட்ரல் லாக். நான் ரிலீஸ் செய்தால் தான் கதவு திறக்கும்."

"ஏன் இப்படிக் காட்டுமிராண்டித் தனமாக நடந்து கொள்கிறீர்கள்?"

"நான் என்ன உன் கையைப் பிடித்து இழுத்தேனா? இல்லை... ரோஜாப்பூ போல் அழகாக மென்மையாக இருக்கும் உன் இதழ்களைச் சுவைத்தேனா... இல்லை... படபடக்கும் உன் கண்களை என் உதட்டால் அமைதிப் படுத்தினேனா?

"மனதில் தோன்றியது எதுவும் செய்யாமல் கஷ்டப்பட்டு என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு ரொம்ப டீஸண்ட்டாக உன்னிடம் பேசிக் கொண்டிருக்கிறேன். என்னைப் போய்க் காட்டுமிராண்டி என்கிறாயே... இது ரொம்ப அநியாயம், மை டியர் மோகினி!"

அவன் சொன்னதைக் கேட்டு அவள் இதயம் படபடத்தது. அவளை அறியாமல் முகம் சிவந்தது.

“காரை எடுங்கள்...” என்றாள் கெஞ்சலாக.

“முடியாது மோகினி!”

“ஷட் அப். அப்படிக் கூப்பிடாதீர்கள்... என்னை!”

“நான் அப்படித்தான் கூப்பிடுவேன். இந்தச் சேலையில் நீ நிஜமாலுமே மோகினி போல்தான் இருக்கிறாய். கால் இருக்கிறதா, உனக்கு?” என்று கீழே குனிந்தான் அவன்.

அவள் அவனை எரித்து விடுவது போல் பார்த்தாள்.

## 21

நீயும்
நானும்
மட்டும்
ஒரு
உலகில்!
.........
மூங்கில்
காட்டிற்கு
நடுவே
.........
மயில்கள்
நடனமாட



குயில்கள்
இன்னிசைக்
கச்சேரி
நடத்த
கனாக்
கண்டேன்
தோழி!
தினம்
தினம்!

“சரி... உண்மையைச் சொல். ஏன் அப்படிச் சட்டுன்னு வீட்டை விட்டு ஓடி வந்தாய்?”

“ம்... எனக்கு நினைவு திரும்பி விட்டது. அதனால்தான்... அதற்கு மேல் நான் எல்லோருக்கும் சிரமத்தைக் கொடுத்துக் கொண்டு அங்கே இருக்க விரும்பவில்லை.”

“உன்னை யாருமே அங்கே எதுவும் சொல்லவில்லை. எல்லோருமே உன்னைத் தலையில் தூக்கி வைத்துத்தான் கொண்டாடினார்கள். அதனால் நீ சொல்வதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.”

“நம்புவதும் நம்பாததும் உங்கள் இஷ்டம்!”

“சரி.. நீ சொல்வதே உண்மை என்றே எடுத்துக் கொள்ளலாம். உன் வீட்டில் உன் அப்பா பார்த்திருக்கிற அமெரிக்க மாப்பிள்ளையை ஏன் வேண்டாம் என்று சொன்னாய்?”

அவள் முகத்தில் அதிர்ச்சி ரேகைகள் அப்பட்டமாகத் தெரிந்தன.

"ம்... பதில் சொல்."

"அது என்னோட பெர்சனல் மேட்டர். அதில் மூக்கை நுழைக்க உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை..." படபடத்தாள் அவள்.

"சரி... நம் திருமணத்தை எப்பொழுது வைத்துக் கொள்ளலாம், சொல்...?"

"வாட்?"

"கல்யாணம்... உனக்கும் எனக்கும் எப்பொழுது வைத்துக் கொள்ளலாம்?" - காது ஜவ்வு கிழியும்படி கத்தினான், அபிஷேக்.

"எனக்கு உங்களைத் திருமணம் செய்து கொள்ள இஷ்டம் இல்லை."

"ஓ... அப்படியா!" - உல்லாசமாகச் சிரித்தான். "உன் அப்பாவிடமே... இதைப் பற்றிக் கேட்கலாமே... வா... வீடு வந்து விட்டது..." என்றான் அவன்.

அவள் குழப்பத்துடன் அவனைப் பார்த்தாள். இவன் எப்படி இங்கு வந்தான்? என் வீடு இவனுக்கு எப்படித் தெரிந்தது?

கார் சப்தம் கேட்டு வெளியே வந்தார் தண்டபாணி. காரை நோக்கி வேகமாக ஓடி வந்தார்.

"வாங்க... வாங்க... சம்விதா! உள்ளே வா. உனக்கு ஒரு சர்ப்ரைஸ் இருக்கு."



"அப்பா... என்ன இது? இவரை உங்களுக்கு முன்னாடியே தெரியுமா?"

"தெரியும்... ஆனால் தெரியாது."

"அப்பா... குழப்பாதீங்க. ஒழுங்காப் பதில் சொல்லுங்க."

"இன்னிக்குத்தான் நான் இவரைச் சந்தித்தேன். ரொம்ப நாள் பழக்கம் கிடையாது என்று சொல்ல வந்தேன் சதா!"

கண்களில் குறும்பு மின்ன... இதழ்களில் புன்னகை ததும்ப... நடந்து வரும் அபிஷேக்கை அவள் பார்த்தாள். ஏதும் சொல்லாமல் வீட்டினுள் நுழைந்தாள்.

ஹாலில் இருந்த சோபாவில் மீனா, சுப்ரியா, அத்வித் எல்லோரும் உட்கார்ந்திருப்பதைப் பார்த்துத் திகைத்தாள்.

"வா... அனன்யா!" என்று ஓடி வந்து அவளை அணைத்துக் கொண்டாள் சுப்ரியா.

சுப்ரியாவின் கழுத்தில் இருந்த தாலிச் சரடை அவள் கவனித்தாள்.

"கங்கிராட்ஸ் சுப்ரியா!" - என்றாள், மெல்லிய குரலில்.

"ம்... தேங்க்ஸ். நீ கல்யாணத்தின் பொழுது இல்லாதது... எங்களுக்கெல்லாம் பெரிய குறை..."

"ஸாரி... நான் அவசரத்தில் அப்படிச் சொல்லாமல் கொள்ளாமல் ஓடி வந்துட்டேன். ஸாரி ஆன்ட்டி... ஸாரி... டாக்டர் ஸார்!"

"ம்... நான் இவ்வளவு நேரம் கரடியாகக் கத்தினேன். என்னிடம் எதுவுமே சொல்லவில்லை... ஸாரி எல்லாம்.

சே... சே... இதெல்லாம் ரொம்ப மோசம்!" என்று பொய்யாகக் கோபப்பட்டான் அபிஷேக்.

"நீ வேறு... நாங்கள் எல்லாம் வேறு..." என்றான் அத்வித் சிரித்தபடி.

"அப்படியா அனன்யா... நான் உனக்கு ஸ்பெஷலா என்ன?"

அவள் மௌனமாக இருந்தாள்.

"ம்... பதில் சொல் அனன்யா!" என்றாள் சுப்ரியா.

"அப்படி எல்லாம் ஏதும் இல்லை..." என்றாள், மெல்லிய குரலில்.

"அப்புறம்... ஏன் சதா தூக்கத்தில் அபிஷேக்... அபிஷேக்... என்று புலம்பினாய்?" என்றார் தண்டபாணி.

அவள் முகம் சிவந்தது. அங்கே சிரிப்பலை பரவியது. சட்டெனத் தன் அறைக்குள் ஓடினாள் சம்விதா.

கதவைச் சாத்தித் தாழ் போட முயன்றாள். ஆனால் அதற்குள் அபிஷேக் உள்ளே நுழைந்து விட்டதால்... ஏதும் செய்ய முடியாமல் திகைத்து நின்றாள் சம்விதா.

அவள் கண்கள் கலங்கின. அழுகையைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

"ஸாரி சதா... ப்ளீஸ் நான் சொல்வதைக் கேள்."

"போதும்... எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு எனக்கு எதிராகப் பேசுகிறீர்கள். நீங்கள்தான் இப்படி எல்லாம் நடப்பதற்குக் காரணம்.



"என் அப்பா கூட என்னைக் கேலி செய்கிறார்!" என்று கையை முகத்தில் மூடிக் கொண்டு அழத் தொடங்கினாள்.

"சதா! நோ... வேண்டாம். அழாதே ப்ளீஸ்!" என்றபடியே அவள் அருகே வந்தான் அபிஷேக்.

எப்படி அவன் மார்பில் வந்து ஒண்டிக் கொண்டோம் என்று புரியாமல் திருதிருவென விழித்தாள் சம்விதா.

"உன்னைப் பார்த்த முதல் சந்திப்பிலேயே.... நீ என் மனதைச் சலனப்படுத்தினாய், சதா! ஆனால் நீ அத்வித்துடன் வந்ததால் நான் உங்கள் இருவரையும் தப்பாக நினைத்து விட்டேன்."

"தெரியுமே... நீங்கள்தான் என்னைக் கேவலமாகப் பேசினீர்களே..." - என்றாள், கண்களில் இருந்து கண்ணீர் அருவி போல் வழிந்தபடியே, சம்விதா.

"ம்... அன்று மட்டும் இல்லை. நான் நிறையத் தடவை உன்னைப் புண்படுத்தி இருக்கேன். ஐ அம் ஸாரி. எல்லாவற்றுக்கும் காரணம் என் மனதில் தோன்றிய பொறாமைதான்.

"உன்னையும் அத்வித்தையும் இணைத்து என் மனக் கண்ணில் உருவகப்படுத்தியதுதான் என்னுடைய தப்பு..." என்றபடியே அவள் கண்களில் இருந்து வழிந்த கண்ணீரைத் துடைத்தான் அவன்.

"ம்... நீங்கள் செய்தது தப்பு கிடையாது!" என்று விசும்பினாள் அவள்.

அவன் முகம் அதிர்ந்தது.

"என்ன சதா... என்ன சொல்றே நீ?" - கோபமாக ஒலித்தது அவன் குரல்.

அவள் தலை குனிந்தாள்.

"சொல், சதா..." என்று அவள் தோளைப் பற்றி உலுக்கினான் அவன்.

"நான் கல்பாக்கத்துக்கு ஏன் வந்தேன் என்று தெரியுமா... உங்களுக்கு?"

"ஏதோ பயிற்சிக்காக நீ அங்கே வந்ததாக... உன் அப்பா சொன்னார்."

"இல்லை... அது பொய்."

"ஓ... அப்படியா! சரி... எது உண்மை? நீ சொல். ஏன் நீ கல்பாக்கம் வந்தாய்?"

"ம்... அப்பாவுக்குப் பாபா அணுமின் நிலையத்தில் வேலை. அவரின் அடுத்த புராஜெக்ட் கல்பாக்கத்தில்தான்... அது சம்பந்தமாகத்தான் நான் அங்கே வந்தேன். "

"பட்... எனக்கு இன்னமும் புரியவில்லை. உன் அப்பாவின் புராஜெக்ட்டிற்காக நீ ஏன் வந்தாய்?"

"கல்பாக்கத்தில் இன்னொரு அணுமின் நிலையம் தொடங்கப் போவதாக ஒரு பிளான் உள்ளது. அது உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும். கவர்ண்மென்ட் அதில் ரொம்பத் தீவிரமாக இருக்கிறது. ஆனால் கல்பாக்கத்தில் உள்ள மக்களுக்கு அதில் துளிக்கூட விருப்பம் இல்லை.

"அத்வித் உட்பட யாருக்கும் இதில் விருப்பம் இல்லை. எனக்கு அது தெரியும், சதா!"



"ம்... பிரச்சனையே அதுதான். அப்பாவின் எண்ணத்தில் உருவானது அந்தப் புராஜெக்ட். ஆங்கிலத்தில் பிரெயின் சைல்ட் என்று சொல்வார்களே... அதைப் போல் தான் அப்பாவுக்கு அந்தப் புராஜெக்ட்.

"அவரே ஒவ்வொன்றையும் தீர்மானித்து... யோசித்து... பார்த்துப் பார்த்து பிளான் செய்தார். அரசாங்கத்திடமிருந்து அந்த புராஜெக்ட்டுக்கு அப்ரூவலும் கிடைத்து விட்டது.

"அப்பா ரொம்ப சந்தோஷமாக இருந்தார். ஆனால் அந்தச் சந்தோஷம் ரொம்ப நாள் நீடிக்கவில்லை. காரணம்... கல்பாக்கத்தில் இருந்து கிளம்பிய எதிர்ப்பு அலை. அத்வித்தின் தலைமையில் மக்கள் அதை எதிர்க்கத் தொடங்கினார்கள்.

அப்பா கல்பாக்கத்துக்கு வந்திருந்தார். மக்கள் அத்வித் சொல்வதைத்தான் கேட்பார்கள் என்று அவருக்குப் புரிந்து விட்டது."

"அத்வித்திடம் அவர் பேசினாரா?"

"ம்... பேசினார். ஆனால்... அதனால் எந்தப் பயனும் இல்லை. அதனால்தான் நான் கல்பாக்கத்துக்கு வருவது என்று முடிவு செய்தேன்."

"ஆனால்... நீ வருவதால் இது எப்படிச் சரியாகும்?"

அவள் மௌனமாக இருந்தாள். கைவிரல்களின் நகங்களை ஆராய்ந்தபடி இருந்தாள்.

"சொல் சதா?"

"ம்... அத்வித்திடம் பேசி எப்படியாவது அவரைச் சம்மதிக்க வைத்து விடலாம் என்று நான் நினைத்தேன்.

காரணம் நான் பெண். அத்வித் ஸாரைத் திருமணம் செய்து கொள்ளக்கூட நான் தயாராக இருந்தேன்...” என்றாள் மெல்லிய குரலில்.

அங்கே மௌனம் பரவியது.

“என் மேல் எனக்கு நம்பிக்கை இருந்தது. என் அழகின் மேல் எனக்கு நம்பிக்கை இருந்தது!” என்றாள், தலை குனிந்தபடியே சம்விதா.

“நீ... இந்த எண்ணத்துடன்தான் வந்தாயா, சதா?”

“ஆமாம். ஸாரி... நான் உங்களிடம் எதையும் மறைக்க விரும்பவில்லை. அப்பாவின் அந்தப் புராஜெக்ட் எப்படியாவது நடக்க வேண்டும் என்பது என் விருப்பம்.

“அதனால் மற்ற எதுவும் எனக்குப் பெரிய விஷய மாகத் தெரியவில்லை.”

“சரி... அது நடந்து முடிந்து விட்டது. இனி, அதைப் பற்றிப் பேசுவதில் எந்தப் பயனும் இல்லை. நடக்கப் போவதைப் பற்றிப் பேசலாமா?”

“ம்... உங்களுக்கு என் மேல் கோபம் இல்லையா?”

“துளிக்கூட இல்லை. ஏன் நான் கோபப்பட வேண்டும்?”

“நான் செய்யத் துணிந்த காரியம்... இப்பொழுது நினைத்தால் எவ்வளவு மோசமானது என்று எனக்கே கோபம் வருகிறது... என் மேல்...!

“ஏதோ ஒரு வெறித்தனமான முடிவை நான் எடுத்து விட்டேன்.... அப்பொழுது. அது ரொம்பத் தப்பான எண்ணம். ஐ ஃபீல் வெரி சீப்!” என்றவளின் குரல் உடைந்தது.



“சதா... உன்னுடைய ஒரே எண்ணம் அப்பொழுது உன் அப்பாவின் புராஜெக்ட். அதனால் மற்றவை எல்லாம் உனக்குப் பெரிதாகத் தெரியவில்லை.

“அந்தப் புராஜெக்ட் நிறைவேற அத்வித்தின் உதவி தேவை. அதனால் அத்வித்தைச் சரிக்கட்ட உன்னிடம் இருந்த அழகான ஆயுதத்தை நீ உபயோகப்படுத்த நினைத் திருக்கலாம்.

“உன் நிலைமையில் இருந்து பார்த்தால் அதெல்லாம் சரிதான். இடையே விபத்து ஏற்பட்டதால் உனக்குப் பழ செல்லாம் மறந்து விட்டது. கெட்டதில் ஒரு நன்மை. அந்த விபத்து நடந்ததால்தான் நீ எனக்குக் கிடைத்தாய்.”

“எ... என்னது?”

“யெஸ்... சதா! நான் உன்னைத் திருமணம் செய்யத் துடிக்கிறேன். என்ன செய்தால் நீ சம்மதம் சொல்வாய்... சொல்!”

“எனக்குக் கில்டியாக இருந்தது. அதனால்தான் நான் சட்டென ஓடி வந்துவிட்டேன்.”

“ப்ளீஸ்... அதையே பிடித்துத் தொங்கிக் கொண் டிருக்காதே. அத்வித்திற்கும் சுப்ரியாவிற்கும் இப்பொழுது திருமணம் ஆகிவிட்டது. அதனால் நாம் அதைப் பற்றிப் பேச வேண்டாம்.

“அதோடு சுப்ரியாவையும் அத்வித்தையும் சேர்க்க நீ ரொம்பப் பாடுபட்டு இருக்கிறாய்... அதனால் நீ அவர்களுக்கு நல்லதுதான் செய்திருக்கிறாய்.”

“ம்... நீங்கள் சொன்ன பிறகுதான் எனக்கு இது புரிகிறது.”

"ம்... நீ கொஞ்சம் டியூப்லைட்தான். என்ன செய்வது? என் லக்... அவ்வளவுதான்!"

"ஆஹா... வேறு யாரையாவது... பளிச்சென எரியும் லைட் போல் இருப்பவர்களைப் பார்க்க வேண்டியதுதானே!"

"எனக்கு இந்த டியூப்லைட்டே போதும்!" என்றபடியே அவள் கையைப் பற்றினான் அவன்.

"ஹலோ! என்ன நடக்குது? நாங்கள் வரலாமா... உள்ளே?" என்று கதவுக்கு வெளியே சுப்ரியாவின் குரல் கேட்டது.

"சுப்ரியா! எல்லா விஷயத்திலும் உன் அண்ணி ரொம்ப டியூப்லைட். என் பாடு கஷ்டம்தான்! இவ்வளவு நேரம் இவளுக்கு விளக்கம் சொல்லிச் சொல்லி நான் மாய்ந்து போய் விட்டேன். வா... உள்ளே. கதவு திறந்துதான் இருக்கிறது."

"நான் டியூப்லைட்டா...!" என்று அவனை அடிக்கக் கையை ஓங்கினாள் சம்விதா.

உள்ளே நுழைந்தவர்கள் சிரிக்கத் தொடங்கினார்கள்.

சம்விதா முகம் சிவக்கத் தலை குனிந்தாள்.

அங்கே மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டு ஓடியது.